காற்றுவெளி

பங்குனி (2014) மாத இதழ்

கலை இலக்கிய இதழ்

காற்றுவெளி
பங்குனி *2014*

ஆசிரியர்:
ஷோபா

கணினியிடலும், வடிவமைப்பும்:
OVIYA PATHIPPAGAM
BATLAGUNDU - 624 202
TAMILNADU, INDIA.
phone: 04543 -26 26 86
cell:
766 755 711 4
96 2 96 52 6 52
email:
vathilaipraba@gmail.com
mahakavimonthly@yahoo.com

படைப்புக்களின் கருத்துக்களுக்கு ஆக்கதாரரே பொறுப்பு

படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி :

R. MAHENDRAN
34, REDRIFFE ROAD,
PLAISTOW,
LONDON E13 0JX

மின்னஞ்சல்:
[*mullaiamuthan@gmail.com*](mailto:mullaiamuthan@gmail.com)

வணக்கம்.

பங்குனி இதழுடன் சந்திக்கிறோம். வழமை போல படைப்பாளர்களின் படைப்புக்கள் வந்துசேர்ந்து பிரமிக்கவைக்கின்றன. கணினியிடலும்,வடிவமைப்பும் ஓவியா பதிப்பகத்தினர் செய்து எமக்குப் பெருமை சேர்க்கின்றன.இவ்வாண்டு காற்றுவெளி இலக்கியவிழா விமரிசையாக நடைபெற உள்ளது. உங்கள் சஞ்சிகைகள்/நூல்களின் ஒரு பிரதியினை காட்சிப்படுத்த உதவலாம். காற்றுவெளியில் பிரசுரமாகும் சிறுகதைகள்,கவிதைகள்,கட்டுரைகள் தனித்தனி நூலாகவும் வெளிவரவுள்ளன. மேலும், காற்றுவெளியை தங்களின் நண்பர்களுக்கு அறிமுகம் செய்துவைப்பதன் மூலம் தொடர்ந்து வெளிவர ஆரோக்கியமான சூழலை ஏற்படுத்தமுடியும்.காற்றுவெளியின் படைப்புக்கள் பல இடங்களில் பேசப்படுவது உற்சாகம் வருகிறது. அடுத்த சித்திரை இதழ் மூலம் சந்திப்போம்.

நட்புடன்
ஷோபா

காலாவதியான பாசங்கள்

குழந்தையாய் பேசி
குதுகலப்படுத்தினாய் அன்று...
இன்று வளர்ந்துவிட்டதாலா
மனதை வதைக்கிறாய்?

இந்த கொடும் வார்த்தைகளை
உனக்கு யார் கற்றுத் தந்தது?
உன்னோடு கைகோர்த்து
வஞ்சக எண்ணத்தை
சுவாசிக்கும் உன் நண்பர்களா?

அவர்கள் அன்போடு
உனக்கு ஊட்டுவது
அமுதம் அல்ல..
அதை நீ உணருவாய் மெல்ல!

இப்போதுகளில் ஆணவம் உன்னில்
ஆகோரத் தாண்டவம்
எடுத்துக்கொண்டிருப்பதால்
உண்மையான பாசத்தை
உன் மனம் ஏற்காது!

முட்கள் நிறைந்த பாதைகளில்
வந்தவனுக்குத் தெரியும்
முட்களின் கீறல்களும்
அதன் வேதனைகளும்!

ஆணவம் எனும் தாகத்தில்
உள்ள நீ
கானல் நீர் பொய் என்றால்
நம்பவா போகிறாய்?
தேன் சுவையை அறிந்தவனுக்கு
தேனைப் பற்றிய விளக்கம்
தேவையில்லை..
கலப்படம் செய்யப்பட்ட
தேனை சுவைத்துவிட்டு
நீ கசக்குது என்கிறாய்...

காலாவதியானாலும்
இனிப்பின் தன்மை
மாறாததால்
இனிப்புகளை தின்றுவிட்டு
நன்றாயிருப்பதாய் எண்ணுகிறாய்!

காலங்கள் கடக்கும்போது
அதன் விளைவுகள்
உன்னை மனநோவுக்கு உட்படுத்தும்!

அன்று...
நிச்சயமாக உனக்கு
ஆறுதல், அன்பு, நேசம் என்ற
மருந்தே கிடைக்கப்போவதில்லை
ஏன் என்றால
உண்மைகளை உதாசீப்படுத்திவிட்டு
நீ நல்லது என்று எண்ணியிருக்கும்
அனைத்தும் காலாவதியாகிவிடும்..
ஆமாம் நிச்சயமாகவே
காலாவதியாகிவிடும்!!!

வி. சந்திராதேவி, நமுனுகுல - இலங்கை

கூடாரம் நிறைதல்

- ஆதி பார்த்தீபன்

அழுகுணிப் பாப்பா
இந்த உலகத்துல ஒரு மனுசனுக்கு எரிச்சல் தாற வார்த்தை என்டு எனக்கு விளங்கும்
என்ன நீ அழுகுணிப் பாப்பாவே
அழுது கொண்டேயிருக்கிற உனக்கென்ன நடந்திச்சு
அது ஆது வந்து அம்மா அடிச்சுப் போட்டா
நீ என்ன குழப்படி செஞ்சனி அம்மா அடிக்கிற அளவுக்கு,
எனக்கிந்த முகாமில தாற பாணும் பருப்புக்கறியும் பிடிக்கேல,வேற சாப்பாடு வேணும் என்டதுக்கு...,
எனக்கு பருப்புக்கறி பிடிக்காது உறைக்குதுமில்ல ம்ம்.
இன்டைக்கு தானே பருப்புக்கறி நாளைக்கு பாணும் சம்பலும் போடுவினம் மத்தியானம் கஞ்சியும் வரும்,
எனக்கு கஞ்சியும் வேணாம் அதுக்குள்ள அன்டைக்கு தானே ஒரு ஆட்டுக்குட்டி விழுந்து செத்துப்போச்சாம்,
அது வேற கஞ்சி
ஆனா அந்த ஆட்டின்ட ஆவி என்ர வயித்துக்குள்ள பூந்திடுமே
சரி அத விடு ஆதி
நீ எங்கட வீட்ட சாப்பிறியா?
இல்ல எனக்கு வேணாம்
ஏன் எங்கட வீட்டயெல்லாம் சாப்பிடக் கூடாதென்டு அம்மா சொன்னவாவே
அப்பிடியில்ல நான் சாப்பிடமாட்டன் வயிறு முட்டிட்டு,
சரி அப்ப அந்த சுறாமுட்டய சாப்பிடு நல்லா இருக்கும்
இந்த சுறாமுட்ட என்டுறது எனக்கு புதுசுதான் பேசால முகாமில இருக்கேக்க சது

அக்கான்ர வீட்ட சாப்பிட்டதுக்கு பிறகு இன்டைக்கு மட்டும் சாப்பிடேல, அவாக்கு என்ன விட மூன்டு வயசு கூட எனக்கு அப்ப மூன்டு வயசு, வன்னில இருந்து யாழ்ப்பாணம் வாறதுக்காக பேசலை முகாமில இருந்தம்
தனித் தனிக் கூடாரம் ,ஒரு சின்ன இடம்
கீழ தறப்பாள் விரிச்சு போட்டிருப்பாங்கள் .சுத்திவர வேலி இருக்கும்,கருக்கு வேலி சில நேரம் குண்டு வெடிக்கும் தூரத்தில,
சில பேருக்கு பேயும் அடிச்சிருக்காம் எனக்கு பயம், பேயடிச்சா கன்னமெல்லாம் வீங்கிப் போடுமாம்,சிதல் கூட்டுமாம்
ஆறு மணிக்குள்ள சது அக்காவோட விளையாடிட்டு வந்திடோனும்,
அவாக்கொரு தம்பியும் இருக்கிறான் என்ர வயசு, நாங்க முகாமுக்கு வந்த காலத்தில இருந்தே அவன் சது அக்கா வீட்ட இல்ல
அவன்ர தலைக்கு கீழ பீஸ் பட்டிட்டாம் கொழும்பு ஆஸ்பத்திரிக்கு கொண்டு போட்டினமாம்,சது அக்காவும் அவான்ர அம்மம்மாவும் தான் இங்க இருக்கினம், நான் பின்னேரத்தில சது அக்காவீட்ட போவன்,அங்க நாங்கள் மணலில வீடு கட்டுவம்
அரண்மனை அகழி எல்லாம் கட்டுவம், சவுக்கு மரத்தின்ர இலயால பூந்தோட்டம் செய்வம்.செலைன் போத்திலும் இரண்டு வச்சிருக்கிறம், அதுல தண்ணி ஊத்தி விளையாடலாம், கோட்ட கட்டுறதுக்கு அந்த தண்ணி கட்டாயமா வேணும்,செலைனின்ட சில்லு சுத்தினா தண்ணி வேகமாயோ மெதுவாயோ வரும் அதவச்சு மணல் குழைச்சு செய்யலாம்.
அத விட குங்குமத்த கரைச்சு லஞ்சீற்றில சுத்தி அக்கா எனக்கு முந்திரியப்பழம் செஞ்சு தருவா,
அடுத்த நாள் பேச்சின்ட தொடக்கம் அந்த முந்திரியப்பழத்தின்ட சுவைய பற்றினதாத் தான் இருக்கும்,நான் விளையாடப் போகாட்டியும் அக்கா கூடாரத்துக்கு வந்திடுவா,
ஆதி நீ விளையாட வரமாட்டியே
இல்ல எனக்கு காய்ச்சல்,சரி எங்கட வீட்டில சுறாமுட்ட அவிச்சிருக்கிறம்,காய்ச்சல்காரங்கள் சாப்பிடக்கூடாதாம்,
இல்ல எனக்கு காய்ச்சல் மாறீட்டு
ஒருக்கா கழுத்த தொட்டுப்பாத்திட்டு சொன்னன் ம்ம் மாறீட்டு
தொட்டுப்பாரு காய்ச்சல் மாறீட்டு தானே
ஓம் மாறீட்டு சரி வா இன்டைக்கு நாங்க கோட்டய கட்டிமுடிச்சிடோனும்,
சரி வாறன் சுறா முட்ட இருக்குத்தானே
இல்ல இன்டைக்கு நாங்கள் வேண்டேல,
நான் வரமாட்டன்
நீ பொய் சொல்லிட்ட தானே, நான் உன்னோட கோவம் விரல குறுக்கா வெட்டி கோபத்தின்ர அடையாளத்த காட்டினன்,
அப்ப நீ வரமாட்டியா? நாளைக்கு அவிக்கச் சொல்லுறன் இன்டைக்கு வா,
இல்ல நான் கோவக்கட்டியளோட பேசுறேல
ம் அப்ப போ எங்கட தம்பி வந்துட்டான் நான் அவனோட விளையாடுவனே எனக்கு பொறாம வந்திட்டு
இல்ல நீ பொய் சொல்லுற காரொன்டும் வரேலயே நான் பாத்தனே,

அவன் பிளேனில வந்தான்
பொய் நீ பொய் பொய்யா சொல்லுற சரி நான் வாறன் காட்டு பாப்பம் உன்ர தும்பிய,
சரி வா
போனன் ஒருத்தருமில்ல
புளுத்தாங்கோழி பொய் சொல்லிட்ட ஒருத்தரும் வரேல
இல்ல பின்னேரம் வருவினம் அம்மம்மா சொன்னா,பிறகு நாங்க மூன்டுபேரும் சேர்ந்து விளையாடலாம்,
இல்ல நான் அவன் வந்தா வரமாட்டன் பிறகு இந்த கோட்டைக்கு அவன நீ அரசன் ஆக்கிடுவ நான் படையாளா நிக்கோனுமென்டுறது தானே உன்ர ஆச,
எனக்கு அரசனா இருக்கத் தான் பிடிக்கும்,
பரவாயில்ல நீ அரசனாவே இரு நாங்கள் உனக்கு சேவை செய்யிறம்
ம்ம் கம்பீரமா அதிகாரத் தொனியோட அக்காவ பார்த்தன், இனி அவள் என்ர ஆணைக்கு கட்டுப்படுவாள், நான் ஒவ்வொரு நாளும் சுறாமுட்ட தர சொல்லி ஆணையிடுவன்,
நாங்கள் நாலு மணிக்கெல்லாம் கோட்ட கட்டி முடிச்சிட்டம்,சது அக்கான்ர தம்பி வந்தோன கோட்டைய திறந்திடலாம்,
தூரத்தில முகாமின்ட கருக்கு வேலிய தான்டி ஒரு கார் வருது
அது அவன் தான் வந்திட்டான்
காருக்கு மேல ஓரேஞ் கலரில ரங்குப்பெட்டி போல இருந்திச்சு, சது அக்கா தம்பிய பாக்கபோற சந்தோசத்தில நின்டாள் அம்மம்மா வெளில வாங்கோ வந்திட்டினம் வந்திட்டினம் தம்பி வந்திட்டான்
அம்மம்மா வெளியால வந்து சது அக்காவ அணைச்சுக்கொண்டு அழ வெளிக்கிட்டா
சது அக்காவும் என்ன அம்மம்மா என்ன அம்மம்மா என்டு கேட்டு அழுறா
பக்கத்து கூடார பொம்பிளையளும் வந்திட்டினம்,எல்லாரும் ஒப்பாரி வைச்சு அழுயினம்
சது அக்கா சரியான அழுகுணிப் பாப்பா அவளும் அழுறாள், நான் தான் தனிய நிக்கிறன்
அக்கா அழுறா நான் வீட்ட போக வெளிக்கிட்டன் தம்பி இனி வரமாட்டானாம் சாமிட்ட போய்ட்டானாம், காரும் வந்திட்டு பெட்டிய இறக்கிவச்சிட்டினம் எல்லாரும் அழுகுணிப்பாப்பா
நானும் தான்,
நான் ஏன் அழோனும் தெரியேல அழுக வந்திட்டு எல்லா இடத்திலயும் அழுகை தான்
நான் அம்மாட்ட கேட்டன் பீஸ் பட்டா செத்திடுவமா?
நான் பாக்கேக்கயே எங்கட முகாமுக்கு அங்கால குண்டு வெடிக்குமே,
அம்மா குப்பறப்படுக்கச் சொல்லுவா,
காத மூடிட்டு குப்பறப்படுத்தா வலிக்காம சாகலாம் போல..
நான் சது அக்காட்ட போய் சொல்லோனும் இனி குண்டு வெடிக்கேக்க குப்பறப்படுக்கச் சொல்லி, சது அக்காவாவது எனக்கு வேணும்
மூன்டு நாளில போய்ப்பார்த்தன்

நாங்க கட்டின கோட்ட உடஞ்சு கிடந்தீச்சு எல்லாற்ற காலும் மிதிச்சு
சது அக்காவும் யாரும் அவங்க வீட்ட இல்ல
எல்லாமே அமைதியா இருந்தீச்சு
எனக்கு சொல்லாமலே போயிட்டா அவாக்கு என்னில அன்பில்ல ,மூன்டு நாளில கோட்டையும் உடைஞ்சிடும் சது அக்காவும் காணாம போவா,
ஆனா சது அக்கா போல ஒரு அக்கா என்ர சாவுக்கு அழுறதுக்கிருந்தா நானும் ஒருக்கா செத்து போகலாம் என்டு யோசிப்பன்,
எங்கட கோட்டை தான் அழிஞ்சு போச்சு ஆனா சது அக்கா கட்டித்தந்த ராச்சியம், ஆதின்ர ராச்சியம் அதுல சாவு என்டதே இல்ல

(ஆழமாய் நம்முள் கலந்த
நினைவுகளுக்கு எப்பவும் மரணம் கிடையாது)

கிராமிய கவிகளும் இலக்கியமும்

நாட்டார் பாடல்கள்.

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் (மட்டக்களப்பு) எழுத்தறிவு இல்லாத காலந் தொட்டு இன்றுவரை, படுவான் கரைப் பகுதிகளிலும் கரைவாகுப் பற்றுப் பிரிவிலும் (கல்முனை, திகாமடுல்லை) விவசாயம் சம்பந்தமான தொழில் ஈடுபடுபவர்கள் மத்தியில் இந்தப் பாடல்கள் பிரசித்தி பெற்றவைகளாகும் ஆண்களை விட பெண்கள்தான் பிரபல்யம் ஒருவர் ஆரம்பித்தால் தொடர்ந்து பாடுவதற்கு ஏனையவர்கள் தயாராகி விடுவார்கள். ஆனால் இன்றைய கால கட்டத்தில்,நாட்டார் பாடல்கள் அன்றைய தலைமுறையு டன் அழிந்து விடுகின்றது . நாட்டார் பாடலுக்கு களமே, களத்து மேடுதான். தற்போது அறிமுகமாகியுள்ள நவீன விவசாயமுறைகள் ,இயந்திர மயப்படுத்தல், கட்டாயக் கல்வி முறை, இவைகளெல்லாம் பெரிய தாக்கங்களை ஏற்படுத்தி,அடுத்த தலைமுறைக்கு இது இறுவட்டாக மட்டுமே காட்சி அளிக்கும்.

தன்னைக் கல்யாணம் பண்ண முனையும்,ஒருவரை பெண் வெறுத்து ஒதுக்குவதையே குறிக்கோளாகக் கொண்டபாடல்கள். தற்போதைய காலத்திற்கு ஏற்றமாதிரிக் கூறுவதானால், கடலை போடுபவரைக் கண்டால், கட்டோடு பிடியாத பெண்ணின் வரி வடிவம்.இதோ

கச்சான் அடித்த பின்பு -நடுக் காட்டில் மரம் நின்றதுபோல் உச்சியில் நாலு மயிர்-தலை ஓரம் எல்லாம் வழுக்கை

கண்ணுமொரு பொட்டை-இரு காதுகளும் செவிடாம் குருத்தெடுத்த வாழை போல-அவர் கூன் வளைந்திருப்பார்

முப்பத்தி இரண்டில் இப்போ -இந்த மூணு பல்லுத்தான் மீதி காகக் கறுப்பு நிறம்-ஒரு காலுமெல்லோ முடமவர்க்கு

நாணற்பூப்போல -தலை நரைத்த கிழவனுக்கு கும்மாளம் பூப்போல -இந்தக் குமர்தானோ வாழுறது

தங்கத்தாற் சங்கிலியும் -ஒரு தக தகவென்ற பட்டுடையும் பட்டணத்துச் செப்புமிட்டு-எனை பகல் முழுதுஞ் சுற்றி வாறான்.

அத்தர் புனுகாம் அழகான பவுடர் மணம் இஞ்சி தின்ற குரங்குபோல - இவருக்கேனோ இச்சொகுசு.

பட்டுடுத்துச் சட்டையிட்டு -நறு பவுசாக நடந்திட்டாலும் அரைச் சல்லிக் காசுமில்லை -ஆள் ஆறுநாட் பட்டினியாம்.

சங்கிலியும் தங்கமில்லை - சரியான பித்தளையாம் இடுப்பிலேயும் வாயிலேயும்- இருக்கிறது இரவல் தானாம்...! இந்த அருமையான அன்றைய பாடல் இன்றைய சினிப் பாடலை முந்திவிட முடியாது கிராமியக் கவிதைக்கு புகழ் பெற்ற இடம் மட்டக்களப்பு.(கிழக்கு மாகாணம்) தேனுக்கும் ,பாலுக்கும்,மீனுக்கும் ,அன்புக்கும் ,விருந்துக்கும் அறிவுக்கும் புகழ் பெற்றவர்கள் மட்டக்களப்பு மக்கள் கலைகளைபேணி வளர்பதிலும், தலைசிறந்து விளங்குகின்றவர்கள் மட்டக்களப்பு மக்கள் .உணர்ச்சி கவிதை நிறைந்த மட்டக்களப்பு நட்டுப் பாடல்கள் பல்வேறு துறைப்பாட்டு, நிறைந்து வழங்குகின்றன. கிழக்கிலங்கையின் மூலை முடுக்குகளிலும் ,வயல்வெளிகளிலும் ,வீடுகளிலும் ,வீதியிலும் உலவும் இப்பாடல்களை தொகுத்து வகைப்படுத்தி வெளியிடுவதில் ஒருவரும் பெரிது கவனம்இதுவரை செலுத்தவில்லையென்பது கவலையாகும் .இயற்கை வழ்வில் நின்று விலகி நிற்கும் நாகரிகத்தில் திளைத்து நிற்கும் பலருக்கு இப்பாடல்களின் அருமை தெரியாது. நாட்டுப்புற பாமரமக்களுக்கும், நகரமக்களுக்கும் ,வாழ்க்கை முறையிலும் உள்ளப்பாங்கிலும் வேறுபாடு வளர்ந்துகொண்டே வருவதனால் பாமரமக்கள் பாடும் பாட்டை கேட்டு மகிழ்கிற மனநிலை படித்தமக்களைவிட்டு ஒரளவிற்கு நீங்கிவிட்டது என்று கூறலாம்.

நாட்டுப்பாடல்களை படுவோரின் தொகையும் நளுக்குநாள் குறைந்து கொண்டேவருகின்றது. நாளடைவில் நாட்டுப்பாடல்கள் மறைந்து விடக்கூடும்.என்ற அச்சம் என்னைப் போன்ற பலருக்கும் உண்டு கவி என்னும் சொல் மட்டகளப்பிலே அகத்தினை ,நாட்டுப்பாடல்களைக்குறிக்கும் சிறப்புசொல்லாக வழங்குகின்றது. இக்கவிகளில் அதிகம் ஈடுபாடுடையவர் மட்டக்களப்பு இஸ்லாமிய மக்களே. சிறந்த கவிவளைப்பாடவல்லவர் இன்றும் பலர் உளர். இத்தகைய உணர்ச்சிமிக்க காதற்பாடல்களாகிய கவிகள் கூற்றுக்குரியோர் பெயராற் காதலன் கூற்றாய் உள்ளவை, காதலி கூற்றாய் உள்ளவை, தோழி கூற்றாய் உள்ளவை, தாயார் கூற்றாய் உள்ளவை, நான்கு பிரிவுகளாகஇவை வகுக்கப்பட்டுள்ளன. இக் காதற்கவிகள் தமிழிலுள்ள அகப்பொருள் மரபுக்கு மாறாகஇருக்ககூடும் உதாரணமாகத் தமிழ் இலக்கியத்திற் களவு ஒழுக்கம் பெரும்பாலும் தோழி துணை கொண்டே நடக்கும். தலைவி ஒருபோதும் குறியிடம் கூறமாட்டாள். ஆனால் நாட்டுப்பாடலில் தலைவி தானே தலைவனிடம் குறியிடம் கூறும்வழக்கைகாணலாம்.

சந்தன மரத்தை மச்சான் சந்திக்க வேண்டுமென்றால் பூவலடிக்கு மச்சான் பொழுதுபட வந்திடுங்கோ.

கடப்படியில் வந்து நின்று காளை கனைக்கும் மென்றால் எங்கிருந்த போதும் நாகு எழுந்துவர மாட்டாதோ போன்ற பாடல்கள் தலைவி தலைவனிடம் குறியிடம் கூறுவதைக் குறிக்கின்றன.

மட்டகளப்பில் - மழைவளம் குறைந்து, பசியும் பிணியும் பெருகும் காலத்து கண்ணகி தேவிக்குச் சாந்தி செய்யும் போது கொம்புவிளையாட்டு நடத்தி மகிழ்வர். கொம்புவிளையாட்டில் ஊர் முழுவதும் இருகட்சியாகப் பிரியும். ஒன்று கோவலன் கட்சி, மற்றது கண்ணகி கட்சி. இக்கட்சிகள் வடசேரி, தென்சேரி என்ற பெயர் பெறும். இவ்வாறாக பிரிந்து, போட்டியாக ஒரு சேரியார் இன்னொரு சேரைப்பழித்து வசைப் பாடல்கள் பாடுவர். பால்போல்நிலவெறிக்கப் படலை திறந்தவன ஆர்தோழி நான்தாண்;டிவடசேரியான் உனக்கு நழிப்பணம் கொண்டுலாவுகிறேன். என்பன போன்ற தனி வசைப்பாடல்களும் பல உள. இப்பாடல் இப்பொழுது கிழக்கு மாகாணத்தில் மண்டூர் ,தமபிலுவில், காரைதீவு, வந்தாறுமூலை, போன்ற ஊர்களில் மட்டும் ஆடப்படுகின்றது. துன்பத்தைப்போக்கி இன்பத்தை பெருக்கப் பாடப்படும் இப்பாடல்கள் அழியாமற் காக்கப்படவேண்டியவை. ஆயிரக்கணக்கான நாட்டுப்பாடல்கள் பலதுறைப்பட்டு விளங்குகின்றன. நாட்டுப்பாடல்களை இறவாமல் காப்பது எல்லோருடைய கடமையாகும் தமிழரின் இலக்கிய செல்வத்திலே இப்பாடல்களுக்கு சிறந்த இடம்முண்டு. தமிழில் எத்தனையோ இலக்கிய நு}ல்களும், இலக்கண நு}ல்களும், இறந்து போய்விட்டன என்று வரலாறு கூறுகின்றது. யாழ் நூலகம் எரிக்கப் பட்டபோது சாம்பலாக்கப் பட்டுவிட்டது மனித ஆத்மாக்கள் கவலைப் படுகின்றது மட்டக்களப்பு நாட்டுப்பாடல்களின் முதற் பதிவு 1960 ம் ஆண்டில் வெளிவந்ததுள்ளது

ஈழத்திலுள்ள அறிஞ்ஞர் பலர் ஈழத்து நாடோடிபாடல்களை அவ்வப்போது சேர்த்துப்பத்திரிகைகளிலும,; துண்டு பிரசுரங்களிலும் வெளியிட்டு வந்துள்ளனர். இவர்களுள் திரு. மு. இராமலிங்கம் அவர்களின் சேவை பாராட்டுக்குரியது.

நாட்டுப்பாடல், நாட்டார் பாடல் அல்லது நாட்டுப்புற பாடல் எனப்படுவது நாட்டுப்புறங்களில் வாழும் மக்கள் தங்கள் அன்றாட வாழ்விலும், தொழிற்களங்களில் பணிநேரங்களில் களைப்பைக் குறைக்கும் வகையிலும், விழாக்களிலும் பாடும் பாடல்களைக் குறிக்கும்.

இவ்வாறான பாடல்கள் வாய்மொழி மரபாக கையளிக்கப்பட்டு வந்தாலும் பெரும்பாலும் அதிக மாற்றத்துக்கு இலக்காகாமல் பேணப்படுகின்றன. அதேவேளை இவற்றின் இயற்றுனர்கள் என்று எவரையும் குறிப்பிடமுடியாத வகையில் இவை பொதுவழக்கில் பயன்பாட்டிற்கு வந்துவிடுகின்றன. நாட்டுப் பாடல்கள், நாடோடிப் பாடல்கள், வாய்மொழி இலக்கியம், ஏட்டில் எழுதாக் கவிதைகள், காற்றில் வந்த கவிதைகள், மக்கள் பாடல்கள், மரபுவழிப் பாடல்கள், பாமரர் பாடல்கள், பரம்பரைப் பாடல்கள், நாட்டார் பாடல்கள் என பல்வகைப் பெயர்களால் நாட்டுப்புறப் பாடல்கள் அழைக்கப்படுகின்றன. நாட்டார் பாடலை நாட்டுப்பாடல், தெம்மாங்கு, பாமர ஜனகானம், பொதுஜனகானம், கிராமியபாடல், எனப் பலவாறு அழைப்பர். பழங்குடிகள் தம் கருத்துக்களையும், இன்ப துன்ப உணர்வுகளையும் பிறருக்குப் புலப்படுத்தக்கூடியவாறு மொழி வளர்ச்சி

பெற்றிருக்காத சூழ்நிலையில் ஏதோ ஒரு வகையில் ஓசை முறைகளையும் பயன்படுத்தி இருக்கலாம். மொழி துணையாக வந்த போது முதற்பாடல் தோன்றியிருக்கக் கூடும். ஒருவர் ஓர் அடியைப்பாட, மற்றொருவர் மற்றைய அடியைப்பாட வினா விடையாகவும் நாட்டார் பாடல்கள் அமைந்தன. சூழலையும் குறிக்கோளையும் பொருத்து நாட்டார் பாடல்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்: தாலாட்டுப்பாட்டு முளைப்பாரிப்பாட்டு அல்லது கும்மிப்பாட்டு ஒப்பாரிப்பாட்டு நடைப்பாட்டு ஏற்றப்பாட்டு வண்டிப்பாட்டு நடவுப்பாட்டு நெற்குத்திப்பாட்டு தமிழில் முதலில் எழுந்த இலக்கியமான சிலப்பதிகாரமும் ஒரு பழைய கதைப்பாடலை ஆதாரமாகக் கொண்டே எழுந்திருக்க வேண்டும். சங்ககால இலக்கியமான ஐந்திணை தழுவிய அகப்பாடல்களுக்கும், நாட்டு மகளிடையே வழங்கிய காதற்பாடல்களே முன்னோடிகள் எனலாம். சிலப்பதிகாரத்தில் வரும் கானல் வரி, வேட்டுவ வரி, குன்றக்குரவை, ஆய்ச்சியர் குரவை என்பனவும் நாட்டார் இசைமரபின் தொடர்ச்சியாகவும் மக்கள் வாழ்க்கை முறையில் பெறும் முக்கியத்துவத்தைத் தெளிவு படுத்தும் விதமாகவும் இருக்கின்றன.

இளங்கோவடிகளின் துன்ப மாலைப் பகுதியில் வழங்கும் பாடல் கூறுகளும், யாழ்ப்பாண இசை மரபில் வழங்கும் ஒப்பாரிப்பாடல்களும் ஓசை அமைப்பில் ஒருமைப்பாடு உடையன. பெரியாழ்வார் கண்ணனை குழந்தையாக உருவகப்படுத்திய தாலாட்டுதமிழ் நாட்டுத் தாய்மார்களிடையே வழங்கி வந்த தாலாட்டுப் பாடல்களையொத்தே உருவாக்கப்பட்டது. நாட்டுபாடலில் ஈடுபாடு காட்டிய பாரதியார் தமது பல்வேறு பாடல்களில் நாட்டுப்பாடலின் அமைப்பையும் சந்தத்தையும் பயன்படுத்துகின்றார் பாஞ்சாலி சபதம். இவருக்கு முன் கோபாலகிருஷ்ண பாரதியார்,இராமலிங்க சுவாமிகள் முதலியோர் கும்மியாட்டம் போன்றவற்றிற்கான நாட்டுப்படல்களை இயற்றியுள்ளனர். பெரும்பாலும் எழுத்தறிவு பெறாத பொதுமக்களால் இயற்றப்பெறுவதால் நாட்டார் பாடல்களில் வட்டார மொழி வழக்குகளே மிகுந்து காணப்படும். மேலும், பிற இலக்கியங்களைப் போன்றே நாட்டார் பாடல்களில் அவற்றின் காலத்தில் நிகழ்ந்த பெருநிகழ்வுகளும், இருந்த சூழல்களும், வாழ்க்கைமுறைகளும், பண்பாடும் ஆவணப்படுத்தப்பட்டிருக்கும். சில வேளைகளில் பிற இலக்கியங்களில் காணப்படாத காலப்பதிவுகளும் மிகுந்து காணப்படும். எடுத்துக்காட்டாக, தாது ஆண்டுப் பஞ்சத்தின்போது தமிழர் திருமணம் முதலிய சடங்குகள் எவ்வாறு இருந்தன போன்ற தகவல்களையும் இவற்றில் காணலாம். நடுகைக் களத்தில் காதல் பேசும் வகையில் அமைந்த ஒரு எடுத்துக்காட்டுப் பாடல்5] நாலு மூலை வயலுக்குள்ளே நாத்து நடும் பொம்பிளே நானும் கொஞ்சம் ஏழையடி நடவு கொஞ்சம் செறுத்துப் போடு

நண்டு சாறு காய்ச்சி விட்டு நடு வரப்பில் போற பெண்ணே - உன் தண்டைக் காலு அழகைக் கண்டு கெஞ்சுறானாம் அஞ்சு மாசம் நானும் கொஞ்சம் ஏழையடி நடவு கொஞ்சம் செறுத்துப் போடு

பெண்டுகளே! பெண்டுகளே! தண்டு போட்ட பெண்டுகளே! - உன் கொண்டை அழகைக் கண்டு கெஞ்சுறானாம் அஞ்சு மாசம் நானும் கொஞ்சம் ஏழையடி நடவு

கொஞ்சம் செறுத்துப் போடு நாட்டார் / கிராமிய பாடல்கள் என்ற தொகுதியின் ஆசிரியர் கிண்ணியாவைச் சேர்ந்த கவிஞர் பி.ரி. அஸீஸ் அவர்களாவார். நீண்ட இடைவெளிக்குப் பின் ஏப்ரல் 2011 இல் எழுதத் தொடங்கிய பி.ரி. அஸீஸ் அவர்கள் டிசம்பர் 2011 வரையான ஒன்பது மாதங்களுக்குள் ஒன்பது படைப்புக்களை வெளியிட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. பல்வேறு ஆளுமைகளைக் கொண்டிருக்கும் இவர், அண்மைக் காலங்களில் அதிகமாக இலக்கியத்தில் ஈடுபட்டு தமிழ்த் தொண்டாற்றி வருபவர். நாட்டார் / கிராமிய பாடல்கள் என்ற தொகுதி ரசனைமிக்க பல நாட்டார் நாட்டார் பாடல்கள் தொழில்கள் நிமித்தம் புறப்பட்ட உணர்வுகளே. அதிகம் விவசாயம், மீன்பிடி போன்ற தொழில்களோடு சம்பந்தப்பட்ட சோகம், காதல், வெறி, தவிப்பு, பிரிவு ஆகிய பொருள்களில் நாட்டார் பாடல்கள் முத்திரை பதிக்கிறது கிராமத்து வாழ்க்கை மிகவும் இனிமையானது. அமைதி நிறைந்தது. உற்சாகம் மிகுந்தது. கிராமிய மக்கள் அன்பும் நல்ல பண்பும் கொண்டவர்கள். அழகியல் சூழலில் ஆனந்தமாக வாழ்பவர்கள். இதமான தென்றலிலும், இதயம் தொடும் பசுமையிலும் அவர்களின் காலம் கழிகிறது. இத்தகையவர்கள் வாழ்க்கையிலும் எத்தனையோ தொல்லைகளும் பிரச்சினைகளும் அவை காதல், சோகம், ஏமாற்றம், வறுமை, விவேகம் என பல்வேறு வகைப்பட்டு நிற்கிறது.

வாழ்வியல் பிரச்சினைகளை அவர்கள் இனிய கவிகள் மூலம் வெளிப்படுத்துகின்றனர். இக்கவிகள் வாழும் தன்மை கொண்டவையாக விளங்குகின்றன. கிராமிய கவிகளும் இலக்கியமும் ஒவ்வொரு தனிமனித வாழ்க்கையிலும் ஆதிக்கம் செலுத்துகின்றன.

திருமண பந்தத்தில் இணைய நினைக்கும் ஒரு இளஞ் சோடியின் மன உளைச்சலை வெளிப்படுத்தும் வரிகளாக பின்வரும் வரிகள் (அமைந்துள்ளன. வருமானம் இல்லாத காரணத்தால் கல்யாணம் செய்து கைப்பிடிக்க முடியவில்லையே என்ற ஆதங்கத்தை தலைவனின் பாடலடிகள் சுட்டி நிற்கின்றன.

காலயும் புலந்திருக்கு கனவெல்லாம் கலைஞ்சிரிச்சி மாலையும் கையுமா மச்சான் ஒன்ன கண்டிருந்தேன்

வேலயும் இல்ல மச்சி வருமானம் கொறஞ்சிரிச்சி தோளிலே ஒன்ன வைக்க தோது இல்ல என் கிளியே!

அடக்கு முறைக்குள் இருந்து வெளிவரத் துடிக்கும் ஒரு யுவதியின் மனோ வலிமையை சுட்டி நிற்கிறன.கீழ் உள்ள வரிகள் அதில் தனது நியாயமான சுதந்திரத்துக்கு தடைக்கற்களாக விளங்கும் அனைத்தையும் படிக்கற்களாக மாற்றி முன்னேறத்துடிக்கும் பாங்கில் அது அமைந்திருப்பதை அவதானிக்க முடிகிறது.

சுற்றி வர நெருஞ்சி முள்ளு சுருண்டிருந்து பாத்திருக்கேன் தடை தாண்டிப் பாய்ந்து வர நல்ல சப்பாத்துக்காய் காத்திருக்கேன்!

இன்றைய காலத்தில் பெண்களுக்கான அடக்கு முறைகள் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன. பெண்கள் பல துறைகளில் முன்னேற்றங்களைக் கண்ட போதும் ஆணாதிக்கத்தின் பலம் குறைந்தபாடில்லை என்பதாக நினைக்கும் ஒரு யுவதியின் மனவெளிப்பாட்டை மேலுள்ள வரிகள் இயம்பி நிற்கின்றன.

அலைகள் ஒரு போதும் ஓய்வதில்லை. அதேபோல இந்தப் பெண்ணும் தன் நினைவலைகளிலிருந்து மீள முடியாமல் தவிக்கும் ஒரு கன்னியின் மன ஏக்கத்தை பின்வரும் வரிகள் உணர்த்துகின்றன.

ஓடுகின்ற தண்ணியிலே ஆடுகின்ற அலையெல்லாம் தேடுகின்ற என் மனதின் ஏக்கங்களைக் கூறாதோ!

தொழில் நிமித்தம் வீட்டைவிட்டு வெளியூருக்குச் சென்ற கணவன் பல நாட்களாக திரும்பி வரவில்லை. அவரது வருகையை எதிர்பார்த்து மனைவி வாடிப் போகிறாள். கணவனை நினைத்து அவள் ஏங்கும்; பாடல் இப்படி வருகிறது.

கழுத்திலே மின்னுகிற கரிச மணிக் கோர்வையிலே கைய வைத்து உருட்டி விடும் என் ஆசைக் கண்ணாலா

தொழிலுக்கு தொலை தூரம் போனவரே நெடுநாளா சேதியில்ல என் நெஞ்சம் வெடிக்குதுகா!

பருவகால மழை பிழைத்துப் போனால் உழவர்களின் பாடு திண்டாட்டம்தான். உழவர்கள் விளைச்சலை நன்றாகத் தந்தால் தான் நாட்டு மக்கள் நன்றாக சாப்பிட முடியும். விளைச்சலில் பிரச்சினைகள் ஏற்படாமல் அல்லாஹ்வை வேண்டி நிற்கும் சூடடிக்கும் பாடல் இப்படி வருகிறது.

மாடுகள் வலய வலய நெல் மணிகள் குலய குலய பாடுகிறோம் பாட்டு சூடடித்து முடியும் வர சுகமாகக் கேட்டு!

நாடுகிறோம் அல்லாஹ்வை நல் விளைச்சல் கெடச்சிடவே தேடுகிறோம் கடனெல்லாம் தீர ஒரு நல் வாழ்வை!

சிறுவர்களை மகிழ்விப்பதற்காக அச்சிறுவர்களின் தாயாரோ அல்லது உறவினர்களோ பாடும் பாடல் இது.

எதுகையும் மோனையும், இயைபுத் தொடையும் மிக இயல்பாக இப்பாடலில் அமைந்துள்ளது. இப்பாடலை மறுவாசிப்பு செய்யும்போது, நம்மையும், இப்பாடல் கரைந்து மோன காலத்திற்குள் தள்ளுகிறது. ஞாபகம் வருகிறதே பாணியில்

பின்னோக்கி நம் நினைவின் நிழல்களை நகர்த்தினால், நம் குழந்தைப் பருவத்து நிகழ்வுகள் நினைவுக்கு வரும். இனி பாடலைப் பார்ப்போம்.

சாய்ந்தாடம்மா சாய்ந்தாடு

சாயக் கிளியே சாய்ந்தாடு

அன்னக் கிளியே சாய்ந்தாடு

ஆவாரம் பூவே சாய்ந்தாடு

குத்து விளக்கே சாய்ந்தாடு

கோயில் புறாவே சாய்ந்தாடு

மயிலே குயிலே சாய்ந்தாடு

மாடப் புறாவே சாய்ந்தாடு

குழந்தைகள் பாடிக்கொண்டு விளையாடும் விளையாட்டுப் பாடல்கள் தனி ரகமானவை. குழந்தைகளின் விளையாட்டோடு, இசையும், இலக்கியமும் கலந்தது வியப்பான விசயமாகும்.

குழந்தைகளின் விளையாட்டுக்கள் காலாவதியானதுடன், சேர்ந்து அவர்கள் விளையாட்டோடு பாடிய பாடல்களும் காற்றில் கரைந்து விட்டன.

கண்ணாம் கண்ணாம் பூச்சாரே,

காது காது பூச்சாரே

எத்தனை முட்டை இட்டாய்?

மூணு மூட்டை!

மூணு முட்டையும் தின்னுப்புட்டு

ஒரு சம்பா முட்டை கொண்டுவா!

என்பன போன்ற பாடல்களைப் பாடுவார்கள். இத்தகைய பாடல்களுக்கு நாம் பொருள் விளக்கம் தேடி அகராதியைப் புரட்டிக் கொண்டிருக்கக்கூடாது. இத்தகைய பாடல்களின் இசை அமைதியையும் தாளக்கட்டையும், சொற் செட்டுகளையும் மட்டும் நாம் அனுபவிக்கவேண்டும். பொருளற்ற வெற்றசைச் சொற்களாகவே இத்தகைய பாடல்களில் வார்த்தைகள் வந்து உக்கார்ந்திருக்கும். சான்றாக,

மாப்பிள்ளை மாப்பிள்ளே

மண்ணாங்கட்டி தோப்புளே

அரைக் காசு வெற்றிலைக்கு

கதி கெட்ட மாப்பிள்ளே. . .!

என்ற பாடலைக் கூறலாம்.

மைத்துனன் முறை உள்ள பையனை மச்சினன் முறை உள்ள பையன் கேலி செய்து பாடுவதாக அப்பாடல் அமைந்துள்ளது.

சக்கு சக்குடி சருவொலக்கையடி

குத்தொலைக்கையடி-குமரன் பொண்டாட்டி

பாளையத்திலே வாழ்க்கைப்பட்ட

பழனி பொண்டாட்டி. . .

வெற்றசைச் சொற்களால் ஆன இசைப்பாடல் இது.

பனை மரமாம் பனை மரமாம்

பச்சைக் கண்ணாடி

பல் இல்லாத கிழவனுக்கு

டபுள் பொண்டாட்டி. . .

என்ற குழந்தைப் பாடல் இரண்டாம் தாரமாகக் கிழவர் ஒருவர் இளம்பெண் ஒருத்தியைத் திருமணம் செய்து கொண்டதைக் கேலி செய்கிறது. இரண்டு பொண்டாட்டி என்பதை டபுள் பொண்டாட்டி என்று பாடுவது தமிழ் மொழியில் ஏற்பட்ட மொழிக்கலப்பைப் பதிவு செய்கிறது.

பலிஞ் சடுகுடு அடிப்பானேன்?

பல்லு ரெண்டும் போவானேன்?

உங்கப்பனுக்கும் உங்காயிக்கும்

ரெண்டு பணம் தெண்டம், தெண்டம்!

என்கிற பாடலிலும் கேலி செய்யும் தொனியே மிஞ்சி நிற்கிறது.

கிக்கீக்குஸ் கம்பந் தட்டை

காசுக்கு ரெண்டு கெட்டு

கருணைக் கிழங்கடா

வாங்கிப்போடா. . . வாங்கிப்போடா. . .!

இந்தப்பாடல் கரிசல் காட்டில் தோன்றியதாக இருக்க வேண்டும். கம்மங்கதிர்,கம்பு, கம்மஞ்சோறு, கம்மந்தட்டை என்பவை கரிசல் காட்டிற்கே உரியவையாகும். இப்பாடலும் பொருளற்ற வெற்றசைகளால் நெய்யப்பட்டிருக்கிறது.

சடுகுடு விளையாடும்போது, பிள்ளைகள் பலவிதமான சிறுபாடல்களைப் பாடிக்கொண்டே விளையாடுவார்கள். அவைகள் கேட்பதற்கு இனிமையாக இருக்கும். அத்தகைய குறும் பாடல்களில் சிலவற்றைக் கீழே காண்போம்.

சடுகுடு மலையிலே

ரெண்டானை

தவறி விழுந்தது, தவறி விழுந்தது

கிழட்டானை. . . கிழட்டானை.

வெள்ளிப் பிரம்பெடுத்து

விளையாட வாராண்டா. . .

தங்கப் பிரம்பெடுத்து

தாலி கட்ட வாராண்டா. . .

தாலி கட்ட வாராண்டா. . .

தூத்தூ நாய்க்குட்டி

தொட்டியக்குடி நாய்க்குட்டி

வளைச்சி போடடா. . நாய்க்குட்டி. .

இழுத்துப் போடடா. . நாய்க்குட்டி. . .!

அந்தக் குடுக்கை இந்தக் குடுக்கை

கல்லிலே போட்டா சுரைக் குடுக்கை

சுரைக் குடுக்கை. . . சுரைக் குடுக்கை. . .!

'கழிச்சிக் கல்' விளையாட்டு என்று ஒருவித விளையாட்டைச் சிறுவர்கள் சென்ற தலைமுறைவரை விளையாடினார்கள். இந்த விளையாட்டைப் பற்றிய குறிப்புகள் சங்க இலக்கியத்திலும் காணக் கிடக்கிறது.

சங்ககாலம் முதல் சென்ற தலைமுறைவரை தொடர்ந்து வந்த இந்தக் குழந்தை விளையாட்டை, இந்தத் தலைமுறைப் பிள்ளைகளுக்கும் கடத்த முடியாமல் போனது எதனால்?

இரண்டாயிரமாண்டுப் பாரம்பரியமிக்க இந்தச் சிறுவர் விளையாட்டை,சமீபத்திய வாழ்க்கை முறையால் நாம் தொலைத்துவிட்டோம்.விளையாட்டிலும், உலக மயமாக்கல் ஒற்றைக் கலாச்சாரத்தைத் திணிக்கிறது.

விளையாட்டு என்றதும் மட்டைப் பந்து என்ற கிரிக்கெட்தான் இக்காலத்துப் பிள்ளைகளின் நினைவுக்கு வருகிறது. இந்த மட்டைப் பந்து விளையாட்டு என்பதும் ஒரு காலத்தில் சிறு பிள்ளைகள் விளையாடிய கிட்டிப்புல் என்ற சில்லாங்குச்சி விளையாட்டின், விஞ்ஞானபூர்வமான விரிவாக்கமே!

'கழிச்சிக் கல்' விளையாடும் பிள்ளைகள் விளையாட்டின்போது ஒவ்வொரு கல்லையும் எடுக்க, ஒருவிதப் பாடலைப் பாடுவார்கள். அத்தகைய பாடல் இதில் ஒன்று முதல் பத்துவரை உள்ள எண்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் சுட்டப்படுகின்றன!

கொக்குக்கிக் கொக்கு

ரெட்டை சிலாக்கு

மூக்குச் சிலந்தி

நாக்குலா வரணம்

ஐயப்பன் சோலை

ஆறுமுக தாளம்

ஏழுக்குக் கூழு

எட்டுக்கு முட்டு

ஒன்பது கம்பளம்

பத்துப் பழம் சொட்டு

இதுவும் பொருளற்ற ஒரு வித இசைப்பாடலே. குழந்தைகளின் நினைவாற்றலை வளர்க்க இத்தகைய பொருளற்ற இசைப்பாடல்கள் உதவின.

அந்தாதித் தொடை அமைந்த வினா-விடை பாணியிலான சில குழந்தைப் பாடல்கள் கேட்பதற்கும் பாடுவதற்கும் ரஸமாக இருக்கிறது. அத்தகைய பாடல்களில் சான்றுக்கு ஒரே ஒரு பாட்டு

ஆண்டி. . . ஆண்டி.. .

என்ன ஆண்டி?

பான்னாண்டி. .

என்ன பொன்?



காக்காப் பொன்.

என்ன காக்காய். . .?

அண்டங்காக்காய். . .

என்ன அண்டம்?

பூ அண்டம்.

என்ன பூ?

பனம் பூ.

என்ன பனை?

தாளிப் பனை.

என்ன தாளி?

நாக தாளி.

என்ன நாகம்?

சுத்த நாகம்

என்ன சுத்தம்?

வீட்டுச் சுத்தம்

என்ன வீடு?

ஓட்டு வீடு

என்ன ஓடு?

பாலோடு

என்ன பால்?

நாய்ப் பால்

என்ன நாய்?

வேட்டை நாய்

என்ன வேட்டை?

பன்றி வேட்டை

என்ன பன்றி?

ஊர்ப் பன்றி

என்ன ஊர்?

கீரையூர்

என்ன கீரை?

அறைக்கீரை

என்ன அறை?

பள்ளி அறை

என்ன பள்ளி?

மடப் பள்ளி

என்ன மடம்?

ஆண்டி மடம்

என்ன ஆண்டி

பொன்னாண்டி . . .

இந்தப் பாடல் இத்துடன் முடிவதில்லை. தேவை எனில் குழந்தைகள் 'என்ன பொன்?' என்று கேள்வியை எழுப்பி அதற்கு 'ஆணிப் பொன்' என்று விடையும் கூறிச் சங்கிலித் தொடர்போல் பாடலைத் தொடரலாம்.

மொழிப் பயிற்சிக்கும், உச்சரிப்புப் பயிற்சிக்கும், நினைவாற்றலை வளர்க்கவும் கேட்ட கேள்விகளுக்குத் தயங்காமல் பதில் கூறும் மனத்திறனையும் இத்தகைய பாடல்கள் வளர்க்க உதவின.

குழந்தைப் பருவம் முடிந்து வளர் இளம் பருவத்தில் அடி எடுத்து வைக்கும் இளங் குமரிப்பெண்கள் மற்ற முறைகாரப் பெண்பிள்ளைகளைக் கேலி செய்து விளையாட்டாகச் சில பாடல்களைப் பாடுகிறார்கள். நேசமிக்க இத்தகைய பாடல்களும் இன்று காணாமல் போய்விட்டன.

மாதிரிக்கு அத்தகைய பாடல்களில் இந்த ஒன்றை மட்டும் வாசகர்கள் சுவைக்கலாம்

அத்தான் தங்கையே ராமக்கா

அரிசிக் காரன் வந்திட்டான்

சின்ன வீட்டிலே புகுந்துக்கோ

சிலுக்குத் தாளம் போட்டுக்கோ

புட்டைப் பிச்சுத் தின்னுக்கோ

புருசன் கூடப் பேசிக்கோ. .!

ஒரு காலத்தில் குழந்தைகளின் வாழ்வுலகமும், இளம் பருவத்து வளர் இளம் பெண்களின் கனவுலகமும் வண்ண வண்ணப் பூக்கள் பூத்துக் குலுங்கிய சோலைகளாக இருந்தன!

இன்று அவர்களின் கனவுலகமே பாலைவனங்களாகிவிட்டன. கட்டற்ற கற்பனை வெளியில், மொழியின் கைபிடித்து இசையின் காலடித்தடம் தேடி அலைந்த பிஞ்சுக் குழந்தைகளின் வாழ்வனுபவம், இன்றைய குழந்தைகளுக்குக் கிடைக்கவில்லை. இந்தக் கலாச்சார மாற்றம் நம்மை மேல் நோக்கி நகர்த்துகிறதா? புதைகுழியில் தள்ளுகிறதா? புரியவில்லை.

நாடோடிப்பாடல்களில் கதை

இசைப் பாடல்கள்

கவிதைகள்

பழ மொழிகள்

விடுகதைகள்

ஒப்பாரி

கவிகள்

தாலாட்டுக்கள்

ஊஞ்சல் பாடல்கள்

கப்பற் பாடல்கள்

பாலர் விளையாட்டுப் பாடல்கள்

இவையெல்லாம் நாட்டார் இலக்கியங்களாகும்.

-கலைமகள் ஹிதாயா ரிஸ்வி -இலங்கை

கட்டாயக் கண்ணீர்

தெய்வம் கண்ணடைத்துக் கொண்ட
கருணைகளற்றக் காலமொன்றில்
காலனின் கைப்பிடித்துக் கொண்டு
காமுகம் அணிந்து
வெளியே வந்திருந்தது அது
மனுஷம் சிதைக்கும்
மிருகத்துவத்தின் பிரதிநிதியாய்..

தோண்டப்படுகின்ற புதைகுழிகளின்
ஆழத்திலிருந்து வெளியே வருகின்ற
எலும்பு கூடுகளை விதைத்துவிட்டு
சர்வதேச மட்டத்தில்
கொல்லப்பட்ட புறாக்களின்
இறகுகளால் பின்னப்பட்ட
சமாதானத்திற்கான பொன்னாடை
போர்த்திக் கொள்கின்ற
சுயநலங்களோடு
சிறகுகள் அடித்துக் கொள்கிறது
அதன் பேராசைகளின் பறவை.

கட்டவிழ்த்து விடப்பட்ட
வன்முறைகளின்
கூடாரங்களிலிருந்து
இனப் படுகொலைகளுக்கான
குரோதங்களை குடித்து திளைத்த
ஆணவங்களோடு இன்னும்
சிறைபடுத்தப்பட்ட
இயலாமைகளின்
பரிதாபங்களை பந்தாடிக்கொண்டு
அராஜகங்களின் வேர் பரப்பி
ஒரு ஆலமரமாய்
விழுதுகளும் விடத்துடிக்கிறது
அதன் விசுவாசம்.
பல கைகளின்
கூட்டு முயற்சியோடு
தனது கைகளை பலமாக்கிகொண்ட
வல்லமைகளின் முகவரியோடு
இறுமாப்பெய்தி
சனநாயகம் போர்த்தப்பட்ட
சர்வதிகாரத்துக்குள் நின்று
வேட்டையாடப் பழகிக்கொண்ட
அசிங்கங்களின்
அருவருப்புகளிலான
வெற்றியின் மமதைகள் இன்னும்
நாடகங்களாக ஊடகங்களில்..

தெருக்கோடியில்
நிற்பதற்கும் தகுதியிலா
வரலாறுகளின் சொந்தங்கள்
கோடானு கோடிகளின்
சொந்தங்களாய்

நிலைமாற்றம் கொண்ட
கொள்(கை)ளைகளின்மேல்
ஆளுமைகளின் வருணம் பூசப்பட்டு
சுரண்டல் பூங்காக்களில்
அழகாய் சிறகடிக்கின்றது
ஒரு வண்ணத்துப் பூச்சியாய்..

முதுகுகள் நிமிர்த்தும்
தைரியம் தொலைத்த
கோழைத்தனங்களை தூக்கிக்
கொண்ட
துணிச்சலோடு
முன்னேற்றங்களின் சின்னங்களை
விலைபோதலுக்கான சபலங்களாய்
மாற்றிக்கொண்ட எதிரணிகளின்
சாதகங்களை மோதகங்களாய்
சுவைக்கப் பழகிக்கொண்ட
ருஷி கண்ட பூனைகளின்

சாம்ராஜ்ஜியத்தில்
சுமைகளின் அடுப்பில்
எரிந்துகொண்டிருக்கின்றது
வாழ்க்கை உலர்ந்த விறகாய்..
அபிவிருத்திகளின் பெயரால் சுய
அபிவிருத்திகளில்

தன்னிறைவு அடைந்திருக்கும்
தலைமைகளின்
தனியுடைமைக் கொள்கைகள்
தாராளமயபடுத்தப்பட்டிருக்கும்
அடங்காப்பிடாரித்தனங்களால்
புதைக்கப் பட்டுப்போன
பொதுவுடைமை என்பது
இனி வருகின்ற காலங்களில்
தேசத்தின்
கட்டாயக் கண்ணீர்!

- **மெய்யன் நடராஜ்**

இவர்களுக்கிடையில் நானும்...

முகங்களுக்காக நெய்யப்படும்
புன்னகைகளின் ஓரங்களில்
கசிந்து கொண்டிருக்கிறது
மரணித்துப்போன கனவுகளின்
வாசங்கள்..

முகவரிகள் மீது பரிமாறப்படும்
வணக்கங்கங்களும் வாழ்த்துக்களும்
கூசவைக்கிறது உடலையும்,
மனதையும்
இந்த நாகரீகத்தைப் போல..

எலும்புகளை உருக்கியிளக்கும்
இந்த நிலத்தின் குளிரைக் கடந்தும்
எரிந்துகொண்டிருக்கிறது,
வெளித்தள்ள முடியாதவொரு வலி

புலர்வுகளும் மறைவுகளும்
பருவங்களும் உருவங்களும்
மாறிக் கொள்ளும் பயணத்தில்...

வன்மங்களையும், வக்கிரங்களையும்
தோல்களாக்கி,
அகதிப் போர்வைகளால்
மூடிக்கொண்டவர்களின்
ஊர்க் கதைகளாலும்
ஏக்க விளிப்புக்களாலும்
அரைகுறைத் தூக்கங்களாலும்
நீண்ட தொடரூந்துகளும்
நிலக்கீழ் வழித்தடங்களும் நிறைந்து
கிடக்கின்றன....
என்னையும் சுமந்துகொண்டு...

○ **நெற்கொழு தாசன்**

செல்லக் குழந்தையடி நீ
செல்லமாய் ஓசை யிடுகையிலே
தத்தும் குழந்தையடி நீ
தத்தித்தாவி நாவினில் புரள்கையிலே

பாடும் குழந்தையடி நீ
பாட்டிலே குழைந்தெழும் பாவையடி
சின்னக் குழந்தையடி நீ
சிரிக்கக் குழந்தைக்கு கதையடி

கன்னிப் பருவமடி நீ
காதலில் கனிந்திடும் வார்த்தையடி
ஓடும் நதியடி நீ
யார்க்கென்று பாராது சேர்வாயடி

தேடும் களஞ்சியம் நீ
என்னை சேர்ந்து வருவாயடி
சேர்த்து வைக்கையிலே நீ
என்னுள் சிந்தனை சேர்ப்பாயடி

கண்களைச் சிமிட்டுகிறாய் நீ
உன் காலம் புரட்டி நான் பார்க்கையிலே
மினுக்கி மயக்குகிறாய் நீ
உன் இளமை கண்டு மயங்குகையில்

மலைக்க வைக்கிறாய் நீ
புது வார்த்தைகள் புரிய வைக்கையிலே
ஆற்றலாய் நிற்கின்றாய் நீ ஆதவன்
போலவே ஒளிர்கின்றாய்

அறிவாய் நிற்கின்றாய் நீ
அரும் பொருளாய் பொங்கி வழிகின்றாய்
வித்தகச் செல்வியடி நீ
உன்னை செம்மையாய் பகர்கையிலே

அற வாழ்வுணர்த்துகிறாய் நீ
அன்பிலே வாழப் பணிக்கிறாய்
நிறை வாழ்வுணர்த்துகிறாய் நீ
உனை நெஞ்சோட ணைக்கையிலே

பேச்சிலே தெறிக்கிறாய் நீ
பேசும் கருவில் இனிக்கிறாய்
உரைநடையிலே நிமிர்கிறாய் நீ
உறவாடி செய்தி உரைக்கிறாய்

கவிதையில் ஆடுகிறாய் நீ
களமாடி வருகிறாய்
காவியம் படைக்கிறாய் நீ
வரலாற்றில் காலப் பதிவாகிறாய்

தாயென்று உணர்த்துகிறாய் நீ
தாய்மையை எங்கும் ஊட்டுகிறாய்
மொழியென்று உறவாடுகிறாய் நீ
செந்தமிழாகி எம்மோடு உயிராகினாய்

வி.அல்விற்.

(**தாய் மொழிகளின் தினத்தையொட்டி**)

ஈழக்கவி கவிதைகள்

பேய்களின் ஆய்வறையில்

நேற்றைய கனவில்
பேய்களின் ஆய்வறையை காண
நேர்ந்தது
வைத்திய பீட ஆய்வறையின்
செய்நேர்த்திக்கு ஒப்பாக அது
அமைந்திருந்தது

தேர்வுக்கு தெரிவான அரசியல்
வாதிகளுக்கு
செய்முறை பயிற்சி வழங்க
சாத்தான் அழைக்கப்பட்டிருந்தான்

இஸ்ரேலிய இராணுவ தளபதிகளின் வேகத்துடன்
பேய்கள் இயங்கிக் கொண்டிருந்தன

வெள்ளை மாளிகையின் மொழியில்
பொய் சொல்லல் பற்றி
சாத்தான் விரிவுரை செய்தான்

அரச மாணவர்கள்
மனக்கணனியில் பதிகை செய்தனர்

தேர்தல் மேடைகளில் பச்சைபுழுகும்
ஒரு அரசமாணவன் அழைக்கப்பட்டான்
அந்த முதல்தர மாணவன் கொட்டிய
பொய்களின் நெருப்பு
சாத்தானையே சுட்டுவிட்டது
நமட்டுப் புன்னகையுடன்
குருவை மிஞ்சிய மாணவனின்
முதுகில் தட்டிக்கொடுத்தான்

வெட்கத்தை உடைத்தெறிதல் பற்றிய
பயிற்சியின் போது
வெட்கமே இவர்களுக்கு
இருக்கவில்லை என்பதை அறிந்த
சாத்தான் சந்தோசத்தால் குதித்தான்

மக்களின் உணர்வுகளை
உறிஞ்சிக் குடிக்கும் முறைமைகளை
இரண்டு பேய்கள் செய்துக்காட்டின

செய்முறையின் போது
பாராளுமன்ற உறுப்பினர்கள்
சாத்தானின் உணர்வுகளையே
கோடிப் பேய்களின் வேகத்துடன்
உறிஞ்சிய போது
சாத்தானே மரணப்பயத்துடன் துடித்துவிட்டான்

மக்களின் உணர்ச்சிகளை
இல்லாதொழித்தல் பற்றிய பயிற்சியுடன்
பெண் குட்டிச்சாத்தான்களும்
பெண் பேய்களும்
பலத்த பாதுகாப்புடன்
மறைவான இடங்களுக்கு
கொண்டு செல்லப்பட்டதனை
உறுதிசெய்து கொண்ட சாத்தான்
இரண்டு அமைச்சர்களை அழைத்தான்

சாத்தானின் உணர்ச்சிப் பாம்புகளை
சுனாமி அதிர்வலைகளுடன்
அமைச்சர்கள் வெளியில் எடுத்தபோது
பேய்களை திட்டியவாறு
சாத்தான் மிரண்டோடத்தொடங்கினான்

அமைச்சர்கள் சிரித்தனர்

02022014 ***இரவு*** *10.45*

ஈழக்கவி கவிதைகள்

அரசியல்வாதியின் டப்பாவுக்குள்

பசுமை கொழிக்கும் கிராமத்துக்குள்
நாலைந்து நாளாய்
பிணம் சுடுகின்ற மணம்
நாறித் தொலைகிறது

செத்தவனை புதைக்க மட்டுமே
தெரிந்த கிராமம் அது

அப்படியானால்
பிணம் சுடும் மணம் எப்படி

கிராமமே மூக்கை மூடி திண்டாடுகிறது
குழந்தைகள் மூச்சுச் திணறிக் கொண்டிருந்தன
தின்ன எடுக்கும் உணவுக்குள்
பிசாசுகள் இருப்பது போன்றதொரு பிரமை

கடற் கொள்ளைகாரர்கள் போல

கிராமத்தின் பசுமையை எல்லாம்
அந்த பிணமணம் சுருட்டி எடுத்துக் கொண்டிருந்தது

மக்கள் அவிந்து மரணவேதனைக்கு
ஆளாகும் போதில்தான்
தேவதூதன் போல
அந்த அரசியல்வாதி வந்தான்
பிண மணத்தை
சாம்பிராணி மணமாக மாற்றினான்

மக்கள் வாக்களித்து அவனை
அரச அவையில் வாழவைத்தார்கள்

அடுத்த தேர்தல் காலம் வரும் வரைக்கு
பிணம் சுடுகின்ற மணம்
அரசியல்வாதியின்
அந்தரங்க டப்பாவுக்குள்

06022014 ***இரவு*** *10.30* ***மணி***

கீரிமலைச் சுற்றுலா

நண்பர் எல்லோரும் ஒன்று சேர்ந்து
கீரிமலை சென்றுவரத் திட்டமிட்டு
விடுமுறைநாள் வரும் நாளைக் காத்திருந்து
பள்ளியிலே விடுமுறைநாள் வந்தபோது
பல்வேறு காரணங்கள் எடுத்துவைத்து
செல்வதற்காய் அனுமதியை வீட்டில் பெற்று
'சைக்கிள்' ஒன்றில் இருவராய்ச் செல்வதற்கு
உள்ளவைகள் போதாத நிலையினாலே
நாள் வாடகை பேசி சில எடுத்துக் கொண்டு
சுன்னாகம் சந்தைவரை ஒருவர் ஓட
அங்கிருந்து மற்றையவர் மாறி ஓட
கனவான்கள் ஒப்பந்தம் செய்து கொண்டே
காங்கேசன் வீதியிலே வரிசையாக
'றேஸ்' ஓடி சுண்ணாகம் சந்தை கண்டு
'ரேண்' எடுத்து ஓடுபவர் மாறிக்கொண்டு
மணி ஒன்றில் மானாக விசையாய் ஓடி
கீரிமலைச் சுற்றயலைச் சென்றடைந்து
பாதுகாப்பு இடத்தினிலே சைக்கிள் விட்டு
குளிப்பதற்கு ஆயத்தம் செய்து கொண்டே
சனக்கூட்டம் அதிகமில்லா அந்தவேளை
கீரிமலைக் கேணியிலே நிறைந்து நிற்கும்
நீரூடு தெரிகின்ற நிலமாயுள்ள
பளிங்குநிகர் நன்னீரில் குதித்து நீந்தி
மணிக்கணக்கில் மகிழ்வுடனே சுளியும் ஓடி,
கடலிலும் நீராட விருப்பிருந்தும்
பெற்றோரின் எச்சரிக்கை மனதில் கொண்டு
பக்குவமாய் கேணிவிட்டு வெளியே வந்து

மறைவிடத்தில் உடல் துவட்டி உடையும் மாற்றி

கடலோரம் வீற்றிருக்கும் மாதோர்பாகன்

பாதமது பக்தியுடன் தாழ்பணிந்து

பரவசமாய் நெற்றியிலே நீறுமிட்டு

கடலோர வெப்பத்தால் காய்ந்திருக்கும்

வடை, வாய்ப்பன், சுசியம் என வட்டத்தட்டில்

கடைக்காரர் வகை, வகையாய்ப் பரப்புகின்ற

'கடையப்ப' வகைகளிலே சிலதை உண்டு

பசிநீங்கி கடலோரம் நடந்து சென்று

கடலோர மணற்திட்டில் நிமிர்ந்து நிற்கும்

பூவரச மரநிழலை நாடி நாமும்

'உண்ட களை தொண்டருக்கும் உண்டு' என்ற

பண்டுதொட்ட மொழி வழக்கிற்(கு)கமைந்தவாறு

ஓய்வாகச் சிறுபொழுது சாய்ந்துறங்கி

மேற்றிசையைச் சூரியனார் நாடிவந்து

மேனியிலே தன்றணலால் தாக்கும்போது

விழித்தெழுந்து விரைவாக ஓடி ஓடி

வீடேகும் ஆயத்தம் செய்து கொண்டு

இனி எப்போ வருவமென்ற ஏக்கத்தோடு

மீண்டில்லம் திரும்புகின்ற வேளை தன்னில்

வீதியோரம் பற்றைகளாய் வளர்ந்து நிற்கும்

ஈச்சமரக் கூட்டத்தில் கண்சிமிட்டும்

ஈச்சம் பழக்குலைகள் சிலதை வெட்டி

ஈருருளிக் 'ஹான்டிலி'லே சொருகி வைத்து

கீரிமலை சென்று வரும் செய்தி தன்னை

வாயாலே உரைக்காது பெருமைகாட்டி

மகிழ்வோடு சுதந்திரமாய்ச் சுற்றி வந்த

அந்த நாள் மீண்டொருகால் வந்திடாதோ!

- ***க.கோபாலபிள்ளை***

உயிர்வலி என்பது எவர்க்கும் பொதுவானது.

ஏய் ஆயததாரியே
எவரையாவது நீ மனசுள்ளே காதலிக்கலாம்
அதுபோல உன்னை
எவராவது இன்னும் நேசிக்கலாம்

அந்திம காலப்பகுதியில்
கஞ்சி ஊத்துவான் என அம்மா காத்திருக்கலாம்

உன்னைத்தவிர எவனொருவனுக்கும்
கழுத்து நீட்டமாட்டேன் என
எவளாவது ஒருத்தி காத்திருக்ககலாம்

நீ தூக்கிவைத்திருக்கும் துப்பாக்கிக்குள் தூங்கும்
இரவைகளிலே
எவன் பெயர் எழுதப்பட்டிருக்கிறதோ
ஓர் நாளில் அவன் கதை முடியலாம்

அது போல ஏதாவது ஒருவன் தோட்டாவிலே
உனது பெயரும் எழுதப்பட்டிருக்கலாம்.
எவனது துப்பாக்கிக்கியென
யாரு கண்டார்

இயந்திரங்கள் பேசும்போது
இதயங்கள் மௌனமாகி விடுகின்றன
ஆகையால் ஆகையால் ஆயததாரியே
ஆயுதங்களை மௌனமாக்கு
மனிதம் பேசட்டும் உயிர்வலி என்பது எவர்க்கும்
பொதுவானது

- *மட்டுவில் ஞானக்குமாரன்*

காணாமல் போன முகம்!!

எந்த மகிழ்ச்சியில்
நாலு புலன்களும் பிறக்கின்றதோ
அந்த மகிழ்ச்சி எனக்கில்லையே

காணக்கூடாத என் முகத்தை
நீயோ காலம் கடந்து
பார்த்துவிட்டாய்

காரணமின்றியே
உன் விழிகளில் தோன்றும் அச்சம்
அதைக் காட்டிக் கொடுக்கிறதே

எப்போதோ கல்லாகிப் போன
என் இதயத்துள்
ஓடும் குருதியும் கூட
அஞ்சி அஞ்சியே ஓடுகிறதே

உனக்காக நான் கண்ட கனவுகள்
எப்போதோ நோய் கண்டதே

மலை உயரத்தில் பூத்த மலரின்
நறுமணமாக உனை நினைத்தேன்
என் படிப்பு மேசை மீது
உனை வைத்து அழகு பார்த்தேன்

மேசை விளக்கை ஒளிபூட்டி
இரவிரவாக உன் போட்டோவை
ரசித்திருப்பேன்
உன் ஆசை நினைவுகளால்
நெஞ்சுக்குள்ளேயே நீராடி
மகிழ்ந்திருப்பேன்

என்னருகே எத்தனையெத்தனை
இனிதாக
நீ வாழ்ந்திருக்கலாம்
நீயோ என் துணையாக
இருக்க விரும்பவில்லையே

நஞ்சூட்டிய கணைகளால்
உன்னை நான்
வேட்டையாட விரும்பவில்லை

உனக்குள் தோன்றிய அச்சம்
அப்போதே என் இதயத்தைத் தொட்டு
உன்னை விடுவித்து விட்டதே

மனசுக்குள் கசிந்து நின்ற
உன் நினைவுகள்
என் வாழ்கைக்கு ஒளியூட்ட
வெளிச்சமின்றி
காணாமல் போன
உன் முகத்தை தேடித் தேடியே
விழிகளில் ஒளியிளந்து
வாழ்ந்து விட்டேன்

இப்போ இந்த நோயுற்ற உடலை
எந்த நவீன மாத்திரைகளாலும்
இயங்க வைக்க முடியாதே
இப்போ இந்த உடலுக்காக
நானோ என் மரணத்தை அழைக்கிறேன்

இதோ என் ஈமக் கிரிகைக்காக
காலனும் கையசைத்து வருகிறான்
உன்னிடமிருந்து
காணாமல் போகப் போகும்
இந்த முகம் குளிர்ந்து வரும் நிலையில்

என் கரங்களும்
உன்னிடம் ஒருமுறை
கையசைத்து விடைபெற நினைக்கிறது
என்னால் முடியவில்லையே..!!
என்னால் முடியவில்லையே..!!

- விக்கி நவரட்ணம்

விதவைக்கு வாழ்க்கை விதிவிலக்கா..?

இளம் விதவை நான்
என் மங்கள நாணை
இறக்கி வைத்துப்
பார்த்து மகிழ்ந்த சமூகமே

கலங்கி அழும்
என் கண்களிலிருந்து
இதயத்திற்குள் தேங்கும்
கண்ணீரின்
எதிர்காலக் கனவுகளை
எண்ணிப் பாருங்கள்

வாழ்கை என்னும் சமுத்திரத்தில்
முப்பொழுதும்
சந்தோசம் என்ற
முத்துக் குளித்தே பழகியவள் - நான்

இன்றோ முப்பொழுதும்
என் கண்கள் உப்பு நீரை சுரக்கிறதே
என் அழுகைக்குள்
அழகிய காதலும்
மூச்சுத் திணறி மூழ்கிப் போனதே

காலம் காலமாக
வாழ்வென்பது
தம்பதிகளோடு சம்மந்தப்பட்டதா

விதவைகளுக்கு வாழ்கை
விதிவிலக்கானதா

முதிரா இளைஞனும்
முதல்நரை விழுந்தவனும்
நஞ்சுஊட்டிய கண்களோடு
விசம்கொண்ட பர்வையால்
என்னை கொல்லும் பொழுதெல்லாம்
முப்பொழுதும் என் வாழ்கை
கண்ணீரில் கரைகிறதே

அழுகையின் ஆழம் காணமுடியாத
எனக்குள்ளும்
சின்ன சின்ன ஆசைகளை
சிம்மாசனமிட முடியாதா

எதிர்கால என் அகராதியில்
விதவைக்கு மறுமணம் என்பது
அழித்தெழுத முடியாததொன்றாகும்

- விக்கி நவரட்ணம்

ஓவியா பதிப்பகம்
பெருமைக்குரிய வெளியீடுகள் - தற்போது விற்பனையில்
குரும்பை
வதிலைபிரபா
(சிறுகதைகள்)
பக்கம் : 80
விலை: ₹. 60
உதிரும் மௌனம்
சந்திரா மனோகரன், ஈரோடு.
(ஹைகூ கவிதைகள்)
பக்கம் : 144
விலை: ₹. 100
பூப்பதெல்லாம்..
விமலன், விருதுநகர்.
(சிறுகதைகள்)
பக்கம் : 144
விலை: ₹. 90
Wind and Rain
நாவல் குமாரகேசன், கேரளா.
(கவிதைகள், ஆங்கிலத்தில்)
பக்கம் : 112
விலை: ₹. 100
மருதிருவர்
லதா ஆறுமுகம்.
(மருதுபாண்டியர் வரலாறு)
பக்கம் : 240
விலை: ₹. 170
சுதந்திரன் கவிதைகள்
சுதந்திரன், இலங்கை.
(கவிதைகள்)
பக்கம் : 64
விலை: ₹. 45
இவனே என்கிற மனிதன்
சந்திரா மனோகரன், ஈரோடு.
(சிறு கதைகள்)
பக்கம் : 64
விலை: ₹. 60
இயன்முறை மருத்துவம்
தி. செந்தில்குமார், மலேசியா.
(பிசியோதெரபி மருத்துவ நூல்)
பக்கம் : 144
விலை: ₹. 90
சிறகு முளைத்த பூக்கள்
கவிவாணன், வத்தலக்குண்டு.
(ஹைக்கூ கவிதைகள்)
பக்கம் : 64
விலை: ₹. 60
குழந்தைகளும், பொம்மைகளும், கடவுளும்
முனைவென்றி நா. சுரேஷ்குமார்
(கவிதைகள்)
பக்கம் : 64
விலை: ₹. 60
A Pilgrimage to the Holy Land
கார்த்திகா மகேந்திரன், லண்டன்
(பயணக் கட்டுரை, ஆங்கிலத்தில்)
பக்கம் : 64
விலை: ₹. 50
அழகு ராட்சசி
முனைவென்றி நா. சுரேஷ்குமார்
(கவிதைகள்)
பக்கம் : 64
விலை: ₹. 60
The Last Drop of Drizzle
சந்திரா மனோகரன், ஈரோடு.
(கவிதைகள், ஆங்கிலத்தில்)
பக்கம் : 144
விலை: ₹. 100
Address:
OVIYA PATHIPPAGAM
17-16-5A, K.K. Nagar,
BATLAGUNDU -624 202.
TAMILNADU. INDIA.
email :
vathilaipraba@gmail.com
mahakavimonthly@yahoo.com
Phone: 04543 26 26 86
Cell : 766 755 711 4,
96 2 96 52 6 52.
வண்ணம் செய்யும் எண்ணம்
ஓவியா பதிப்பகம்

தூய தமிழில் கதைப்போம்! சிந்திப்போம்! எழுதுவோம்!

தமிழில் அண்ணளவாக ஓர் இலட்சத்துக்கு மேற்பட்ட சொற்கள் உள என்று கூறுவர். ‘அரி’ என்னும் ஒரு சொல்லுக்கு மட்டும் 109 பொருள்களைக் காண்கின்றோம். அதில் 50 பொருள்கள் வடமொழிச் சொற்களைச் சார்ந்தவை. மற்ற 59 பொருள்களும் அரி என்ற தமிழ்ச் சொல்லுக்கே உரியனவாகும். நாம் அயற் சொற்களையும், அயல் எழுத்துகளையும் நீக்கி எழுதினால் தூய தமிழ் பிறக்கும். எடுத்துக்காட்டாக ஒரு சில பிழையான சொற்பதங்களையும் அதற்குரிய தூய தமிழ்ச் சொற்களையும் பின்வரும் அட்டவணையில் பார்த்து மகிழுங்கள்.

பிழையான சொற்பதம்		திருத்தமான சொற்பதம்
1. உந்தன்	-	உன்றன் - உந்தம் - பன்மை
2. எந்தன்	-	என்றன் - எந்தம் - பன்மை
3. அருணாக்கொடி	-	அரைநாண்கொடி
4. எல்லோரும்	-	எல்லாரும் - பாவில் எல்லோரும் என்று வரலாம்
5. வலது பக்கம்	-	வலப்பக்கம்
6. எண்ணை	-	எண்ணெய்
7. சம்மந்தம்	-	சம்பந்தம்
8. முன்னூறு	-	முந்நூறு
9. வல்லுனர்	-	வல்லுநர்
10. வேர்க்குரு	-	வேர்க்குறு
11. முயற்சித்தல்	-	முயற்சி செய்தல், முயலுதல்
12. முயற்சித்தான்	-	முயன்றான்
13. கண்றாவி	-	கண்ணராவி
14. குண்டுமணி	-	குன்றுமணி
15. சக்களத்தி	-	சகக்களத்தி
16. சின்னாபின்னம்	-	சின்னபின்னம்
17. சீயக்காய்	-	சிகைக்காய்
18. நிச்சயதார்த்தம்	-	நிச்சிதார்த்தம்
19. பண்டகசாலை	-	பண்டசாலை
20. பூசனிக்காய்	-	பூசுணைக்காய்
21. மிரட்டினான்	-	மருட்டினான்
22. முகர்தல்	-	மோத்தல்
23. வெய்யில்	-	வெயில்
24. அமுல்	-	செயல்படும், செயலாக்கம் பெறும்
25. கறார்	-	உறுதியானது, முடிவுசெய்யப்பட்டது
26. சப்ளை	-	வழங்கல், தரப்படும், அளிக்கப்படும்
27. கம்மி	-	குறைவு
28. தாக்கல்	-	பதிவு

29. ரத்து - தள்ளல், கைவிடல், நீக்கம், விலக்கல்
30. பாக்கி - மிச்சம், மீதி
31. வாபஸ் - திரும்பப்பெறல்
32. புகார் - முறையீடு, குற்றங்குறை கூறல்
33. அதீதம் - மிகை
34. அந்தரம் - பரபரப்பு
35. அந்தி - மாலை
36. அந்தியக்கிரிகை - ஈமவினை, இறுதிக்கடன்
37. ஆதாரம் - சான்று, அடிப்படை, நிலைக்களன்
38. இலகு - எளிது, எளிமை
39. கஸ்டம் - துன்பம், கடுமை
40. அநர்த்தம் - அழிவு, கேடு

- நுணாவிலூர் கா. விசயரத்தினம் (இலண்டன்)

சிறுகை அளாவிய கூழ்

வாழைப்பூவிரல்களை விரித்து
பருப்புக்கடைய
உள்ளங்கை காட்டும் குழந்தை
நண்டூறுது
நரியூறுது சொல்லி
கிச்சுக் கிச்சு மூட்டுமுன்னே
சிரித்துவிடுகிறது

இருமல் சத்தத்தை
இதயத்துக்குள்
வலிந்தனுப்புகிறேன்
உன் உறக்கம்
கலைந்துவிடக் கூடாதென

விவசாய நிலத்தில்
விதைக்கப்பட்டு
துளிர்த்திருக்கும்
ஒருவார பயிர்களென
ஒருசேர வளர்ந்திருக்கிறது
உன் மொட்டைத் தலை

ஒவ்வொருமுறையும்
விளையாடுகிறேன்
உன்னிடம் தோற்பதற்காகவே

- இவள் பாரதி

- **ஒரு துளி மழை....**

ஒரு துளி மழை - பின்
மீண்டும் பிரபஞ்சம் ஆரம்பம்....

ஒரு மணியில் இருந்து
சில பருக்கைகளை பெற்றுவிட
எத்தனை போராட்டம்...
அண்டம்... ஆகாயம்...
இரண்டுக்கும் இடையில்...
தினம் தினம் போராட்டம்..

கால்வயிறு நிரப்ப
கால் வைத்து
காணாமலும் போய்விடுவர்...

சேறு... சோறு...
இரண்டுக்கும் நடுவில்
ஒரு உலகப்போர்..

தண்ணீர் வேண்டி கண்ணீர்
கொட்டும் எம் உழவர்
வாழ்வில் தினம் தினம்
உலகப்போர்தான்...

களங்களில் வெற்றி நிச்சயம்
கழனியில் நட்டம் மட்டுமே
இப்போது மிச்சம்..
இறையிடம் இறைஞ்ச
மட்டுமே
முடிகிறது எம்மால்...

பொங்கல்... இப்போதெல்லாம்..
கவலைகளின்
பொங்கலாகவே
முடிந்துவிடுகிறது....

- **தமிழ்நிலா**

ஐக்கிய நாடுகள் அமைப்பு

I - நுணாவிலூர் கா. விசயத்தினம்

மக்கள் ஆட்சி

*ஐக்கிய நாடுகள் என்பது மக்கள் ஆட்சிக்குரிய ஓர் அமைப்பாகும். **அனைத்து நாட்டுச் சட்ட திட்டம், அனைத்து நாட்டுப் பாதுகாப்பு, பொருளியல் வளர்ச்சி, சமூக முன்னேற்றம், மனித உரிமை, சமுதாய உரிமை, சமுதாய விடுதலை, அரசியல் சுதந்திரம், குடியாட்சி உரிமை** ஆகியவற்றில் உயர்ச்சியும், முன்னேற்றமும் பெற்று உலகச் சமாதானம் நிலைத்திருக்க வேண்டுமென்பதுதான் இந்த அமைப்பின் சீரிய நோக்காகும். முன்பிருந்த சர்வதேசச் சங்கங்களை இல்லாதொழிக்கும் நோக்கோடு **இரண்டாம் உலக யுத்தம் முடிந்தபின்,** நாடுகளுக்கிடையே யுத்தம் நிகழாதிருக்கவும், பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினைகளைத் தீர்க்கும் எதிர்பார்ப்போடு **26-06-1945 அன்று ஐக்கிய நாடுகள் அமைப்பு** உருவாக்கப்பட்டு,*
***24-10-1945 அன்று முதல் செயற்படத் தொடங்கியது.** இந்த அமைப்பின் பணிகளைச் செயற்படுத்தப் பன்மடங்கான உதவு அமைப்புகளும் உள்ளன.*

ஐக்கிய நாடுகள் அமைப்பு

*ஐக்கிய நாடுகள் அமைப்பில் தொடக்கத்தில் **51 அங்கத்துவ நாடுகள்** பங்கேற்றுச் செயற்பட்டன. அதில் தற்பொழுது **193 நாடுகள்** அங்கத்துவம் பெற்றுள்ளன. இந்த ஐக்கிய நாடுகள் அமைப்பும், அதன் தனித்துவமான முகவர் நிலையங்களும் வருடத்தில் நடக்கும் தொடர் கூட்டங்களில் பங்குபற்றி நிலையானதும், ஆட்சிமுறை சார்ந்த செயல் முடிவுகளைத் தீர்மானிக்கின்றன.*

இவ்வமைப்பு பின்வரும் ஆறு (06) பிரதான அங்கங்களை உட்கொண்டுள்ளது. அவையாவன:-

*(1) **பிரதான சட்டம் இயற்றும் பேரவை** (முதன்மையான ஆழ்ந்தாராய்கிற பேரணி)*

*(2) **பாதுகாப்புச் சபை** (சமாதானம், பாதுகாப்பு ஆகியவற்றைத் தீர்மானித்தல்)*

*(3) **பொருளியலும் சமூக மன்றமும்** (உலகப் பொருளியல், சமூகக் கூட்டுறவு, வளர்ச்சி ஆகியவற்றின் முன்னேற்றம்)*

*(4) **செயலாளர் அலுவலகம்** (ஐக்கிய நாடுகள் அமைப்புக்குத் தேவையான கல்வி செய்திகள் ஆகிய தகவல்களை வழங்கல்)*

*(5) **அனைத்துலக நீதித்துறை** (பிரதான நீதித்துறை அங்கம்)*

(6) ***ஐக்கிய நாடுகள் அமைப்புப் பொறுப்பாண்மைச் சபை*** *(தற்சமயம் இது இயங்காதுள்ளது).*

உலக ஆரோக்கிய நிறுவனம் (World Health Organization – WHO), உலக உணவுத் திட்டம் (World Food Programme – WFP), ஐக்கிய நாடுகளமைப்பின் உலக நாடுகள் குழந்தைநல அவசர ஏற்பாட்டு நிதியம் (United Nations International Children's Emergency Fund- UNICEF) *ஆகியவை மற்றைய ஐக்கிய நாடுகளின் ஒழுங்குச் செயற்பாட்டின் அடக்கமாகும்.*

ஐக்கிய நாடுகள் அமைப்பின் தலைமை அலுவலகம் நியுயோக் நகரில் அமைந்துள்ளது. இதன் மற்றைய பிரதான அலுவலகங்கள் யெனிவா, நைறோபி, வியன்னா ஆகிய நாடுகளில் அமைந்துள்ளன. *ஐக்கிய நாடுகள் அமைப்பின் முதன்மை வாய்ந்த* ***செயலாளர் நாயகமாகத்*** *தென் கொரியாவின்* ***பான்கி-மூன் (Ban Ki-moon)*** *என்பவர் 2007-ஆம் ஆண்டிலிருந்து இற்றைவரை செயலாற்றிக் கொண்டிருக்கின்றார். இவருக்குத் துணையாய்* ***பிரதி செயலாளர் நாயகமாக யான் எலியஸ்சன் (Jan Eliasson)*** *என்பவரும்,* ***பொதுப் பேரவைத் தலைவராக யோன் வில்லியம் ஆஸ் (John William Ashe)*** *என்பவரும்,* ***பாதுகாப்புச் சபைத் தலைவராக அக்சின் மெய்டியெவ் (Agshin Mehdiyev)*** *என்பவரும் கடமையாற்றுகின்றனர். இவ்வமைப்பில்* ***அரபு மொழி, சீன மொழி, ஆங்கில மொழி, பிரஞ்சு மொழி, ருசியநாட்டு மொழி, ஸ்பானிய மொழி ஆகியவை கருமமொழிகளாகச் செயலாற்றப்பட்டு வருகின்றன. அரபு மொழியை 1973-ஆம் ஆண்டில் கரும மொழியாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. இன்னும் செயலாளர் அலுவலகத்தில் ஆங்கில மொழியையும், பிரஞ்சு மொழியையும் பாவனைப்படுத்தி வருகின்றனர்.***

தற்பொழுது செயலாளர் நாயகமாகக் கடமையாற்றும் ***பாங்கி-மூன்*** *அவர்களுக்கு முன்*
1945-ஆம் ஆண்டிலிருந்து செயலாளர் நாயகமாகச் செயலாற்றியவர்களின் விவரங்களையும் காண்போம்.

1. ட்ரிக்வி லை (Trygve Lie) – நோர்வே நாட்டவர் – 1946-1952

2. டாக் கம்மர்ஸ்க்யோல்ட் (Dag Hammarskjold) – சுவீடின் நாட்டவர் - 1953-1961

3. யு. தான்ட் (U. Thant) - பர்மா நாட்டவர் - 1961-1971

4. கேர்ட் வோல்டிம் (Kurt Waldheim - ஒஸ்றியா நாட்டவர் - 1972-1981

5. யாவியர் பெரெஸ் டீ குஎல்லர் (Javier Perez de Cuellar) – பெரு நாட்டவர் - 1982-1991

6. பொஉற்றொஸ்-ஹலி (Boutros-Ghali) – எகிப்திய நாட்டவர்- 1992-1996

7. கோவி அன்னான் (Kofi Annan) - ஹானா நாட்டவர்- 1997-2006

நிதிப் பங்களிப்பு

இந்த அமைப்புக்கு வேண்டிய நிதியை அங்கத்துவ நாடுகளின் பங்களிப்பு நிரப்பி வருகின்றமையால் சிரமமேதுமின்றிச் செயலாற்றப்படுகின்றது. அமைப்புக்குப் பங்களிப்பதில் முன்னணியில் நிற்கும் 15 அங்கத்துவ நாடுகளையும், அவற்றின் பங்களிப்பு வீதங்களையும் பின்வருமாறு வரிசைப்படுத்திக் காண்போம். அவையாவன:- (1) ***அமெரிக்கா (22%), (****2) **யப்பான் (11%),** (3) **யேர்மனி (07%),** *(4)* ***பிராஞ்சு (05%),*** (5) ***பிரித்தானியா (05%),*** (6) ***சீனா (05%),***
(7) ***இத்தாலி (04%),*** *(8)* ***கனடா (03%),*** *(9)* ***ஸ்பெயின் (03%),*** *(10)* ***பிரேசில் (03%),***
(11) ***ருசியா (02%),*** *(12)* ***அவுஸ்திரேலியா (02%),*** *(13)* ***தென் கொரியா (02%),***
(14) ***மெக்சிகோ (02%),*** *(15)* ***நெதர்லாந்து (02%),*** *(16)* ***மற்றைய அங்கத்துவ நாடுகள் (22%).***

மேற் காட்டிய அமைப்புகள், நிறுவனங்கள், சங்கங்கள், பேரவைகள் ஆகியவை நடைமுறையில் இருந்தும் உலகத்தில் சமாதானம், நீதி, மனித நேயம், யுத்தமின்மை, வறுமை ஒழித்தல், புரிந்துணர்வு ஆகியவற்றை நிலைநாட்ட முடியவில்லையே என்பது ஒரு வருத்தச் செயலென்றே கருத வேண்டியுள்ளது.

மன்னர் ஆட்சி

மக்கள் ஆட்சிக்கு முன்னர் அமைந்திருந்தது மன்னர் ஆட்சியாகும். மன்னர் ஆட்சி மக்களுக்காகவே எழுந்ததென்பதையும், அதில் மக்கள் சிறப்புற்று வாழ்ந்தனரென்றும் நாம் படிக்கும் வரலாற்றுச் செய்திகள் பகர்கின்றன. ***'நெல்லும் உயிரன்றே; நீரும் உயிரன்றே; மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் ...'- (புறநானூறு - 186)*** *என்று சங்ககால இலக்கியம் கூறுவதிலிருந்து மன்னன் மாட்சி புலனாகின்றது. இவ்வண்ணம் மன்னர் மக்களுக்காக வாழ்ந்தனர். அதனாற்றான் மக்களும் மன்னனைத் தெய்வமாக வணங்கினர்.* ***இதை நாம் மக்கள் ஆட்சியில் காண்பதரிது.***

'அறநெறி முதற்றே, அரசின் கொற்றம்' – (புறநானூறு – 55) – 'அறநெறியை முதலாக உடையதே அரசனது சிறப்பு' *என்ற கூற்று அக்கால அரசர் அறநெறி நின்று ஆட்சி புரிந்தனர் என்பது தெளிவாகின்றது. மேலும் அரசன்* ***'ஞாயிறு போன்ற கொடையும், திங்கள் போன்ற அருளும், மழை போன்ற கொடையும் - ஆகிய மூன்றும்'*** *உடையவனாக விளங்க வேண்டும் என்ற கூற்று மன்னனை அன்று ஆற்றுப்படுத்தியது. மன்னனும் அவ்வழி நின்றான்.* ***இதுவும் மக்கள் ஆட்சியில் நிலைக்கவில்லையே!.***

'யாதும் ஊரே யாவரும் கேளிர்', 'தீதும் நன்றும் பிறர்தர வாரா', 'எவ்வழி நல்லவர் ஆடவர் அவ்வழி நல்லை வாளிய நிலனே', 'எத்துணை ஆயினும் ஈதல் நன்றே', 'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே', 'வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன்; மெய் கூறுவல்', 'நல்லது செய்தல் ஆற்றீர் ஆயினும் அல்லது செய்தல் ஓம்புமின்!' *என்ற சங்ககால எட்டுத்தொகை நூல்களில்*

ஒன்றான ***புறநானூற்றுக் கூற்றுக்கள்*** *மன்னனையும் மக்களையும் அறநெறி வழியில் ஆற்றுப்படுத்தி நிற்கின்றன.* ***இவைகள் தானும் இற்றைய மக்கள் ஆட்சியில் புகுரவில்லையே!***

அன்று பண்டைய மன்னர்கள் போர்க் காலத்தில் குழந்தைகள், சிறுவர், பெண்கள், முதியோர் ஆகியோரைப் பாதுகாத்து வந்துள்ளனர். அவர்கள் குடிமனையில்லாத வெளிப் பிரதேசங்களில்தான் போர் புரிந்தனர். சூரிய வெளிச்சம் உள்ள நேரத்தில் மட்டும்தான் போர் நடைபெற்றது. இரவில் போர் புரியாத காலம் அது. ***உதாரணத்துக்குப் பாரத, இராமாயணப் போர்களைக் கூறலாம்.*** *முரசு கொட்டி அறிவித்தல் கொடுத்து விட்டுத்தான் யுத்தம் புரிந்தனர். பிறமுதுகு காட்டி ஓடும் எதிரியைக்கூடக் கொல்லமாட்டாத அறநெறி யுத்தம் நடாத்தினர். அதனால் அவர்கள் இன்றும் நம் மத்தியில் வாழ்கிறார்கள்.* ***இது மக்கள் ஆட்சியில் நிலவவில்லையே!.***

ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான ***இளங்கோ அடிகள் யாத்த சிலப்பதிகாரம்*** *காட்டும் அறநெறிச் செய்திகளான* ***'பொய்யுரை அஞ்சுமின்! ஊனூண் துறமின்! உயிர்க்கொலை நீங்குமின்! தானம் செய்மின்! தவம் பல தாங்குமின்! செய்ந்நன்றி கொல்லன்மின்! பிறர்மனை அஞ்சுமின்! பிழைஉயிர் ஓம்புமின்! அறமனை காமின்! அல்லவை கடிமின்! கள்ளும், களவும், காமமும், பொய்யும் ஒழிமின்! இளமையும், செல்வமும், யாக்கையும், நிலையா, செல்லும் தேஎயத்துக்கு உறுதுணை தேடுமின்!'*** *என்பன அன்றைய மன்னனிடமும் மக்களிடமும் ஊடுருவி நின்றதுபோல்* ***இன்றைய மக்கள் ஆட்சியில் ஊடுருவ மறுத்துவிட்டதே!***

அன்று மன்னர் அரண்மனை வாயிலில் ஒலி எழுப்பும் மணி ஒன்றைக் கட்டித் தொங்க விடுவர். மக்களுக்கு மற்றவர்களால் துன்பம் ஏற்படுமிடத்து அவர்கள் அரண்மனை நாடி இந்த மணியை அடித்தால் காவல் காப்போன் வந்து விசாரித்து அவனை மன்னனிடம் அழைத்துச் சென்று மன்னனால் விசாரிக்கப்பட்டு நீதி வழங்கப்படுவது அக்கால வழக்கமாகும். ***இவ்வரிய செயற்பாடு மக்கள் ஆட்சியில் இன்றில்லையே!***

அன்று ***பாண்டிய மன்னன் நெடுஞ்செழியன்*** *ஊடியிருந்த பொழுது,* ***பாண்டிமா கோப்பெருந் தேவியின் காற்சிலம்பைக் கோவலன்*** *திருடினான் என்ற பொய் வழக்கைத் தீர விசாரியாமல் கோவலனைக் கொன்றுவிட்டான். இதை அறிந்த கோவலன் மனைவி* ***கண்ணகி*** *மன்னனை அணுகிக் கோவலன் கள்வனல்லன் என்றும், அச்சிலம்பை விற்பதற்காகவே கோவலனிடம் கொடுத்ததென்றும், மற்றச் சிலம்பு* ***'இதுதான்'*** *என்றும் காட்டி விவாதிக்க, மன்னன் தவறை உணர்ந்து* ***'நானே கள்வன்'*** *என்று கூறி உயிர் துறந்தான். இதை அறிந்த கோப்பெருந்தேவியும் உடன் உயிர் துறந்தாள். அறநெறி தவறிய தீர்ப்பு இரு ஒத்த உயிர்களைக் காவு கொண்டது. ஆனால் நீதி நிலைநாட்டப்பட்டது.* ***இது மக்கள் ஆட்சியில் முடியுமா?***

ஐக்கிய நாடுகள் அமைப்பில் 193 மக்கள் ஆட்சியினர் உள்ளனர். இருந்தும் யுத்தங்களாலும், கலவரங்களாலும், உள்நாட்டுக் குழப்பங்களாலும், எல்லைப் பிரச்சினைகளாலும் உயிர்ச் சேதங்கள் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன. மன்னர்

ஆட்சியில் இவ்வாறான அமைப்புகள் இல்லாதிருந்தும் உயிர்ச் சேதங்கள் பெரியளவில் நிகழவில்லை. அன்றிருந்த ***மூவேந்தர்களான சேரர், சோழர், பாண்டியர்*** *மிக வல்லவர்களாய் ஆட்சி புரிந்தனர். இவர்களுக்குச்* ***சிற்றரசர்கள் திறை செலுத்தி*** *அவர்களுக்கு அடங்கி வாழ்ந்ததால் அவர்களுக்கிடையில் சண்டை, சச்சரவுகள் எழவில்லை.* ***இன்றைய மக்கள் ஆட்சியினர், மன்னர் ஆட்சி முறைகளைப் பின்பற்றினால் நாட்டில் மனிதநேயத்துடன் அறநெறி வாழ்வியல் நிலவிச் சமாதானம் நிலைத்து மக்கள் மகிழ்வுற்று வாழ்வரென்பது திடமெனலாம்.***

(அனைத்துலகப் பெண்கள் எழுச்சியாக இப் பாடல் வெளியிடப்படுகிறது)

கும்மியடி வஞ்சியே கும்மியடி
கும்மிப் பாடல் (வெண்பா இனம் சார்ந்தது)

கும்மியடி வஞ்சியே கும்மியடி - நன்றே
குலவியே கொஞ்சிநீ கூடிடுவாய்
இம்மை மறுமையின் இன்பமே - இந்த
இகத்தின் பெருமையே ஏந்திழையே

தாயுடன் தாதியாய்த் தங்கையாய்ச் - சான்று
தாரமாய்த் தண்குலப் பெண்ணுமானாய்
பாயும் நதியெனப் பாவலர் - நாளும்
பாடிப் புகழும் பதுமையானாய்

இல்லறம் காத்திடும் பண்பே - உலகில்
ஈடிலாத் தோன்றலின் மாணுயர்வே
சொல்லறம் பேணிடும் பாவாய்நீ - என்றும்
சோர்விலா நல்லறம் பூண்டிடுவாய்

தாய்மை துலங்கும் தளிரே - உயர்
சான்றுடைப் பெண்ணே உயர்தகவே
வாய்மையின் வாழ்வே வளமே - எழில்
வனப்புறு வண்ண வலம்புரியே

கல்வியில் கட்டிலா ஞானத்தில் - ஆற்றலில்
காசினி மீதினில் ஓங்கிநின்றாய்
செல்வச் சிறப்புடன் சார்ந்தோர் - திகழச்
சேர்த்தாய் நிதிதனைத் தேன்மொழியே

வீட்டினுள் உந்தனைப் பூட்டியே - முன்னோர்
விலைமதிப் பெண்ணிடா மாந்தரானார்
நாட்டினைக் காக்கப் புறப்பட்டாய் - நன்றே
நானிலம் போற்றிடும் நங்கையானாய்

திருமண வாழ்வை வெறுத்தாய் - செயற்
திறமையைக் காட்டியே திண்மையுற்றாய்
கரும்பெனும் பள்ளி துறந்தே - கழுத்திற்
கயிற்று விடம்தனைத் தாங்கிநின்றாய்

கொடும்பகை நீக்கிடப் பூமியில் - தோன்றிக்
குவலயம் வாழ்த்தும் குலவுபெண்ணே
வஞ்சனை செய்து கொடியவர் - உன்னை
வாட்டினர் வஞ்சி வருந்தாதே

காலமும் காட்சியும் மாறுமே - உந்தன்
கனவும் விரைவினில் மெய்ப்படுமே
ஞாலத்தின் நீதியும் ஓங்கிடுமே - பாரினில்
ஞாயிறு கூறிய வார்த்தையாமே!

- பவானி தர்மகுலசிங்கம்-

நுரைகள்

ஏதோ சிறைவாசம் போனமாதிரி ஐந்து வருடங்க ளை வெளிநாட்டில் தொலைத்துவிட்டு ஊர் வந்த என்னை அந்த சி ரி பி பஸ் விட்டு விட்டுசெல்கி ன்றது.

“எப்படியாவது நாட்டுக்குப்போகவேண்டும்”க டைசியாக விமானத்தில் ஏறி சீட்டில் அமரும் வ ரைஇருந்த அவா ஊரைக்கண்டதும் மேகக் கூட்ட த்துள்தொலைந்த நிலவின் கதியாக...

சீ ரி பி விட்ட இடத்திலிருந்து ஒரு முக்கால் மை ல் சென்றால்.. கடைசியாக வீட்டில் இருந்து வந்த கடிதத்தில்..."வீட்டு வேலைகள் எல்லாம்முடிந்து விட்டது நம்மட வீட்டைப்போ ல ஒரு வீடு நமது ஊரிலேயே கிடையாது”... இப்படியாக தங்கைதான் எழுதி இரு ந்தாள். இந்த வீட்டைஅடைய நான் பல குறுக்குத்தெருக்களை சந்திக்கவேண்டீருக் கும்.

முதலில் நான் சந்திக்கும் நாலாம் குறுக்குத்தெரு எனது திசையில் முதலாம் குறுக் குத்தெருவாக கடந்து விடுகிறது .தெருவிற்கு பெயர் போட்டவன்இங்கிருந்து ஆர ம்பித்திருந்தால் இதை முதலாம் குறுக்காக குறிப்பிட்டிருக்கக்கூடும். .." **அவன் அப்படி செய்யாமைக்கு சிலவேளை அவன் மனைவி...".**

நம்மட வீட்டிலிருந்து மெயின் றோட்டுக்கு போவதற்கிடையில் முதலாவதாக வ ருகிற குறுக்குத்தெருவை முதலாம்குறுக்குத்தெரு என்று போட்டால்தான் நான் நீ ங்க சொல்றமாதிரி..."இப்படி ஏதாவது சரசம்கூட செய்திருப்பாள்.எது எப்படியோ நான் அவன்மனைவிக்கு எதிரானவன் அல்லது எதிர்கருத்துக்கொண்டவன் என்பது ...தற்போதய முதலாம் குறுக்குத்தெருவுக்கு நான் மனதை பறிகொடுத்தவளின்பெ யரைத்தான் போடவேண்டுமென நினைத்தேனோ அந்த வினாடியில்...நான் அவ ன் மனைவிக்கு எதிரிதான்...சும்மா போங்கள்.

என்னைப்போல் மனதை பறிகொடுத்தவர்கள் எல்லாம் நினைப்பார்களாயிருந் தால் பல புள்ளிகளின் மனைவிகளை எதிர்க்கவேண்டிவரும்...பலபுதிய பாதைகள் அமைக்க வேண்டிய அவசியம் ஏற்படும்...சில பாதைகள் சிலரின் வீட்டுக்குள்ளா லும் போகக் கூடும்...இன்னும் சற்றுசிந்தித்தால்ஊரே ஒரு வெளியாக இருக்கும்,அ ப்போது “மயானம்” என்றுகூட பெயர் சூட்ட வேண்டிய அவசியம் ஏற்படலாம்.

என்னைக் கண்டு.. வாசல் கூட்டிக்கொண்டு நின்ற சுஸானா வீட்டுக்குள் ஓடிச்சென்றது எனக்கு நன்றாகதெரிகின்றது, வீட்டுக்குள்....அவள் முதலில்தரிசிக்கும்,தன் கணவனிடமோ அல்லது தன் தாயிடமோ இந்நேரம் என்னைப்பற்றி சொல்லியிருப்பாள் , எனக்கு...அவள் ,முதலில் அவளதுதங்கசியிடம் சொல்லவேண்டும் என்ற, ஒரு சின்ன ஆசை,எனது விருப்பங்களும் ஆசைகளும் தொண்ணூறுவீதம் நிறைவேறுவதில்லை என்பதற்குசுஸானா அவளது கணவனிடம் பேசிக்கொண்டிருப்பதே ஒரு சின்ன உதாரணம்.

நிறைவேறாத கற்பனைகளுக்கு மன்னனாகிவிட்ட நான்,இன்னும் கிடுகு களையா வேலிகளை ஏதோ ரா ணுவ அணிவகுப்பை ஏற்றுக்கொளும் தோரணையில் நடைகளை எண்ணிக்கொண்டிருக்கின்றேன் ,பின்னால் ... எனது செண்ட் வாசனையில் மூக்குடைபட்டுப்போன சில சின்னஞ்சிறுசுகள்வலம் வந்துகொண்டிருக்கிறார்கள்.விஞ்ஞானிகள் சொல்வதுபோல் நான் ஆரம்பகால மனிதனாக இருந்திருந்தால் ..." பிரயானக்களைப்பாக இருக்கிறதுகொஞ்சம் வாலைத்தூக்கிக்கொண்டுவாருங்கள் "இப்படி இந்த சிறுசுகளிடம் சொல்லியிருப்பேன்.

ஊரில் இருந்தபோதே என்னக் கண்டு குரைத்து பழக்கப்பட்டுவிட்ட மர்ழியா வீட்டு நாய்,இப்போதும்கூட என்னைக் கண்டு பலமாககுரைத்துக்கொண்டு கேற்றுக்குள் மறைந்துகொள்வதில் எதுவித மாற்றமும் இல்லை என்னைக் காணாவிட்டால் அதற்கு குரைக்கக்கூட தெரிந்திருக்கமாட்டாது என்பதை புரிந்துதானோ என்னவோ அது நன்றி சொல்லும் பாவனையில் சில வேளை குரைத்துக்கொண்டு கேற்றுக்குள்மறைந்துவிடுவதும் உண்டு.சில வேளை ஓடிப்பழகும் ஆசையில்தானோ என்னவோ அது என்னைத் துரத்த முயல்வதும் உண்டு,அதுகுரைக்க,நான் "அடி..அடி..." என்று சொல்லிக்கொண்டு ஓட வேண்டும் இப்படி ஒரு ஆசை அதற்கு,எப்படியோ எனக்கு ஊரில்...எதிரிகள் இல்லாகுறைக்கு மர்ழியா வீட்டில் அதை நன்கு வளர்த்திருக்கிறார்கள்.

அதோ கைக்கெட்டிய உயரத்தில் சிவப்பாக ஒரு பெட்டிதெரிகின்றதே,அந்தப் பெட்டிக்குள்..
எத்தனை சரித்திரங்கள்தான் ஒளித்திருக்கின்றன.ஒரு காலத்தில் சிவப்பு பெட்டிகளை கண்டாலே மாலை சூடவேண்டும் என்று ஆசைப்பட்டிருக்கின்றேன்.
அதோ பெட்டிதான் எங்கள் கிராமத்தின் தபாலகம்,ஊருக்குள் தபாற்கந்தோர் திறக்கும் முடிவைக்கைவிட்டு விட்டு இப்படி அந்தக் சந்திக்கடையில் தபால் தபால் பகுதியினர் கொழுவி விட்டார்கள்.அதை முதன் முதலாகக் கொழுவியபோதுதான் எங்கள் ஊர் ''எம் பி'' க்குக் கூட ஒரு வரவேற்பும்,கழுத்தில் பூமாலைகளும் அந்த சந்தியில் காத்திருந்தன. அன்று பட்டாசு சத்தங்களுடன் கொழுவிவிட்டதுதான்,அடுத்த நாள் சந்திக்கடை முதலாளி அதை தரையில் இறக்கி வைத்துவிட்டார்.
நாளடைவில்...கடையில் தேனீர் குடிக்க வரும் வாடிக்கையாளர்களுக்கு ஓர் இருப்பிடமாகவும்,சில வேளை கரம் விளையாடுவதற்கோ,காட்ஸ்

விளையாடுவதற்கோ உயரம் தெவைப்படும் போதும்,இந்த தபால் தபால் பெட்டிதான் கைகொடுக்கும்.காலையில் கடை திறக்கும் நேரம் வரும் வரையும்,கடை திறக்காமல் போகும் நாட்களிலும்தான் அந்தப் பெட்டி உயரத்தில் இருக்கும்.மற்ற நேரங்களில் அந்தப் பெட்டியின் சேவை கடை முதளாளிக்குஅத்தியாவசியமாக ப் போய்விட்டதில் தபால் பகுதியினருக்குத்தான் நன்றி சொல்ல வேண்டும்.

"2 பி எம்" என கறுப்பு மையால் தபால் எடுக்கும் நேரத்தை அப்பெட்டியில் குறிப்பிட்டிருந்தபோதும்,அந்த நேரத்தில் கரம், அல்லது காட்ஸ் விளையாட்டுக்கள் நடைபெற்றுக்கொண்டிருந்தால் தபால் எடுக்கவரும் காக்கிச்சட்டை விளையாட்டுக்கு :டிஸ்டொப்" பண்ணக்கூடாது என்ற கரிசனையில் அடுத்த நாளைய "2 பி எம்" முக்கு வருவதும்,சில வேளை விளையாட்டு வீரர்களின் சிகரெட்டுகள் கூட காக்கிச் சட்டைக்கு டாட்டா காட்டி விடுவதும் கேட்பார் இல்லாத ஒரு நடைமுறையாகி விட்டது."இப்படி எல்லாம் நீங்கள் நடந்து கொள்வது தேசத் துரோகம்"...இப்படி விளையாட்டு வீரர்களிடம் சொல்வதற்கு நான் பல முறை முயற்சித்து, வீரர்களின் முறுக்கு மீசைக்குப்பயந்த சந்தர்ப்பங்களும் உண்டு.

என்னதான் ஊழல்கள் நடந்தாதாலும் எனக்கு அந்தப்பெட்டியைக் கண்டாலே போதும் ,அதிலும் ஜெஸிமா வின் தம்பி அந்த கடைப்பக்கம் வந்தாலே...அவன் நேயர் விருப்பங்களுக்கு அனுப்பும் தபால் அட்டைகளைகூட எனக்குத் தான் ஜெஸிமா ...சொல்லியிருப்பாள் என்ற கற்பனையில் சூடான பிளேண்டிக்கு ஓடர் போட்ட நாட்கள்தான் எத்தனை.?

ஜெஸி..சினிமா நடிகைகள் தங்கள் பெயரை சுருக்கி விடுவது போல் நானும் ஜெஸிமாவிற்கு ஜெஸியாக சுருக்கி அவளுக்கு ஒரு புதிய பெயரை வைத்துவிட்டேன் .அவள் பெற்றோர்கள் என்மீது வழக்கு தொடுக்காவிட்டால் சரிதான்.

ஜெஸியுடன் அடிக்கடி நேரில் கதைத்துக்கொள்ள முடியாவிட்டாலும் இந்த தபால் பெட்டியின் சேவை கடை முதலாளியைவிட எனக்குத்தான் அவசியமாக இருந்தது. சும்மாவா...ஒரு முறை ..."உன்னைக் காணாத போதெல்லாம் எனக்கு ஒரு மாதிரியாக இருக்கு"...இப்படி நான் எழுதுவதற்கு நினைத்து கொண்டிருந்த போதுதான் முத ன் முதலாக ,அவள்.."உன்னை" என்ற இடத்தில் "உங்களை" என்று என்னைக் குறிப்பிட்டு ஒரு குறுகிய (ஆனால் எனக்கு பெரிய) கடிதம் அனுப்பியிருந்தாள்.அன்றுமுதல் ஆரம்பித்த தபால் சேவைக்கு வேறாக ஏதாவது கொடுக்கத்தான் வேண்டும்.அல்லது உலக காதலர்களின் நினைவாக முத்திரை வெளியிடும்படி ஆலோசனை சொல்ல வேண்டும்.

நாளடைவில் எங்களுக்குள் கடிதங்களின்ல்தான் எதை எழுதுவது என்ற ஒரு வசனத்தட்டுப்பாடு ஏற்பட்டதின் பிரதிபலிப்பாய் வீட்டில் ஒரு திகதியில் "என்ன கறி" என்று கேட்டு எழுதும் அளவிற்கு கடிதங்களும் சிறுத்துப் போய்விட்டன, எப்படி இருந்தபோதும் "அந்தக்கடிதம் கிடைத்ததா?"என்றாவது ஒரு கடிதம் எழுதவேண்டும்போல் இருக்கும்.

நாட்கள் கவலை இல்லாமல் ஓடிக்கொண்டேஇருந்தன,நான் எதிர்பார்க்கவே இல்லை...என் தங்கையின் கழுத்தில் தாலி ஏறுவதென்றால் நிசாருக்கு சீதனமாக வீட்டுடன் ஐம்பதினாயிரம் ...எங்கு செல்வது?..கடலுக்கப்பால் செல்வதைவிட வேறு வழி இருப்பதாகத்தெரியவில்லை .

வெளியே சென்று ஒருவருடத்தில் காரணமின்றி நிறுத்தப்பட்ட அவளது தொடர்புக்கும்,,நான் நித்திரை இன்றி தொலைத்த நாட்களுக்கும் ,என்றோ ஒரு நாள் பதில் சொல்லித்தான் ஆகவேண்டும்.

எனது அபிப்பிராயப்படி...இன்று நான் ஊர் வருவது ஜெஸிக்குத் தெரிந்திருந்தால் அவள் வீட்டு முற்றத்தால் செல்லும் அந்த முதலாம் குறுக்குத்தெருவே சிரித்துக்கொண்டிருக்கும்,ஆனால்...இன்னும் ஏன் அவள் என் மடல்களுக்குப் பதில் போடாமல் போனாள்? ஊரில் இருந்தவேளை வசனங்களுக்குத் தட்டுப்பாடாகிப் போன அந்த நாட்களை எண்ணிப்பார்க்கும்போது அவள் மேல் கொண்ட கோபங்கள் கூட எங்கோ ஓடி மறைந்துவிடும்

தங்கையின் கடிதத்தில் குறிப்பிட்ட புது வீட்டின் “ஹோலிங்” பெல்லை அழுத்திவிடுகின்றேன்.பின்னால் வந்த சின்னஞ்சிறுசுகள் எனது எனது சென்ற் வாசத்தை தொடர்ந்து சகித்துக்கொள்ளத் திரானியற்றுப் போய் எங்கோ ஒரு தெருவில் தொலந்திருக்கவேண்டும்.

வீட்டுக் கதவைத் திறப்பவர்கள் யாரா இருந்தாலும் முன்னறிவிப்பு இன்றி நிற்கும் என்னைக் கண்டு சில வினாடிகள் த்ங்கள் கண்களையே கசக்கப்போகிறார்கள்.

“ஒரு கடிதமாவது போட்டிருக்கக்கூடாதா?”...கோபத்துடன் மூஞ்சியை நீட்டிக் கொண்டாள் தங்கை.அவளுக்கு வந்த கோபத்திற்கு திறந்த கதவை மூடியிருக்கவேண்டும்.அவள் அப்படிச் செய்யாமைக்கு சிலவேளை நான் விமான டிக்கெட் எடுக்க கஷ்டப்படவேண்டியிருக்கும் என நினைத்திருக்கவேண்டும்.மூஞ்சை நீட்டிக்கொண்டு உம்மாவைக்கூப்பிட்டாள் .இனி..உம்மாவின் கோப மூஞ்சை தரிசிக்கவேண்டியதுதான்.

****

தொலைந்து போன ஐந்து வருடங்களை நினைக்கும்போது வேதனையாக இருந்த போதும் மீண்டும் விமானம் ஏறினால் என்ன என்று கேட்கும்படி.....யாரை என் தங்கைக்கு மாப்பிள்ளையாக்க நினைத்தேனோ .....அவன்...நிசார்... நான் நினைக்காத ஒன்றைச் செய்திருந்தான் .ஐம்பதினாயிரம் கேட்டவன் ஐந்து சதம் கூட வாங்காமல்...என்..ஜெஸியை...

“சரி ...ஜெஸி என்னை எப்படி என்னை மறந்தாள்?”

இப்படி பின்பொருபொழுதில் நண்பனிடம் கேட்டதில் ...

“அதுவா..நீ யாரோ ஒருத்தியை முடிக்கத்தானே போகிறாய், அவளை முடித்து, அவளுடன் ..உன்னை மறந்துபோகும்போது எல்லாம் புரியும்,இப்போ உனக்கு எது சொன்னாலும் புரியாது ” என்றவனிடம்

”நான் எவளையும் முடிக்காவிட்டால் ...?”

எனது அடுத்த வினாவிற்கு அவன் கூறிய “மடையா...” என்ற அந்த வார்த்தையிலேயே ஒரு காலத்தில் முதலாம் குறுக்குத்தெருவிற்கு அவளின் பெயரப் போடவேண்டும் என நினைத்தது எவ்வளவு தப்பாகிப்போய்விட்டது என்பதைப் புரிந்து கொண்டேன்.ஆனால் உலக காதலர்களின் நினைவாக ஒரு முத்திரை வெளியிடவேண்டும் என்று தபால் பகுதியினருக்கு ஆலோசனை கூறவேண்டும் என்பதில் எதுவித மாற்றமும் ஏற்படவில்லை.

- எம்சீயே.பரீத் *(இலங்கை) (நன்றி தினகரன் 1987)*

சிக்மண்ட் பிராய்டின் உளவியல் ஆய்வுகளும் போர் பற்றிய அவதானிப்புகளும்

- ஈழக்கவி

- தொப்பி
- காற்சட்டை சப்பாத்து
- இடுப்பில் ஒரு கத்தி
- மீசை
- அனைத்தோடும் பிள்ளைகள்
- கருப்பைக்குள் இருந்து
- குதிக்கின்ற ஒரு காலம் வரும்.
-
- அந்த
- தொப்பி சப்பாத்துச்
- சிசுக்களின் காலத்தில்
- பயிர் பச்சை கூட இப்படியாய் இருக்காது ....
-
- சோளம் மீசையுடன் நிற்காது
- மனிதனைச் சுட்டுப்
- புழுப்போல குவிக்கின்ற
- துவைக்கை ஓலைக்குள்
- மறைத்து வைத்து ஈனும்.
-
- வெள்ளை சிவப்பு
- இள நீலம் மஞ்சல்
- என்று கண்ணுக்கு
- குளிர்ச்சியினைத் தருகின்ற

- *பூமரங்கள் கூட*
- *சமயத்திற் கொத்தாற் போல்*
- *துப்பாக்கிச் சன்னத்தை*
- *அரும்பி அரும்பி*
- *வாசலெல்லாம் சும்மா*
- *தேவையின்றிச் சொரியும்*
-
- *குண்டு குலை குலையாய்*
- *தென்னைகளில் தொங்கும்*
- *இளநீர் எதற்கு?*
- *மனிதக் குருதியிலே*
- *தாகத்தைத் தணிக்கின்ற*
- *தலைமுறைக்குள் சீவிக்கும்*
- *கொய்யா முள்ளத்தை*
- *எலுமிச்சை அத்தனையும்*
- *நீருறுஞ்சி இப்போது*
- *காய்க்கின்ற பச்சைக்காய்*
- *இரத்தம் உறுஞ்சும்*
- *அந்நேரம் காய்க்காது*
- *வற்றாளைக்கொடி நட்டால்*
- *அதில் விளையும் நிலக்கண்ணி*

(எட்டாவது நரகம்; 1988:37, 38)

கவிஞர் சோலைக்கிளியின் இக்கவிதை வரிகளில் யுத்தத்தின் பயங்கர அதிர்வு, அதிர்ச்சி தரும் படிமமாகப் பதிவாகியுள்ளது. யுத்த சூழலின் உளவியல் ரீதியான தாக்கமே இக்கவிதைக்குக் காரணம் எனலாம்.

போர் கொடூரமானது. பேராசிரியர் எம்.எஸ். எம். அனஸ் இன் வார்த்தைகளில் சொல்வதானால், "போர் மனித சமூகத்தின் சாபக்கேடு. தொடர்ச்சியான பீதியையும் வன்முறைச்சாவின் அபாயத்தையும் போர் கொண்டு வருகிறது. மனித வாழ்க்கையை இருண்டதாக, தரித்திரமுடையதாக, அருவருப்பானதாகக் காட்டுமிராண்டித்தனமானதாகப் போர் மாற்றுகின்றது." (இஸ்லாத்தின் தோற்றம்; 1970:170). இந்த கொடூரபோரின் வரலாறு மனித பிறப்போடு பிறந்து, இன்றுவரை தொடர்கிறது.

ஐரோப்பாவில் பாசிச-நாசிச நாசவேலைகள் பரவியிருந்த சூழலில் வாழ்ந்தவர் சிக்மண்ட் பிராய்ட். சோலைக்கிளியின் கவிதை மொழியில் சொல்வதானால், "மனிதக் குருதியிலே தாகத்தைத் தணிக்கின்ற' காலத்தில் (1930) வாழ்ந்தவர்.

சிக்மண்ட் பிராய்ட் போன்ற சிந்தனையாளர்கள் வாழ்ந்த இந்த யுத்த சூழலை "ஜேக்ஸ் ஹாசூன்" பின்வருமாறு விபரிக்கிறார்.

"கிழக்கே ஸ்பானியம் அவர்களது படைப்புகளை இருளில் தள்ளியது. வடக்கே நாஜிகளின் ஆட்சி அவற்றை அழித்தது... எதிர்ப்பையும் அழிவையும் விட சதியும் ஏளனமும் நடுநாயகமாகிப் போன ஒரு பண்பாட்டுச் சூழலில் தனிமனிதத்துவம் என்ற கருத்து புறக்கணிக்கப் பட்டதைப் போல இந்தப் படைப்பாளிகளும் ஒதுக்கப்பட்டார்கள். சாபக்கேடாகச் சொந்த இனங்களைத் தாம் சென்ற இடமெல்லாம் இட்டுச் சென்ற மோதல்கள், முச்சந்தியில் பிற இனங்களுடன் மோதல்கள் போன்ற வற்றையெல்லாம் இந்த அசாதாரணப் பண்பாட்டின் பிறந்த வீட்டில் ஒவ்வொரு இனமும் கட்டுக்குள் வைத்திருந்தது போலத் தோன்றியது."

அசாதாரண யுத்தத்தின் விளைவுகளை அனுபவித்த சிக்மண்ட் பிராய்ட், 'யுத்தம் எதற்காக?', 'யுத்தத்திலிருந்து மீள்வது எவ்வாறு?' என்று உளவியல் ரீதியாக ஆராய முனைந்தார். இந்த ஆய்வு சிக்மண்ட் பிராய்டுக்கும் ஆல்பர்ட் ஐன்ஸ்டீனுக்கும் (18779-1955) இடையில் நடந்த கடிதப் போக்குவரத்துக்கூடாக, புதிய பரிமாணங்களைக் காணலாயிற்று.

இக்கடிதங்கள் (அதாவது, யுத்தம் பற்றிய ஆய்வு ரீதியான கடிதங்கள்) "போர் ஏன்?" (Way war?; 1933) என்ற நூலில் தொகுக்கப்பட்டுள்ளன. பிராய்டின் இக்கடிதம் பற்றி நோக்குவதற்கு முன், அவரைப் பற்றியும் அவரது உளவியல் ஆய்வுகள் பற்றியும் ஆராய்வது பொருத்தமானது.

சிக்மண்ட் பிராய்ட் யார்?

'உளவியல் பகுப்பாய்வின் தந்தை' என புகழப்பட்டவர் பிராய்ட் (1856-1939). உளவியல் ஆய்வுகளில் பிராய்டின் பங்களிப்பு மிக முக்கியமானது. விஞ்ஞான வரலாற்றில் முக்கியமானவர்களான சார்ள்ஸ் டார்வின், நியுற்றன் போன்றவர்களுக்குச் சமமான இடம் பிராய்டுக்கு தரப்பட்டுள்ளது. இவரது கோட்பாடுகள் உள்ளம் பற்றிய பல புதிய அணுகு முறைகளை முன்வைத்தன. ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் இவரை 'இயல்புணர்ச்சிகளின் உலகில் ஓர் வல்லுநர்' என பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முன்னர் ஆஸ்திரியப் பேரரசில் அடங்கியிருந்ததும், தற்போது, செக் குடியரசில் உள்ள 'பி ரீபர்க் என்ற ஊரில் பிறந்தவர் பிராய்ட். இவருடைய தந்தை ஜேகப் பிராய்ட் (Jakob freud) . சிக்மண்ட் பிராய்ட் பிறக்கும்போது அவரது தந்தைக்கு வயது 41. ஜேகபின் இரண்டாம் மனைவிக்குப் பிறந்த 8 பிள்ளைகளில் இவரே மூத்தவர். குடும்பம் வறுமையில் வாடியதால் பிராய்ட் தம் உயர்விற்கு தம்முடைய கல்வி வளர்ச்சியையே நம்பியிருந்தார். பிராய்டின் நுண்ணறிவுத் திறனைக் கண்ட தந்தை இவருடைய கல்விக்கு மிகவும் ஊக்கமளித்து வந்தார்.

பிராய்ட் 1873இல் வியன்னாவிலுள்ள புகழ் பெற்ற மருத்துவப் பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். டார்வினியப் பேராசிரியராகிய கார்ள் கிளாஸ் (Karl Claus) என்பவரின் கீழ் மருத்துவத்தைக் கற்றார். மருத்துவராகிப் பணி புரிவதை விட, ஓர் அறிவியல் ஆராய்ச்சியாளராக இருப்பதையே இவர் விரும்பினார். 1884இல் உளமருத்துவம் பற்றி மிகச் சிறந்த கட்டுரையொன்றை வெளியிட்டார்.

பிராய்டின் முக்கிய கண்டுபிடிப்பு 'இயக்க உளவியல்' (Dynamic Psychology) ஆகும். இயக்கவியல் விதிகளை மனிதனின் ஆளுமைக்கும் அவனது உடலிற்கும் உபயோகிக்க முடியும் என்பதனை கண்டுபிடித்ததே இவருடைய உயரிய சாதனையாகும். நவீன விஞ்ஞான வளர்ச்சியிலும் இது ஒரு மைல்கல் ஆகும். இயக்கவியல் உளவியல் மனிதனின் குணவியல்புகளில் ஏற்படுகின்ற மாற்றங்களை விளக்குகின்றது.

மனித மனதினை பிராய்ட் இரண்டு பாகங்களாக பிரித்தார். ஒன்று, உணர்வு மனம் (Conscious Mind). இரண்டு, உணர்விற்கு அப்பாற்பட்ட ஆழ் மனம் (Sub.-Conscious Mind). மனதின் முக்கால் பங்கினை உள்ளடக்கியிருப்பது உணர்விற்கு அப்பாற்பட்ட ஆழ் மனம் ஆகும். எல்லா விதமான அபிலாசைகளையும் எதிர்பார்ப்புகளையும் இது புதைத்து வைத்துள்ளது. இந்த ஆழ்மனம்தான் மனிதனின் எல்லா பிரச்சினைகளுக்கும் மூலம். கவிஞர்களுக்கும் சிந்தனையாளர்களுக்கும் இந்த ஆழ்மனம் அதிகரித்த நிலையில் இருப்பதாக இவர் கூறினார். மேலும் மனித இயல்புகள் பின்வரும் மூன்று சூழ்நிலை உணர்வுகளாலேயே ஏற்படுவதாக பிராய்ட் கூறினார். அவையாவன,

1. உணர்வால் உந்தப்படும் இயல்பு (Id)
2. நான் என்னும் முனைப்பால் உந்தப்படும் இயல்பு (Ego)
3. மீஅகத்தால் உந்தப்படும் இயல்பு (Super Ego)

இம்மூன்று இயல்புகளுக்கு இடையில் நடக்கும் போராட்டமே மனித ஆளுமையை வடிவமைப்பதாக கூறினார்.

மனதின் செயற்பாடுகளைச் செய்வதற்குரிய சக்தியினை 'மனச் சக்தி' என பிராய்ட் குறிப்பிடுகின்றார். வெப்ப சக்தி, மின் சக்தி போன்று மனச் சக்தியும் சக்தியின் ஒரு வடிவமாகும். உடலினை இயக்குகின்ற உடற்சக்தியே தேவையான தருணங்களில் மனச்சக்தியாகவும் மாறிவிடுவதாக கூறினார். மின்சக்தி பல்வேறு தொழிற்பாடுகளுக்கு பயன்படுத்தப்படுவது போல மனச் சக்தியும் உளவியல் செயற்பாடுகளுக்கான சிந்தித்தல், உணர்தல், ஞாபகப்படுத்துதல் முதலானவற்றை செய்வதற்கு உதவுவதாக பிராய்ட் நம்பினார்.

மனிதன் பிறக்கின்றபோது வெற்றுத்தாள் போல்தான் பிறக்கின்றான். இவ்வுலகில் அவன் அவதானிக்கின்ற, அறிகின்ற அனுபவங்கள் மூலமாக பகுத்தறியும் திறனை பெற்றுக்கொள்வதாக பிராய்ட் குறிப்பிட்டார். இத்தகைய

கருத்தினை ஜோன் லொக் (John Locke; 1632 - 1704) இன் மெய்யியலிலும் அவதானிக்க முடிகின்றது.

நரம்புச் சீர்கேட்டின் அறிகுறிகளின் தோற்றக் காரணங்களைக் கண்டறியும் முயற்சியில் ஜோசப் பெருயர் (Joseph Breurer) என்பவர் தடையில் தொடர்பு முறையைப் (Free Association) பயன்படுத்தினார். பிராய்ட் அவருடன் சேர்ந்து நடத்திய ஆய்வுகளின் பயனாக (Studies In Hysteria; 1895) என்ற நூலை வெளியிட்டார். ஒரு கட்டத்தில் இருவரும் கருத்து வேறுபாடு கொண்டு பிரிந்து செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. 'சிற்றின்ப முரண்பாடுதான் உணர்ச்சி அதிர்ச்சி நோயின் முக்கிய காரணக் கூறாக இருக்கிறது' என்பதில் தான் அவர்களிடத்தில் கருத்து முரண்பாடு ஏற்பட்டது. அத்தகைய முரண்பாடுகள் தாம் உணர்ச்சி அதிர்ச்சி நோயின் மையமாக இருக்கின்றன என்பதை பிராய்ட் உறுதிப்படுத்தினார். அதன் பிறகு பிராய்ட் தனித்தே ஆய்வுகளைத் தொடர்ந்தார்.

நரம்பு நோய்க்கு நரம்பு அணுக்களில் ஏற்படக் கூடிய இடைஞ்சல்களுக்கும் காரணம் பாலியல் சிக்கல் தான் என்ற முடிவுக்கு 10 வருட தீவிர ஆய்வுக்குப் பின் வந்தார். நரம்பு மண்டல அமைப்புகள் பாலியல் ஆசையோடு தெளிவாகக் காணப்படுகின்றன என்றார். கார்ல் மாக்ஸ் எல்லா நடவடிக்கைகளுக்கும் காரணம் பொருள் என்று சொன்னது போல், பிராய்டின் முழுத்திட்டமும் பாலியல் அடிப்படையிலேயே அமைந்துள்ளது.

அடி மனதில் அமைந்துள்ள சக்தியே 'லிபிடோ' (Libido) என்று குறித்தார். லிபிடோ பாலியல் (Sexual) வாய்ந்தது என்றும் கருதினார். பிராய்ட் கூறும் பாலியல்பு பொதுவாக கருதப்படும் பாலியல்பு கருத்திலிருந்து வேறுபட்டது. குழந்தை பிறந்தவுடன் அதனுடைய நடத்தை பாலியல்பை அடிப்படையாகக் கொண்டே அமைந்துள்ளது என்றார்.

பாலியலுக்கும் மரணத்துக்கும் இடையில் உள்ள போராட்டம் தான் மனிதனது வாழ்வு எனக் கருதினார். மனித செயல்களுக்கு இரு இயல்பூக்கங்கள் காரணமாகின்றன. அவையாவன,

1. ***வாழ்க்கை இயல்பூக்கங்கள்** (Life Instincts)*
2. ***மரண இயல்பூக்கங்கள்** (Death Instincts)*

பிராய்டின் கருத்துப்படி, வாழ்க்கை இயல்பூக்கத்தின் மையப்பொருளாக பாலியல் அமைகிறது. மரண இயல்பூக்கம் என்பது அழிக்க வேண்டும் எனும் இயல்பூக்கமாகும். பிராய்டின் இத்தகைய கோட்பாடுகள் கடுமையாக விமர்சிக்கப்பட்டன. பிராய்டின் கொள்கைகள் திருத்தப்பட வேண்டுமென பிந்திய உளப்பகுப்பாய்வாளர்கள் குறித்துக் காட்டினர். பாலியல் இயல்பூக்கத்திற்கும் உயிரியல் அம்சங்களுக்கும் பிராய்ட் மிதமிஞ்சிய அழுத்தத்தை தந்துள்ளார் என்பது இவர்களது வாதம். அல்பிரட் எட்லர், எரிக் ஃப்ரொம் போன்ற பிந்திய பிராய்ட்வாதிகள் மனிதனின் ஆளுமையை வடிவமைப்பதில் இயல்புக்கிகளை

விட தனிநபரைச் சூழ்ந்துள்ள சமூகம், பண்பாடு மற்றும் பகுத்தறிவு நிலை என்பவற்றினது பங்கினையும் கவனத்திற் கொள்ள வேண்டுமென வலியுறுத்துகின்றனர் (பார்க்க. எம்.எஸ்.எம்.அனஸ்; 'விஞ்ஞானமும் சமூக விஞ்ஞானங்களும் ஒரு முறையியல் நோக்கு'; 1996:125).

உளவியல் பகுப்பாய்வு பிராய்டிலிருந்தா துவங்குகிறது?

உளவியல் பகுப்பாய்வின் வரலாற்றை அவதானிக்கின்ற பொழுது உளவியல் பகுப்பாய்வு பிராய்டிலிருந்து தான் ஆரம்பிக்கின்றது என்பதனை ஏற்க முடியவில்லை. ஏனெனில், பண்டைய கிரேக்க மெய்யியலாளர்களிடமும், ஜெர்மனியப் புதுமைவாதிகளிடமும் உளவியல் பகுப்பாய்வின் மெல்லிய கூறுகளை அவதானிக்க முடிகிறது.

ஒரு குழந்தை எதிர்பார்ப்புகளுடன் வளர்க்கப்படும் பொழுது, அது கவனத்தை ஈர்க்கும் பொழுது, குழந்தை தாயின் ஆசைவலையிலிருந்து விடுபடுகிறது. அதனுடைய தனித்தன்மையின் அடிப்படைக் கூறு அப்போது உருவாகிறது. தன்னையறியாமலேயே மரணம் பற்றிய உணர்வு அதற்கு ஏற்படுகிறது. பண்டைய கிரேக்க மெய்யியலாளர்கள் இந்தக் கருத்தினை வெளிப்படுத்தியுள்ளார்கள். இதனையே ஜேர்மனியப் புதுமைவாதிகள் கையாண்டிருக்கிறார்கள். இவர்கள் இதனை முறையாகவும் அதேநேரம் தவறாகவும் பயன்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. உளவியல் பகுப்பாய்வின் வரலாற்றை இது காட்டுகிறது.

ஆனால், பிராய்ட் இதனையும் தாண்டிச் சென்றார். பாலியல் உணர்வுகளுடன் மரண உணர்வுகளும் 'திரும்பத் திரும்பச் செய்தல் நிர்ப்பந்தம்' என்ற நியதிப் படி பின்னிப் பிணைந்துள்ளன என்றார் பிராய்ட். மரண உணர்வு என்பது ஒரு மானுட உணர்வு. அது வாழ்வுக்கு ஒரு முரணாகக் கருதப்படாமல், அழிவுணர்வாகக் கருதப்படாமல், வெறும் திரும்பத் திரும்பச் செய்தல் நிர்ப்பந்தம் என்று நியதியாகவே எடுத்துக் கொள்ளப்படுகின்றது என்றும் கூறுகின்றார். தனி மனிதனின் மனமே உளவியல் பகுப்பாய்வின் குவிமையம் என்பதனை பிராய்ட் எடுத்துக் காட்டினார்.

உளவியலுடன் மெய்யியல் நுட்பங்களையும் அறிந்திருந்தமையினாலேயே, பிராய்டின் ஆய்வுகள் தனித்துவமாக விளங்கின. அவர் உளவியல், மெய்யியல் என்பவற்றுடன் வரலாறு, கலை, இலக்கியம், பண்பாடு, நாகரிகம், அரசியல் போன்ற துறைகளிலும் பாண்டித்தியம் பெற்றிருந்தார். இத்தனை பரிமாணங்களையும் மொத்தமாகப் பயன்படுத்தியே போர் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டார்.

பிராய்ட் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகளும் நூல்களும் 24 தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன. 1937ம் ஆண்டு 'போர் ஏன்?' என்ற நூல் வெளியிடப்பட்டது.

பிராய்டின் ஆராய்ச்சிகளெல்லாம் 1930-37ம் ஆண்டுகளுக்குப் பிறகு தான் மிகவும் செல்வாக்குப் பெறத் தொடங்கின. அந்நேரத்தில் ஜெர்மனிய நாசிகளின் அரசு யூதர்களுக்கு எதிராகக் கொடுமைகளை இழைத்து வந்தது. இரண்டாம் உலகப் போர் மூண்டுக்கொண்டிருந்தது.

போரை நிறுத்துவதற்குச் சிலர் முயற்சி எடுத்தனர். ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் அதற்குத் தலைவராக நியக்கப்பட்டார். ஐன்ஸ்டீன் பிராய்டுக்குக் கடிதம் எழுதி (1932 ஜூலை) நடைபெறப்போகும் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். பிராய்ட் அதில் கலந்துகொள்ள மறுத்துவிட்டு, இரண்டாம் உலகப்போரை யாராலும் நிறுத்த முடியாது. போர் நடந்துதான் தீரும் என்று கூறி, 'போர் ஏன்?' என்ற நீண்ட ஒரு ஆய்வுக் கடிதத்தை எழுதி (1932 செப்டம்பர்) ஐன்ஸ்டீனுக்கு அனுப்பி வைத்தார்.

பிராய்ட் எழுதிய முக்கியத்துவம் வாய்ந்த கடிதம் "International Institute of Intellectual co-operation" என்ற அமைப்பால் 1933ம் ஆண்டு பாரிசில் வைத்து, ஜெர்மன், பிரெஞ்ச், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் ஒரே நேரத்தில் வெளியிடப்பட்டது. ஜெர்மன் மொழியில் அது தடைசெய்யப்பட்டது. ஸ்டுவர்ட் கில்பர்ட் (Stuart Gilbert) என்பவரால் அது ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டது. பின்பு பல்வேறு ஆங்கில தொகுப்பு நூல்களில் அக்கடிதம் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளது. அதனை என். ராமதுரை யுனெஸ்கோ கூரியரில் (1993 மே) தமிழ் பெயர்த்திருக்கிறார்.

பிராய்டின் இக்கடிதத்துக்கு முதலாம் உலக மகா யுத்தத்தின் ஆரம்பங்களில் (1915) அவர் செய்த ஆய்வுகள் காரணமாகின. மேலும், 'தோற்றத்தின் எதிர்காலம்' (1927), 'நாகரிகமும் அதனுடைய அதிருப்திகளும் (1930) என்ற அவரது நூல்களும் காரணமாகின. இக்கடிதம் உளவியல், மெய்யியல், வரலாற்றியல், சமூகவியல் நோக்கில் எழுதப்பட்டுள்ளது. இதன் முக்கிய பகுதிகள் அல்லது வடித்தெடுத்த சாரம் ஐந்து கேள்விகளுக்கான விடைகளாக இங்கு நோக்கப்படுகின்றன.

1. வன்முறையும் சட்டமும் உருவானது எவ்வாறு?

வன்முறை, சட்டம் இரண்டிற்கும் இடையே இன்று வெளிப்படையான முரண்பாடு இருப்பதாகத் தோன்றலாம். ஆயினும், ஒன்றிலிருந்துதான் மற்றொன்று உருவாகியது என்பதை நிறுவிக்காட்டமுடியும்.

இரண்டு மனிதர்களிடம் நலன்கள் குறித்து மோதல் ஏற்பட்டால் அது பொதுவில் வன்முறை மூலம் தீர்த்துக்கொள்ளப்படுகின்றது. விலங்குகள் உலகிலும் அப்படித்தான். மனிதன் அதற்கு விதிவிலக்கல்ல. எனினும் மனிதர்களிக்கிடையே கருத்து மோதல்களும் உருவாகின்றன.

ஆதி கால சிறு சமூகங்களில் உடைமை பற்றிய பூசல், ஆதிக்க உரிமை போன்றவை முரட்டு பலம் மூலம் தீர்மானிக்கப்பட்டன. பின்னர் அந்த இடத்தை உடல் வலிமை பெற்றுக்கொண்டது. அடுத்து அதன் வேறு வடிவங்கள் தோன்றின. எவரொருவரிடம் சக்திமிக்க ஆயுதம் இருந்ததோ அல்லது எவர் ஆயுதத்தை திறம்பட பயன்படுத்தினாரோ அவரே வெற்றி வீரராக இருந்தார்.

ஆயுதங்கள் தோன்றிய பின்னர் முரட்டு பலத்திற்குரிய இடத்தினை முதன் முறையாக மதிநுட்பம் பெற்றது. ஆனால் மோதலின் நோக்கம் மாறவில்லை. ஏதேனும் ஓர் உரிமைக் கோரிக்கையை எதிரியை கைவிடச் செய்ய அல்லது அதுவரையில் மறுத்து வந்ததை ஏற்கவைக்க எதிரிக்கு ஊறுவிளைவித்து அல்லது எதிரியை பலங்குன்றச்செய்து அடக்குவது என்பதுதான் அந்த நோக்கம். எதிரியைத் திட்டவட்டமாக செயலிழக்கச் செய்தால், அதாவது எதிரியைக் கொல்வதால் இந்த நோக்கம் நன்றாக நிறைவேறியது.

இந்த முறையில் இரண்டு சாதகங்கள் இருந்தன. ஒன்று, எதிரி மீண்டும் மோத வரமாட்டான். இரண்டாவதாக, எதிரிக்கு நேர்ந்த கதியைப் பார்த்து மற்றவர்கள் அசத்தினால் அடங்கிவிடுவர். தவிர பகைவனைக் கொல்வது இயல்பான ஒரு வேட்கையைத் தீர்த்து வைக்கிறது. பகைவனைக் கொல்வது என்ற எண்ணத்தை வேறு எண்ணம் மாற்றக் கூடும். பகைவனைக் கொல்லலாம். அவனது மன உறுதியைக் குலைத்தால் அவனை அடிமை போல நடத்தலாம். இங்கு வன்மறைக்கு வடிகால் உயிர்வதை அல்ல, எதிரியை அடிமைப்படுத்துவதே. பகைவனுக்கு அடைக்கலம் அளிக்கும் முறை இவ்விதமாக தோன்றியது.

இவை அத்தனையும் காலப்போக்கில் மாற்றங்களுக்கு உள்ளாகி வன்முறையிலிருந்து சட்டமுறைக்கு இட்டுச்செல்கின்ற முறை உருவானது. அதாவது பலவீனமானவர்கள் பலர் ஒன்று சேர்ந்தால், பலசாலியின் மேலதிக்கத்தை சமாளித்து விடலாம். சுருங்கக் கூறின் "ஒற்றுமையே பலம்" (அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு என்ற பழமொழி ஞாபகத்துக்குரியது) ஒன்றாக இணைவது முரட்டு பலத்தை வெற்றி கொள்கிறது. தனித்தனியாக இருப்பதற்கு பதில் ஒன்றுபடும் போது அனைத்தின் பலம் அதன் பக்கம் உள்ள நியாயத்தைத் தனித்து நிற்கின்ற பலவானுக்கு எதிராக நிலை நிறுத்தியது.

இவ்விதமாக நாம் "நியாயத்தை" (அதவாது சட்டத்தை) சமூகத்தின் பலம் என்று விளக்கலாம். எனினும் அதுவும் கூட வன்முறையைத் தவிர வேறில்லை.

ஏனெனில் அது தனது வீதியில் இருக்கின்ற தனி நபர்களை உடனே தாக்க முற்படுகிறது. அதே முறைகளையும், இலட்சியங்களையும் பின்பற்றுகிறது. ஆனால் ஒரு வேறுபாடு, இங்கு நிலை நாட்டப்படுவது தனி நபரின் வன்முறை அல்ல, சமூகத்தின் வன்முறையே.

எனினும் முரட்டு வன்முறையிலிருந்து சட்டப்படியான ஆட்சிக்கு மாறுவதற்கு முதலில் சில உளவியல் அளவிலான நிபந்தனை பூர்த்தி செய்யப்பட வேண்டும். பெரும்பான்மையின் ஒற்றுமை நிலையாக, நீடித்து இருத்தல் வேண்டும். ஆனால், ஆணவம் கொண்ட ஒருவரை அகற்றுவதே அதன் அடிப்படை நோக்கமாக அமைந்து அதன் பிறகு அந்த ஒற்றுமை தளர்ந்து விட்டால் எவ்விதப் பயனும் ஏற்படப்போவதில்லை. ஏனெனில் அவர்களும் தங்களுடைய வன்முறை ஆட்சியை நிலைநிறுத்த முனைவர். திரும்பத் திரும்ப அதேநிலைத்தான் தொடர்ந்த வண்ணமிருக்கும்.

எனவே, மக்களின் ஒற்றுமை நிரந்தரமானதாக, நல்ல அமைப்பைப் பெற்றதாக இருத்தல் வேண்டும். புரட்சிகள் தலையெடுக்காமலிருக்க அது விதிமுறைகள் அதாவது சட்டங்கள் மதித்துப் பின்பற்றப்பட்ட நிர்வாக இயந்திரத்தை அமைத்துக்கொள்ள வேண்டும். சட்டங்களை அமுலாக்குவதற்குத் தேவையான வன்முறை நடவடிக்கைகள், தண்டனைகள் நன்கு நிறைவேற்றப்படுதல் வேண்டும். சமுதாயத்தின் நலன்களைக் காக்க வேண்டும் என்ற எண்ணம் அதில் அடங்கியவர்களிடையே ஒற்றுமை மற்றும் சகோதர உணர்வுகளை எற்படுத்துகிறது. இதுவே அதன் உண்மையான வலிமையாகும்.

சமுதாயத்துக்குள் இருப்பவர்கள் அனைவரும் சம வலிமையுடன் இருந்தால் சிக்கல் எதுவுமில்லை. சமுதாயம் முழுமையும் பாதுகாப்பாக வாழ்வதற்கு அதற்குள் இருக்கின்ற ஒவ்வொருவரும் தமது சொந்த வலிமையை வன்முறைக்குப் பயன்படுத்துவதில் எந்த அளவுக்குத் தனிப்பட்ட சுதந்திரத்தை விட்டுக் கொடுத்தாக வேண்டும் என்பதை அந்த சமுதாயம் சட்ட வடிவில் உருவாக்கிக் கொள்ளலாம்.

எனினும், இப்படிப்பட்ட சரிநிகர் நிலை, கொள்கை அளவில் தான் இருக்க முடியும். ஏனெனில், இவ்வித சமுதாயத்தில் எடுத்த எடுப்பிலேயே சட்டம் இயற்றப்படும் போது, ஒடுக்கப்பட்டவர்களுக்கு அற்ப உரிமைகளே வழங்கப்படுகின்றன.

அப்போது நாட்டில் இரு அம்சங்கள் தோன்ற சட்டங்களில் நிலையின்மையை ஏற்படுத்துகின்றன. ஆனால், அவை சட்டங்களை வரைவதில் முன்னேற்ற வளர்ச்சிக்கும் வழிவகுக்கின்றன. முதலாவதாக ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் தங்களை சட்டத்தின் கட்டுதிட்டங்களுக்கு அப்பாற்பட்டவர்களாக

ஆக்கிக்கொள்ள முயல்கின்றனர். இரண்டாவதாக ஆளப்படுபவர்கள் தங்களது உரிமைகளை விரிவாக்கிக் கொள்ள விடாது போராடுகின்றனர். இதில் கிடைக்கும் ஒவ்வொரு சமபலமும் இல்லாத நிலைமை அதாவது ஆண்கள், பெண்கள், முதியோர் குழந்தைகள் என்று எப்போதும் சிக்கலான நிலைமை இருக்கும். இது போதாதென போர், வெற்றி இவற்றின் விளைவாக ஆண்டான்-அடிமை என்ற ஏற்றத்தாழ்வும் தோன்றி விடும். இந்த நிலைமையால் பொதுச்சட்டம் இந்த ஏற்றத் தாழ்வுகளைக் கருத்தில் கொள்கிறது. எனவே, சட்டங்கள் ஆட்சியாளர்களால் அவர்களுக்காக ஆதாயத்தையும் சட்டத்தில் சேர்க்கச் செய்து, ஏற்றத்தாழ்வான சட்டங்களுக்குப் பதில் அனைவரையும் சரிநிகர் சமமாகக் கருதுகின்ற சட்டங்களை உருவாக்க முற்படுகின்றனர்.

சமுதாயத்துக்குள்ளாக அதிகாரச் சமநிலையில் ஆக்கப்பூர்வமான மாற்றம் ஏற்படும் போது இரண்டாவதான போக்கு குறிப்பிடத்தக்க அளவில் காணப்படுகிறது. சில வரலாற்றுச் சூழ்நிலைகளில் இது அடிக்கடி ஏற்படுவதாகும். அவ்வித நிலைமைகளில் சட்டங்கள் மாறுபட்ட சூழ்நிலைகளுக்கு ஏற்ப படிப்படியாக மாறி (பொதுவில் இப்படித்தான் நிகழ்கிறது) பொருந்திப் போகின்றன. அவ்வாறின்றி ஆளும் வர்க்கம் புதிய நிலைமைகளைக் கணக்கில் கொள்ளத் தவறினால் அதன் விளைவாக வன்முறை எழுச்சிகளும் உள்நாட்டுப் போர்களும் மூளுகின்றன. அக்கட்டங்களில் சட்டம் செயல்படாது போய், மீண்டும் வன்முறையே எதையும் தீர்மானிப்பதாகிப் பிறகு சட்டப்படியான புதிய ஆட்சி தோன்றகிறது.

முற்றிலும் அமைதியான முறையில் ஏற்படுகின்ற மற்றொரு வகையான அரசியலமைப்பு மாற்றமும் உள்ளது. அது சமுதாயத்தின் மக்களிடையிலான கலை, பண்பாட்டு வளர்ச்சியாகும்.

ஒரு சமுதாயத்தில் ஒத்திசைவு நிலவ இரு அம்சங்கள் தேவை. ஒன்று கட்டாய நிர்ப்பந்தம். மற்றொன்று, அச்சமுதாயத்தைச் சேர்ந்தவர்களுக்கிடையிலான உணர்வுப் பிணைப்புகள் (உளவியலில் இது ஐக்கியப்படுத்திக் கொள்ளுதல் என்று குறிப்பிடப்படுகிறது) இவற்றில் ஒன்று இல்லாவிடினும் மக்களை ஒன்றுபடுத்தி வைக்க மற்றொன்று போதும். மக்களிடையிலான ஆழ்ந்த ஒற்றுமையின் வெளிப்பாடாக இந்த உணர்வுப் பிணைப்புகள் இருந்தால் தான் அவை பிரக்ஞைப் பூர்வமானதாக இருக்கும்.

இன்றைய உலகில் நாம் உலக மக்களை ஒன்றுபடுத்தி வைக்க, யாரும் எதிர்க்கத் துணியாத அதிகாரம் படைத்த ஒன்று கிடைக்காதா? என்று ஏங்குகிறோம். இன்று ஒவ்வொரு நாட்டிலும் தேசிய உணர்வு மேலோங்கி நிற்கிறது. ஆனால், இது உலக

மக்களை ஒன்றுபடுத்துவதாக அன்றி நேர் எதிரான விளைவைத் தான் உருவாக்குகின்றது. 'போல்ஷ்விஸ்ட் சித்தாந்தம்' மூலம் உலகில் போரை ஒழிக்கலாம் என்று சிலர் கருதுகிறார்கள். ஆனால், உள்ளபடி போர் ஒழிப்பு இலட்சம் எட்டாத தொலைவில் உள்ளதாகத் தோன்றுகிறது. ஒரு வேளை பரஸ்பரம் பெரு நாசத்தை உண்டாக்குகின்ற போரைத் தொடர்ந்து போரை ஒழிக்க முடியலாம். முரட்டுப் பலத்தை அகற்றி அந்த இடத்தில் வலுவான இலட்சியத்தைக் கொண்டு வைக்கிற முயற்சியெல்லாம் தோல்வி காணும் என்றே தோன்றுகிறது. இவ்விதமான சிந்தனையிலுள்ள கோளாறு, நாம் ஒன்று கவனிக்கத் தவறுவதாகும். அதாவது சட்டம் என்பதே முரட்டு பலத்தின் அடிப்படையில் தான் அமைந்துள்ளது. மேலும், சட்டத்தை நிலை நிறுத்த வன்முறை தான் தேவைப்படுகின்றது.

•

2. *போருக்கான மூலம் மரண இயல்பா?*

மனித இயல்புகள் இருவகையானவை. அவற்றில் ஒன்று காத்துக் கொள்கிற ஒற்றுமைப் படுத்துகிற வகையைச் சேர்ந்தவை. அவை பாலியல் (பாமர மொழியில் தொனிக்கும் பொருளும் அடங்கும்) தன்மையானவை. கொல்கின்ற இயல்புகள் இரண்டாவது வகை. இவை ஆக்கிரமிப்பு அல்லது அழிப்பு இயல்புகள்.

இவை, நாம் நன்கறிந்த அன்பு, வெறுப்பு ஆகியவற்றின் கொள்கை அளவிலான வடிவங்கள். எனினும் இந்த இயல்புகளை இவை நல்லவை, இவை தீயவை என வகைப்படுத்துவது சரியாகாது. ஏனெனில் இந்த இயல்புகள் அனைத்தும் முழுக்க முழுக்க இன்றியமையாதவை. மனித வாழ்க்கையின் எல்லா நடவடிக்கைகளும் இந்த இயல்புகளின இணைந்த அல்லது எதிரெதிரான செயல்பாடுகளால் விளைபவையே.

இந்த இருவகைகளைச் சேர்ந்த இயல்புகள், மிக அபூர்வமாகவே தனித்துச் செயல்படுகின்றன. ஓர் இயல்பு செயல்படும் போது அதற்கு நேர் எதிரான இயல்பும் அதில் சற்றே கலந்து நிற்கிறது. நேர் எதிரான இயல்பு இவ்வித நிலையில் ஒரு செயலின் நோக்கத்தை மாற்றி அமைக்கலாம். சில சமயங்களில் நோக்கம் ஈடேற நேர்எதிரான இயல்பு இவ்விதம் கலந்து நிற்பது மிக அவசியமாகிறது. தன்னைக் காத்துக்கொள்வதற்கான இயல்பு 'பாலியல்' தன்னைப்பட்டது. எனினும் இந்த இயல்பின் நோக்கம் ஈடேற வேண்டுமானால் இந்த இயல்பு காரணமாகவே ஆக்கிரமிப்பு நடவடிக்கை தேவைப்படுகிறது. இதுபோலவே, வேட்கை இயல்பை எடுத்துக்கொண்டால் குறிப்பிட்ட ஒன்றின் மீது ஆசை

ஏற்படுத்தும் போது, அதை அடைவதற்கு கைப்பற்றும் இயல்பும் சேர்ந்து செயல்படுகிறது.

இவ்விடயத்தை மேலும் ஆராய்ந்தால் மனிதனின் செயல்கள் வேறொரு வகையிலும் சிக்கல் தன்மை வாய்ந்தனவாக இருப்பதைக் அவதானிக்கலாம். ஒரு செயலானது மிக அபூர்வமாகத் தான் தனியொரு இயல்பினால் தூண்டப்படுவதாக உள்ளது. எப்போதுமே ஒத்த பல நோக்கங்கள் தான் ஒரு செயலாக உருவெடுக்கின்றன.

போர் அறிவிக்கப்பட்டு ஒரு நாட்டின் மக்கள் அதற்கு ஆயத்தமாகும் போது பல்வேறான நோக்கங்கள் இருக்கலாம். சில நோக்கங்கள் சீரிய இலட்சியமாகவும் வேறு சில மிகத் தாழ்ந்த நோக்கங்களாகவும் இருக்கலாம்.

சில வெளிப்படையாக அறிவிக்கப்படலாம். வேறு சில வெளியே தெரிவிக்கப் படாமல் இருக்கலாம். தாக்கி அழிப்பதற்கான வெறி நிச்சயம் இவற்றில் அடங்கும். மனித வரலாற்றில் காணப்படும் எண்ணற்ற கொடுமைகளும், மனிதனின் அன்றாட சம்பவங்களும், இது எந்த அளவுக்குப் பரவலாக வலுவாக உள்ளதென்று காட்டும்.

இலட்சியங்களைக்காட்டி விடுக்கப்படும் வேண்டுகோள்களும், பாலியல் இயல்பும் அந்த அழிப்பு உணர்ச்சிகளைத் தூண்டி விட்டு அவை செயல் வடிவில் வெளிப்பட உதவுகின்றன. முன் காலத்தில் நடந்துள்ள அட்டூழியங்களை ஆராய்ந்தால் பல சமயங்களிலும் அழிப்பு வெறியானது இலட்சியம் என்ற போர்வைக்குள் ஒழிந்து இருந்தமையை அவதானிக்கலாம். ஐரோப்பாவின் மத விரோத ஒழிப்பின் போது நடந்த கொடுமைகளில் காணப்பட்டது போன்று, சிலவேளைகளில் மேல் மனதில் இலட்சிய நோக்குகள் குடி கொண்டிருக்க, அவற்றுக்கு அடி மனதில் புதைந்து கிடக்கும் அழிப்பு இயல்புகள் உரமேற்றிக் கொண்டிருக்கும் என்று தோன்றுகிறது. இந்த இருவித விளக்கங்களும் சாத்தியமானதே.

அழிப்பு இயல்பானது ஒவ்வொரு உயிர் இனத்திலும் இருக்கின்றது. அது அந்த உயிரினத்தை அழிக்க முற்பட்டு அந்த உயிரை ஆதியாரம்ப சடப்பொருளாக ஆக்கப்பார்க்கிறது. அந்த இயல்பை மரண இயல்பு என்றும் வர்ணிக்கலாம். பாலியல் இயல்போ உயிர் வாழ்வதற்கான போராட்டத்தை உறுதி செய்கிறது. மரண இயல்பானது சில உடல் உறுப்புக்களின் உதவியுடன் வெளியார்ந்த பொருட்கள் மீது செயலைத் திருப்பி விடும் போது அழிவுக்கான தூண்டுகோளாகிறது. அந்த உயிரினம் வேற்றுப்பொருட்களை அழிப்பதன் மூலம் தனது வாழ்க்கையைத் தற்காத்துக் கொள்கிறது.

ஆனால், மரண இயல்பானது தனது செயல்களில் ஒன்றின் போது அந்த உயிரினத்துக்குள்ளாகவே செயல்படுகிறது. அழிப்பு இயல்பின் அந்த அகநோக்கு செயல்பாட்டின் மூல காரணத்தை அறிய நாங்கள் பல இயற்கையான நோய் தொடர்பான அம்சங்களை ஆராய்ந்தோம். ஆக்கிரமிப்பு இயல்பு இவ்விதமான ஒரு அகநோக்கு தான் மனிதரின் மனசாட்சிக்கு மூல காரணம் என்று நாங்கள் விளக்கியுள்ளோம். ஒரு வகையில் இது அபசாரமே. இந்த அகநோக்குப்போக்கு பெரிய அளவில் செயல்படுமானால் அது அற்ப விடயமல்ல. மாறாக அது நிச்சயம் நோய் நிலையே. ஆனால் ஆக்கிரமிப்பு இயல்பு வெளி உலகின்பால் திருப்பப்பட்டால் அது நன்மை பயக்கும். இங்கு தான் ஒழிக்கப்பாடுபடுகின்ற தீங்கான கேடான குணங்கள் அனைத்தும் உயிரியல் ரீதியான நியாய விளக்கம் அடங்கியிருக்கிறது. இக்குணங்களுக்கு எதிராக நாம் எடுத்துள்ள நிலையை விட இக்குணங்கள் உண்மையில் இயற்கைக்கு ஒத்தவை என்பதை ஒப்புக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

3. *போரை ஒழிக்க வழி என்ன?*

இயல்புகள் பற்றிய "புராணத்திலிருந்து" நாம் போரை மறைமுகமாக ஒழிப்பதற்கான வழியைக் கண்டறிந்து கூற முடியும். அழிப்பு இயல்பின் காரணமாகத்தான் போர்க்குணம் ஏற்படுகிறதென்றால் அதற்கு எதிராக நாம் பயன்படுத்துவதற்கு "பாலியல்" இயல்பு நமக்கு உள்ளது. மனிதர்களுக்கிடையே உணர்ச்சிப் பிணைப்புக்களை ஏற்படுத்துகின்ற அனைத்தும் போருக்கு எதிரான மருந்தாகப் பயன்படும்.

இப்பிணைப்புகள் இருவகையானவை. நாம் விரும்புகின்ற ஒன்றின் மீது,பாலியல் நோக்கு இன்றி ஏற்படுகின்ற தொடர்புகள் முதல் வகையைச் சேர்ந்தவை. இது விடயத்தில் உளவியலாளர்கள் அன்பு என்ற சொல்லைப்பயன்படுத்தத் தயங்க வேண்டியதில்லை. சமயம் இச்சொல்லைப் பயன்படுத்தி "உன்னைப் போலக் கருதி மற்றவரிம் அன்பு காட்டு" என்று கூறுகிறது. இது நல்ல போதனைதான்.ஆனால் கடைப்பிடிக்கக் கடினமானது! மற்றொரு வகையான பிணைப்பு,"ஐக்கியப்படுத்திக் கொள்ளுதல்" என்ற இந்த சமுதாய பிரக்ஞைகளுக்குப் பங்களிக்கின்றன. மனித சமுகத்தின் கட்டமைப்பே பெருமளவுக்கு இதன் மீது அமைந்துள்ளது.

4. *போரை ஏன் தீவிரமாக எதிர்க்க வேண்டும்?*

சமுதாயத்தில் உள்ள ஒவ்வொருவரும் இயல்புகளுக்கு இடம் கொடுக்காமல் அறிவுக்கேற்றபடி நடப்பது சிறந்ததொரு ஏற்பாடாக இருக்கும். இதில் உணர்ச்சிப் பூர்வப் பிணைப்புகள் பாதிக்கப்படலாம். என்றாலும் இது ஒன்று தான் மக்களிடையே முற்றிலுமான, நீடித்த ஒற்றுமையை ஏற்படுத்தும். இப்போதுள்ள நிலையில் இது நிச்சயம் இலட்சியக் கனவாகத்தான் இருக்கும். போரைத் தடுப்பதற்கான இதர மறைமுக வழிகள் நடைமுறை சாத்தியமானவை. ஆனால், பலன் விரைவில் கிட்டாது. பசித்துக் காத்திருப்பவன் செத்த பிறகுதான் சோறு வந்து சேரும் என்ற கதைதான் அது.

போரை வெறுக்கக் காரணம் ஒவ்வொருவருக்கும் தன்னுடைய உயிரின் மீது உரிமை உள்ளது என்பதனால் ஆகும். போரானது நல்ல எதிர்கால வாய்ப்புள்ள உயிர்களைப் பலி கொள்கிறது. போர் தனி ஒருவரின் பலத்திற்கு சவால் விடும் சூழ்நிலையை உருவாக்கி அவன் தனது மனச் சாட்சிக்கு எதிராக சக மனிதர்களைக் கொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகிறான். மனிதன் பெரும் பாடுபட்டு ஏற்படுத்திய வசதிகளையும் மற்றும் பலவற்றையும் போர் தரைமட்டமாக்குகிறது. மேலும், நவீன காலத்தில் மிகத் திறன் படைத்த ஆயுதங்கள் உருவாக்கப் பட்டுள்ளதால் போரானது இரு தரப்புகளையும் இல்லாவிட்டாலும் ஒரு தரப்பையாவது அடியோடு அழித்து விடுகிறது. இவையெல்லாம் நன்கு தெரிந்திருந்தும், பொது உடன்பாட்டின் மூலம் போர் ஏன் தடைசெய்யப்படவில்லை என்று வியக்கத்தோன்றுகிறது. போர் கொடூரமானது தான். நம்மால் போரை வெறுப்பதைத் தவிர வேறு வழியில்லை. இயலாத தன்மைகொண்ட நாம் சமாதான கர்த்தர்களாக மட்டுமே இருக்க முடியும்.

5. *போருக்கான முற்றுப்புள்ளி கலாசார வளர்ச்சியா?*

மனித இனத்தின் கலாசாரம் (சிலர் இதனை நாகரிகம் என்று குறிப்பிட விரும்புகின்றனர்) பன்னெடுங் காலமாக முன்னேறி வருகிறது. நமது கலை, இலக்கியம், இசை முதலானவற்றில் உள்ள சிறப்பான எல்லா படைப்புகளுக்கும் அதுவே மூலகாரணம்.

இந்த கலாசார மாறுதலால் விளைந்த மனம் சார்ந்த மாற்றங்கள் குறிப்பிடத்தக்கவை; மறுக்க முடியாதவை. அதாவது இயல்பு அளவிலான நோக்குகள் படிப்படியாக நிராகரிக்கப்பட்டு வந்துள்ளன. இயல்பு காரணமாகச் சட்டென்று செயலில் ஈடுபடுவதும் குறைந்து வந்துள்ளது. நம்மூதாதையர்

மகிழ்ச்சி கண்ட நுகர்ச்சிகள் நம்மை ஈர்க்கவில்லை. நமது நெறிமுறை மற்றும் இரசனை தொடர்பான இலட்சியங்கள் மாற்றம் கண்டுள்ளதென்றால் அதற்கான காரணங்கள் அடிப்படையில் புலன்கள் சம்பந்தப்பட்டவை.

உளவியல் அளவில் இக்கலாசார வளர்ச்சியின் இரு முக்கிய அம்சங்கள் உள்ளன. முதலாவதாக அறிவாற்றல் வலுப்பட்டு, அது நமது இயல்புகளின் படியான வாழ்க்கையை அடக்கியாள முற்பட்டுள்ளது. இரண்டாவதாக ஆக்கிரமிப்பு இயல்பு அகநோக்கு கொண்டுள்ளது. இதில் நன்மைகளும் உண்டு; தீமைகளும் உண்டு. கலாசார வளர்ச்சி ஏற்படுத்திய மனப்போக்கிற்கு போர் என்பது நேர் எதிராக உள்ளது என்பதால் நாம் போரை வெறுக்கின்றவர்களாகிறோம்.

நம்மைப் போன்ற சாதாரண வாதிகளுக்கு போர் என்பது அறிவு பூர்வமாகவும், உணர்ச்சி பூர்வமாகவும், வெறுக்கத்தக்தாகும். இந்த வெறுப்புக்கு போரின் போது நடக்கும் அட்டூழியங்கள் எந்த அளவுக்குக் காரணமோ அந்த அளவுக்கு போரின் இழிவான செயல்களும் காரணம்.

மக்கள் எல்லோரும் சமாதான கர்த்தாக்களாக மாறுவதற்கு நாம் எவ்வளவு காலம் காத்திருக்க வேண்டுமோ தெரியாது. எனினும் மனிதனின் கலாசாரப்போக்கு எதிர்காலப் போர்கள் பயங்கரமாக இருக்கலாம் என்ற அச்சம் (இவ்விடத்தில் சோலைக்கிளியின் கவிதை வரிகளை ஞாபகப்படுத்திக் கொள்க.) ஆகிய இரு அம்சங்களும் கூடிய விரைவில் போருக்கு முற்றுப்புள்ளி வைக்க உதவலாம் என்று நம்பலாம். எந்த ஊற்றுக்கள் மூலமாக இது சாத்தியமாகும் என்று எம்மால் ஊகித்தறிய முடியாது. இதற்கிடையே கலாசார வளர்ச்சிக்கு எது உந்து சக்தியாக உருவாகின்றதோ அதுவே போருக்கு எதிராகவும் செயலாற்றும் என்று நம்பிக்கை வைக்கலாம்.

- *முதல் பிரதி* 08. 02. 1998
- *திருத்திய பிரதி* **2013** *டிசம்பர்*

ஈழக்கவி

(ஏ.எச்.எம்.நவாஷ்)

நீந்தும்

மீன்களை

வரைபவள்

அக் காலத்தில் பன்புற்களை நேர்த்தியாக வரிசைப்படுத்தி
அம்மா நெய்யும் பாய்கள்
அழகுணர்ச்சியை விதந்துரைக்கும்
பலரும் கேட்டுவந்து வாங்கிச் செல்வரென
சிறுமியின் தாய் பகன்றதும்
சிலிர்த்துக் கொள்ளும் மூதாட்டி
காடுகாடாய் நதிக்கரை தேடியலைந்து
கோரைப் புற்களைச் சுமந்து வந்த
அந்தி நேர நினைவுகளை
பேத்தியிடம் பகிர்கிறாள்

'முக்காடிட்ட பெண்கள் வரைதல் தகா'
மதகுருவின் உரை சுவரெங்கும் எதிரொலிக்கிறது
பித்தேறிய ஆண்கள் கூட்டம்
நளினமான கரங்களை அடக்கிவைத்திடும்
பாரம்பரிய எண்ணச் சங்கிலிகளோடு
புனித இல்லத்தின் வாயில் தாண்டுகிறது

உயிர் ஜீவராசிகளை
வர்ணச் சித்திரங்களாக வரைவோர்
நரகத்தில் அவற்றுக்கு உயிர்கொடுக்கக் கடவர்
எனவே ஓவியம் கவிதை பாடலிசை
திறமை எதிலிருப்பினுமதைக் காண்பித்தல் கூடாது
மீறிடின் சிறுமியெனக் கூடப் பாராது
மூங்கில் பிரம்பு பேசிடுமென
தடைக் குரல்கள் பல
வீடுகள் தோறும் முழங்கித் தீர்ப்பிடுகின்றன

கோரைப் புற்களைக் கொண்டு வந்து காய்த்து
நெய்யும் பாய்களில் சிறுமியின் முடங்கிய விரல்கள்
அழகிய சித்திரங்களைப் பின்னுகின்றன
ஓலைப் படல்களைத் தாண்டும்
தொட்டில் குழந்தைகளிற்கான
பெண்களின் தாலாட்டுக்கள்
தினந்தோறும் புதிது புதிதாய் உதிக்கின்றன
ஏரிக்கரைகளில் நிலா நேரங்களில்
உலவிடும் பிசாசுகளைப் பிடித்துன் தந்தையை
கட்டிவைக்கச் சொல்லவேண்டுமென்பது போன்ற
விதவிதமான உள்ளக் கிடக்கைகள்
சிறுவர் சிறுமிகளுக்கான பெண்களின் கதைகளில் வெளிச்சமிடுகின்றன

மூதாட்டியின் சிறுபராயம்
பாய்களிலும் கூடைகளிலும் கழிகிறது
வீட்டின் அனைத்து ஆண்களினதும்
வலிய கட்டளைகளுக்கு அஞ்சிய
அவளது எல்லா ஆற்றல்களும்
விரல்கள் வழி கசிகிறது
துளையிடப்பட்ட ஓடம்
மழைக் கணமொன்றில் நடுக்கடலில் தத்தளிக்கிறது

பாட்டியின் கதைகேட்ட சிறுமி தனது
வர்ணப்பெட்டியை எடுக்கிறாள்
எவளது கூந்தல் தூரிகையாலோ மீன்களை வரைபவள்
சித்திரத் தாள்களை ஊஞ்சலில் வைத்து ஆட்டி விடுகிறாள்
காற்றுவெளியில் நீந்தும் மீன்களைப் பிடிக்க
இரை தேடித் தடுமாறுகிறான்
அவ் வீட்டின் தூண்டில்காரன்
யன்னல்வழி கசியும் மஞ்சள் வெளிச்சம்
அறை முழுவதையும் நிரப்புகிறது

- எம்.ரிஷான் ஷெரீப், மாவனல்லை

அப்பக்கார சின்னம்மா



- ஏலையா க. முருகதாசன்

நேரம் இரவு பன்னிரண்டு மணியாகியும் என்னால் நித்திரை கொள்ள முடியவில்லை. கேசவனின் சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டுக்கு போயிருந்தேன். புத்தக வெளியீட்டு விழாவென்றால் எழுத்தாளர்கள் விமர்சகர்கள் மட்டுந்தான் பேச்சாளர்களாக இருப்பார்கள், பொதுமக்கள் சபையோராக இருப்பார்கள் என்பதை மாற்றி கேசவன், சஞ்சிகைகளை, பத்திரிகைகளை, நூல்களைத் தேடித் தேடி வாசிக்கும் சர்வேஸ்வரன் என்ற ஒரு வாசகனை மட்டுமே தனது புத்தகத்தின் விமர்சகராகவும் வெளியிட்டு வைப்பவராகவும் மேடையேற்றியது இந்த நாட்டில் எனது இருபத்தொன்பது வருட வாழ்க்கையில் நான் கண்ட புதுமை இது.

இன்னும் எனக்கு நித்திரை வரவேயில்லை. கேசவனின் புத்தக வெளியீட்டு நிகழ்ச்சியைச் சுற்றிச் சுற்றி என் மனம் சுழன்று கொண்டிருந்து.

சர்வேஸ்வரன் என்ற அந்த பொதுமனிதனின் பேச்சில் இயல்புநிலை இருந்தது. கேசவனின் கதைகளை வாசித்து அதில் தன்னை கவர்ந்தவற்றை சொன்ன போது நான் மட்டுமல்ல சபையோராகக் கூடியிருந்தவர்களும் ஒரு புதிய சுவையை அவரின் பேச்சில் கண்டனர். தனது நண்பர் ஒருவருடன் எப்படி பேசுவாரோ அப்படியேதான் மேடையிலும் பேசினார்.

மேடைக்கு வந்து புத்தகம் பற்றி பேசுமாறு கேசவன் அழைப்பு விட்டதும் மேடைக்கு வந்த சர்வேஸ்வரன் ஒலிவாங்கி முன்னால் வந்து நின்றார். ஆனால் அவரால் உடனடியாகவே பேச முடியவில்லை. படபடப்பினாலும் பரபரப்பினாலும் அவரின் தொண்டையை எச்சில் அடைத்தது. சில விநாடிகள் பொறுத்த அவர் „தம்பி கேசவனுக்கும் சபையோருக்கும் வணக்கம்“ என்று சொல்லத் தொடங்கியவுடன் அவர் குரல் கரகரத்தது. கேசவனைத் திரும்பிப் பார்த்து கட்டை விரலை வாய்க்கருகில் கொண்டு வந்து தண்ணீர் வேண்டும் என்று சைகை காட்டு முன்பே சர்வேஸ்வரனின் நிலைமையை உணர்ந்த கேசவன் அவருக்கு தண்ணீரைக் கொண்டு போய்க் கொடுத்தார். தண்ணீரைக் குடித்து தொண்டையைச் சரிசெய்து கொண்ட சர்வேஸ்வரன் பேசத் தொடங்கினார்.

„நான் ஒரு போதும் மேடையில் பேசியதில்லை. இதுதான் முதல் அனுபவம். என்னால் ஒழுங்காகத் தொடராகப் பேச இயலாது. எனது பொழுது போக்கே புத்தகங்கள் பத்திரிகைகள் வாசிப்பதுதான். அது எனக்கு மகிழ்ச்சியான நேரங்களாகும். நாளாந்தம் வழியிலும் தெருவிலும் சந்திக்கும் மனிதர்களை கதைகளிலும் சந்தித்திருக்கிறேன். எழுத்துக்களை வெறும் சொற்களாக நான் பார்ப்பதில்லை. அவை உயிருள்ளவை. இரசித்து உருசித்து வாசிக்கும் போதுதான் ஒரு சுகத்தை கதைகளிலிருந்து அனுபவிக்க முடியும். நான் அதனை அனுபவித்து வருகின்றேன்“.

„தம்பி கேசவன் என்னிடம் தனது புத்தகத்தைக் கொண்டு வந்து தந்து, அதை வாசித்துவிட்டு அதைபற்றி நீங்கள் என்ன நினைக்கிறியளோ அதை மேடையில் சொல்லுமாறு சொன்னார். கதைகள் பற்றிச் சொல்வதற்கும் மேடையில் பேசுவதற்கும் எனக்கு தகுதியும் அனுபவமும் இல்லை என்றேன். ஆனால் தம்பி கேசவன் அன்பாகக் கட்டாயப்படுத்தினார். இந்தப் புத்தகத்தில் உள்ள எல்லாக் கதைகளையும் வாசித்தேன் சில கதைகள் என்னை ஊருக்கு கூட்டிச் சென்று நான் அங்கு எந்தெந்த மனிதர்களைக் கண்டேனோ அவர்களை மீண்டும் இக்கதைகள் காட்டின. சில கதைகள் கனடா வாழ்க்கையைக் காட்டின“.

„தம்பி கேசவன் தனது வாழ்க்கையை, தனது பெற்றோரின் தியாகங்களை குறிப்பாக தனது தயாரின் தியாகத்தை, போலித்தனம் கொண்ட மனிதர்களை கதைகளில் நடமாட விட்டிருக்கின்றார். தனது தாயார் அப்பம் சுட்டு விற்று தங்களை ஆளாக்கினார் என்பதை தம்பி கேசவன் நெகிழ்வுடன் எந்தப் போலித்தனமும் இல்லாமல் எனக்குப் பலமுறை சொல்லியிருக்கின்றார். அதையும் கதையாக „ அப்பக்காரச் சின்னம்மா“

என்ற பெயரில் எழுதியிருக்கின்றார்". எல்லாக் கதைகளைப் பற்றியும் விபரமாகச் சொன்னால் இப்புத்தகத்தை கொண்டு போய் வாசிப்பவர்களுக்கு ஆர்வம் ஏற்படாது" என்று சொல்லி சர்வேஸ்வரன் நிறுத்திக் கொண்டார். கேசவனின் நன்றியுரையுடன் வெளியீட்டு விழா நிறைவு பெற்றுவிட்டது.

சர்வேஸ்வரனின் பேச்சு இந்தக் கதைப் புத்தகத்திலுள்ள கதைகள் எல்லாவற்றையுமே உடனடியாக வாசித்து முடிக்க வேண்டுமென்ற ஆவலை எனக்குள் உண்டாக்கிவிட்டது. மனைவி சுமத்திரா நல்ல நித்திரை. நேரம் ஒரு மணியாகிவிட்டுது. லைட்டைப் போட்டால் மனைவியின் நித்திரை குழம்பிவிடும், மனைவியிடம் பேச்சும் வாங்க வேண்டும்.

மெல்ல எழுந்து போய் கண்ணாடி மேசையிலிருந்த புத்தக மட்டையில் செருகி வளைத்து வாசிக்கும் சிறிய லைட்டை எடுத்துக் கொண்டு வந்து புத்தக மட்டையில் செருகி வாசிக்கத் தொடங்கினேன். இந்தச் சின்ன வெளிச்சம் சுமத்திராவின் நித்திரையைக் குழப்புகின்றதா என்ற கடைக்கண்ணால் பார்த்தேன். சுமத்திரா நல்ல நித்திரை.

„அப்பு கேசவா எழும்பப்பு, இந்தப் பலகாரத்தைக் கொண்டு போய் பூபதியக்கா வீட்டிலை கொடுத்திட்டு வா" என நித்திரை கொண்டிருந்த கேசவனை எழுப்ப, „என்னம்மா நித்திரை கொள்ளவே விடமாட்டியளா இப்ப காலமை ஐஞ்சரை மணிதானே" என கேசவன் சிணுங்கினான்.

இடியப்பத்தை பிளிந்து கொண்டே „அப்பு எழும்பப்பு கொண்டு போய்க் கொடுத்திட்டு வா பள்ளிக்கூடம் போகேக்கிலை காசு தாறன்" என மீண்டும் கேசவனை தாய் எழுப்புகிறாள்.

விடியற்காலை நாலரை மணிக்கு எழும்பி முற்றத்தைக் கூட்டி குளித்துவிட்டு வந்து அப்பம் சுடத் தொடங்குவாள் சின்னம்மா. சின்னம்மாவின் கணவன் பொன்னையா ஐந்து வருடங்களுக்கு முன் இறந்துவிட்டார். கணவன் இறந்த போது அடுத்து என்ன செய்வது என்று தெரியாமல் நட்டநடுக்காட்டில் நிர்க்கதியாக நின்றாள். தனது பிள்ளைகளை இனி எப்படி வளர்க்கப் போகிறேனோ என கண்கலங்கினாள். மூத்தவள் யோகமலர். இரண்டாவது கேசவமூர்த்தி. கணவன் இறந்த போது யோகமலருக்கு ஏழு வயது கேசவமூர்த்திக்கு நாலு வயது. பலகாரம் சுட்டு விற்பது என்ற தொழிலை அவள் தேர்ந்தெடுத்த போது அவளின் சொந்தங்கள் முகம் சுளித்தனர். எங்களுடைய மரியாதை போகுது என்றனர் சிலர். ஆனால் சின்னம்மா எவரைப் பற்றியும் கவலைப்படவில்லை. தகப்பனை இழந்து தன் தாயின் முகத்தை ஏக்கத்துடன் பார்க்கும் பிள்ளைகளை பார்க்கும் போது அவள் விம்மி வெடித்தாள். இருபத்தெட்டு வயதில் விதவையான சின்னம்மா தன்னைக் காத்துக் கொள்வதற்காக கோபக்காரியாக தனது குணத்தை மாற்றிக் கொண்டாள். வாய்க்காரச் சின்னம்மா என்று ஊர்க்காரரால் பெயர் சூட்டப்பட்டாள். ஆனால் அதற்காக சின்னம்மா யாரிடமும் கோபப்படவில்லை. அந்தப் பெயரை விருமபி ஏற்றுக் கொண்டாள். அது அவளுக்கு பெரும் தடுப்புச்

சுவரானது. ஆரம்ப நாட்களில் காலை வேளைகளில் அப்பம், இடியப்பம், தோசை, பிட்டுப் போன்ற பலகாரங்களை தானே வீடு வீடாகச் சென்று கொடுத்தாள். ஒரு சில மாதங்களிலேயே அதை நிறுத்திக் கொண்ட சின்னம்மா வீட்டில் வைத்து பலகாரங்களை விற்றாள். ஆனால் இரண்டு வீடுகளுக்கு மட்டும் தனது மகனிடம் கொடுத்தனுப்பிக் கொண்டிருந்தாள்.

சீறிச் சினந்து படுக்கையை விட்டு எழுந்த கேசவன் பற்பொடியால் வேகம் வேகமாக பல்லை துலக்கினான். முற்றத்திலிருந்த வாளித்தண்ணீரால் வாயைக் கொப்பளித்த போது அவனின் நித்திரைச் சோம்பல் போய்விட்டது. கோப்பியை தாயிடம் வாங்கிக் குடித்தவுடன் முழுச் சோம்பலும் அவனிடமிருந்து போய்விட்டது. வாழையிலையில் வைத்து மெதுவாக மடிக்கப்பட்டு பத்திரிகைத்தாளால் சுற்றிய அப்பத்தை ஒரு பையில் தாயார் போட்டுக் கொடுக்க அதை வாங்கிக் கொண்டு பூபதி வீடு நோக்கி கேசவன் போகத் தொடங்கினான். கேசவன் போனதும் மகளை எழுப்பத் தொடங்கினாள் சின்னம்மா.

„யோகா எழும்பு குளிக்க வேணும்“ தாயின் குரலைக் கேட்டு அவளும் நித்திரையை விட்டு மனமில்லாமல் எழும்பி பாயில் உட்கார்ந்தபடி“ அம்மா கோப்பி“ சிணுங்க பல்லைத் துலக்கிப் போட்டு வந்து கோப்பியைக் குடி, பல்லு துலக்காமல் கோப்பி குடிச்சுப் பழகாதே“ எனச் சொல்லிவாறே அவள் கைகள் அப்பம் சுடுவதிலும் இடியப்பம் அவிப்பதிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்தன. கிட்டத்தட்ட பத்துப் பேர் பலகாரம் வாங்கிக் கொண்டு போய்விட்டனர். கேசவனும் பலகாரம் கொடுத்துவிட்டு வந்துவிட்டான்.

மகளையும் மகனையும் கிணத்தடிக்கு கூட்டிக் கொண்டு போன தாய் அவர்கள் இரண்டு பேருக்கும் மாறி மாறி குளிக்க வார்க்கத் தொடங்கினாள். யோகாவை சவர்க்காரம் போடச் சொன்னால் அவள் முகத்திற்கு மட்டுமே போடுவதால் மகளிடமிருந்து சவர்க்காரத்தை வாங்கிய தாயார் உடல் முழுவதும் சவர்க்காரத்தைப் போடத் தொடங்கினாள். யோகாவின் மார்பிற்கு சவர்க்காரம் போட்டவளின் விரல்கள் உணரத் தொடங்கியதை அவள் முகம் சிறு புன்னகையாக வெளிக்காட்டியது. இன்றைக்கோ அல்லது நாளைக்கோ அது நடந்துவிடுமோ அது வீட்டில் நடக்குமா வரும் வழியில் நடந்திடுமோ அல்லது பள்ளிக்கூடத்தில்தான் நடந்திடுமோ என யோசனையுடன் மகளின் முகத்தை கூர்ந்து ஆர்வமாகப் பாரத்தாள்.

....

பள்ளிக்கூடத்திலிருந்து வேகமாக வந்த கேசவனைப் பார்த்ததும் தாய் சின்னம்மா பதறியபடி „ ஏன் கெதியாய் வந்தனி அக்கா எங்கை“ என்றவளின் கையில் ஒரு கடிதத்தை கொடுத்தான் கேசவன். கடிதத்தில் யோகமலர் பூப்பெய்திவிட்டதாகவும் பள்ளிக்கூடத்திற்கு வந்து அழைத்துப் போகச் சொல்லியிருந்ததை வாசித்த சின்னம்மா மகிழ்ச்சியடைந்தாலும் நிறையவே யோசிக்கவும் தொடங்கினாள். கேசவனையும் அழைத்துக் கொண்டு பள்ளிக்கூடம் போனவள் மகளை காரில் அழைத்துக் கொண்டு வந்து பிள்ளைகளுடன் இறங்கியதைப் பார்த்த பக்கத்து வீட்டில் வசிக்கும் இளையாச்சி சின்னம்மாவின் வீட்டு முற்றத்திற்கு வந்து கொண்டே „என்ன சின்னம்மா

மகள் இருந்திட்டாவோ" என்றவாறு குந்தில் உட்கார்ந்தாள். இரண்டு கைகளையும் குந்தில் ஊன்றியவாறு எழும்பவா இருக்கவா என்ற நிலையில் இருந்த இளையாச்சி „சரி நான் வாறன் எப்ப வார்க்கிறது என்று சொல்லன், அது சரி எல்லாருக்கும் சொல்லிச் சாமந்தியச் சடங்கு செய்யப் போறியோ..." என்று முடிக்குமுன் „இல்லையக்கா என்ரை நிலைமை தெரியுந்தானே ஒரு பத்துக் குடும்பத்துக்குள்ளை அதுவும் கிட்டிய சொத்தக்காரரோட செய்வம் என்று இப்ப யோசனை வந்திருக்கு" என்று சொன்ன சின்னம்மாவின் பதிலை கேட்டது பாதி கேளாதது பாதியாக „ஏதோ பார்த்துச் செய்" என்றவாறு இளையாச்சி போய்விடுகிறாள்.

சின்னம்மாவின் மகள் யோகமலர் பூப்பெய்திவிட்டாள் என்ற செய்தி ஊரெங்கும் தெரிந்துவிட்டது. இளையாச்சி தொடக்கி வைத்த அன்றைய செய்திபரம்பல் வீடுவீடாக பரவியது. அன்றைய முகநூல் அதுதான். யோகமலர் கிடுகிடுவென வளரத் தொடங்கினாள் கேசவனும் இளந்தாரியாகிவிட்டான். அப்பம் தோசை சுட்டு விற்கும் பணம் அந்த மூன்று பேரின் வாழ்க்கைச் செலவிற்கு போதாத நிலையையும் தாய் விறகு வெக்கையில் வெந்து போவதையும் யோகமலரும் கேசவனும் உணரத் தொடங்கினார்கள். தாய்க்கு எப்படி உதவி செய்வது என்ற யோசித்த அக்காவும் தம்பியும் தாயிடம்" அம்மா இந்த வீட்டோடை இருக்கிற காணியிலை ஏதாவது நட்டால் அது கொஞ்சம் வருமானம் தருமம்மா" என்று சொன்ன போது சின்னம்மாவால் அதை உடனடியாக ஏற்றுக் கொள்ள முடியவில்லை. ஆனால் பிள்ளைகள் இருவரும் வற்புறுத்தி தாயாரைச் சம்மதிக்க வைத்தனர். காணியெங்கும் அங்குமிங்குமாகப பரவிக் கிடந்த கற்களை பொறுக்கத் தொடங்கியதிலிருந்து மண்வெட்டியால் மண்ணை வெட்டிப் பதப்படுத்துவதை அக்காவும் தம்பியுமே செய்தார்கள். தாயாரை எந்த வேலையும் செய்ய அவர்கள் விடவில்லை.

பல ஆண்டுகளாக தரிசாக இறுகிப் போய் கிடந்த நிலமாகையால் மண்வெட்டி நிலத்தில் பட்டதும் „டங்" என்ற ஒலியுடன் மண்வெட்டி எகிறியது. ஆனால் கேசவன் மனம் தளரவில்லை. பள்ளிக்கூடத்தால் வந்து பின்னேரங்களில் மண்ணைப் பதப்படுத்தினான். அக்காவிற்கும் தம்பிக்கும் கழுத்தில் வடியும் வியர்வையை சீலைத்தலைப்பால் துடைத்தபடி தங்களை வளர்ப்பதற்காக நெருப்புத் திண்ணும் தாயின் உருவம் மட்டுமே அவர்களின் இந்த விடாமுயற்சிக்கு காரணமாகியது. பதப்படுத்திய காணியில் காலபோகப் பயிர்கள் நட்டார்கள். மிசின் வாங்கி தண்ணீர் இறைக்க அவர்களிடம் போதிய பணம் இல்லை. கேசவன் துலா மிதிக்க தாயார் பட்டை பிடித்து இறைக்க யோகமலர் தண்ணீர் கட்டினாள். யோகமலருக்கு பணமும் சேர்க்க வேண்டும், கேசவனை படிப்பிக்க வேண்டும் என்ற எண்ணமே சின்னம்மாவின் ஒரே நோக்கம்.

வருடங்கள் ஓடியது. யோகமலர் பன்னிரண்டாவது வகுப்பு படித்து முடித்ததும் தொடர்ந்து பல்கலைக்கழகம் போய் படிப்பதா இல்லையா என்ற மனப்போரில் தாயின் நிலை உணர்ந்து அவள் படிப்பை நிறுத்தினாள். அவள் படிப்பை நிறுத்தியது தாயாருக்கோ தம்பியாருக்கோ விருப்பமில்லையென்றாலும் வருமானப் பற்றாக்குறை யோகமலரின் முடிவிற்கு சாதகமானதாகவே இருந்தது. தோட்டத்தில் கிடைத்த காய்கறிகளை சின்னம்மா ஒவ்வொரு வீடுவீடாக கொண்டு சென்று விற்றாள். இடியப்பம்

அவித்தும் தோசை அப்பம் சுட்டும் வந்த வருமானத்தில் மூன்று நேரச் சாப்பாட்டுச் செலவுக்கு போக மிகுதி பிள்ளைகளின் உடைக்கும், கேசவனின் படிப்புச் செலவுக்குமே போதுமானதாகவிருந்தது. சின்னம்மா மூன்று சீலைகள் மட்டுமே வைத்திருந்தாள். ஒவ்வொன்றையும் ஒவ்வொரு நாளும் மாறி மாறி தோய்த்ததால் அதுவும் சிதைந்து கிழியத் தொடங்கியது.

கிழிந்த பகுதியை தைத்து அதை மறைத்து உடுத்து உடுத்து தைத்த தையல்கள் சேலையில் வண்ணங்களாகிவிட்டன. அவர்கள் மூவரின் வாழ்க்கையும் வறுமையும் வைராக்கியமுமாக நகர்ந்தது. கேசவன் பல்கலைக் கழகத்திற்கு தேர்வாகினான். ஒரு வருடம் மட்டுமே வறுமையாடு போராடி அவனால் படிக்க முடிந்தது. வறுமையை ஒரு காலத்தில் போராடி அதிலிருந்து மீளலாம். ஆனால் நாட்டின் சூழ்நிலை அவனை நாட்டைவிட்டு புலம்பெயர வைத்தது. நாளைக்கு உதவும் என்று பொத்திப் பொத்தி பாதுகாத்த தாலிக்கொடியையும் தோட்டக்காணியையும் விற்று கேசவனை கனடாவிற்கு தாய் அனுப்பி வைத்தாள்.

தாயையும் அக்காவையும் பிரிந்த கவலை ஒரு புறம் உழைக்க வேண்டுமே என்ற வைராக்கியம் ஒரு புறமுமாக அல்லாடிய கேசவன் உடலை உறைய வைக்கும் குளிரில் காலையில் வீடு வீடாக கடைகளின் விளம்பர பிரசுரங்களைப் போட்டான். மாலையில் ஒரு உணவு விடுதியில் வேலை செய்தான். உழைப்பு உழைப்பு கடுமையாக உழைத்தான். தாய் தீயில் வெந்து தங்களை வளர்த்ததும் திருமண செய்து வைக்க வேண்டிய அக்காவையும் நினைத்து நினைத்து உழைத்துழைத்து கனடாவிற்கு வந்து இரண்டு வருடங்களில் கேசவன் தனது அக்காவிற்கு திருமணம் செய்து வைத்தான்.

இருபத்தெட்டு வயதில் விதவையாகி தனது ஆசாபாசங்களை தான் அவித்த இடியப்ப விறகுத் தீயிலும் அப்பம் தோசை சுட்ட விறகுத் தீயிலும் சொரிந்து தனது பிள்ளைகளுக்காக வாழ்ந்த அந்த யாகத்தாய் கேசவன் கனடாவிற்கு வந்த ஐந்து வருடங்களுக்குப் பிறகு மார்புப் புற்று நோயினால் இறந்து விடுகிறாள். கேசவனால் தாயின் உடலுக்கு தீமூட்டக்கூட முடியவில்லை. துவண்டு போனான், ஆனால் அவனால் எதுவுமே செய்ய முடியவில்லை.

தாயின் நினைவு அவனை ஒரு தொழிலதிபராக்கியது. அப்பக்கார சின்னம்மா உணவகம், அப்பக்காரச் சின்னம்மா ஐந்துநட்சத்திர விடுதி, அப்பக்காரச் சின்னம்மா வீடு விற்பனையாளர் என்ற பெயரைத் தாங்கிய நிறுவனங்களின் உரிமையாளராகி அவன் வறுமையை உடைத்து எழுந்து நின்றான்.

மண்டபம் நிறைய மக்கள் நிறைந்திருந்தனர். தொண்டுள்ளம் கொண்ட சிறந்த கனவான், சிறந்த தொழிலதிபர் என்ற பட்டயத்தை கேசவனுக்கு கொடுத்து மேயரால் கௌரவம் பெறுவதற்காகவே அந்த விழா ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மேயர் கேசவனுக்கு கௌரவப் பட்டயத்தைக் கொடுத்து கெரவித்ததும் கேசவன் பேசத் தொடங்கினான்.

அவனின் பேச்சை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதற்காக ஒரு மாணவியை ஏற்பாடு செய்திருந்தார்கள். „மதிப்புக்குரிய மேயர் அவர்களே, எனது அன்பான உறவுகளே அனைவருக்கும் வணக்கம். இன்று நான் சிறந்த தொண்டுள்ளம் கொண்ட கனவான் என்றும் சிறந்த தொழிலதிபர் என்றும் கௌரவத்தைப் பெற்று அதற்கான பட்டயத்தை மேயரின் கையால் பெற்றிருக்கிறேன். இந்த கௌரவம் எனது தாய்க்குரியது. விதவை என்றால் என்னவென்று எனக்குப் புரியாத வயதில் இருபத்தெட்டு வயதில் எனது தாய் விதவையானாள். என்னையும் அக்காவையும் வளர்ப்பதற்காக எங்களது தாயின் போராட்டம் ஒரு யாகம் ஒரு தவம். நெருப்பினில் வெந்து இடியப்பம் அவித்து அப்பம் தோசை சுட்டு விற்று எங்களை வளர்த்தாள். காய்கறிகளை வீடு வீடாக கொண்டு சென்று விற்று வளர்த்தாள். கொட்டில் வீட்டில் மழை பெய்தால் ஒழுகும் மழை நீரை பிடிப்பதற்காக சட்டியை வைத்த வாழ்க்கையைத்தான் நாங்கள் வாழ்ந்தோம். மூன்று நேர உணவுக்கே நாங்கள் போரடினோம். எங்கள் தாய் எங்களுக்காக வாழ்ந்த வாழ்க்கையை ஒப்பீடு செய்ய முடியாது. அதைச் சொல்வதற்கு என்னிடம் சொற்களும் இல்லை. எங்கள் தாய் கடவுளை விட உயர்ந்தவர். கடந்தகால வாழ்க்கையை மூடிமறைக்க வேண்டிய போலித்தனம் என்னிடம் இல்லை. அதுதான் உண்மை, அதுதான் நிஜம், அந்த உண்மைகளைச் சொல்வதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன்.

கேசவனின் கண்கள் கலங்கியது. மொழிபெயர்ப்பு செய்த மாணவி குலுங்கிக் குலுங்கி அழுதாள். அவள் என்ன நினைத்தாளோ தெரியவில்லை „அங்கிள் யூ ஆர் த றியல் மான் „ என கேசவனை வாஞ்சையுடன் அணைத்தாள். மண்டபம் அமைதியாகியது. தலையைக் குனிந்து கண்களைத் துடைத்துக் கொணடனர் சபையினர். மேயர் கைக்குட்டையால் கண்களைத் துடைத்தபடியே மேடையேறிப் போனார். கேசவனை அணைத்து முதுகில் தட்டிக் கொடுத்தார். ஒலி வாங்கியை வாங்கிய அவர் „எனது வாழ்க்கையில் முதன்முதலாகச் சந்தித்த உயர்ந்த மனிதன் கேசவன் கேசவன் தான் கடந்த காலத்தில் வாழ்ந்த வாழ்கையைச் சொன்ன போது எனது கண்களும் கலங்கிவிட்டன" எனச் சொன்னதும் சபையோர் எழுந்து நின்று கைதட்டினர்.

கௌரவிப்பு விழா முடிந்து வீடு திரும்பும் வரை மனைவி பவானியோ பிள்ளைகளான கயல்விழியோ மலர்விழியோ எதுவுமே பேசவில்லை. தன்னைக் கௌரவித்துக் கொடுத்த பட்டயத்தை தாயாரின் படத்திற்கு முன்னால் வைத்துவிட்டு சோபாவில் உட்கார்ந்து தாயாரின் படத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். கண்கள் தளும்பத் தொடங்கியது. கேசவனின் மனைவி பவானி தனது சீலைத்தலைப்பாள் கேசவனின் கண்களைத் துடைத்தாள். பிள்ளைகளிருவரும் தந்தையின் பக்கத்தில் ஒருவரும் தாயின் பக்கத்தில் ஒருவருமாக உட்கார்ந்திருந்தனர் „ அப்பா அழாதீங்களப்பா என பிள்ளைகளிருவரும் தந்தையின் கண்ணீரைத் துடைத்தனர்.

„முடியேலை அம்மாவின் தியாகம்.............. பங்களா போன்ற இந்த வீடு, கார்கள், வசதியான வாழ்வு என எல்லாமே இந்தத் தெய்வம் கொடுத்தது. பவானி வாழ்க்கையை

அனுபவிக்க வேண்டிய வயதில் தனது ஆசைகளை தீயில் போட்டு எரித்த தெய்வம எங்கள் அம்மா.

கண்களைத் துடைத்தபடியே புத்தகத்தை மூடினேன். மூக்கை இழுத்த சத்தம் மனைவிக்கு கேட்க „ஏன் அழுகிறியள்" என மனைவி கேட்டாள். „ஒன்றுமில்லை" என்று சொல்லியவாறு நித்திரை கொள்ள முயற்சித்தேன். ஆனால் நித்திரை வரவில்லை.

மரண தூதனின் பயணம்

துப்பாக்கியின் விசையினை
அழுத்தும்
இடுக்குகளுக்குள்ளிருக்கும்
விரல் நுனியின்
நொடி அசைவினில்
ஒளிந்திருக்கிறது
கண்களுக்கு புலப்படாத
மரண தூதனின் பயணம்.........
முடிவிலியாய் நீளும்
மின்சாரக் கம்பிகளின்
சின்னஞ் சிறிய
மரண வெளிக்குள்
அகப்பட்டிருக்கும்
தலைகீழாய் தொங்கிய
வௌவாலின்
சாதலுக்கும்
வாழ்தலுக்குமாக
குறுகியிருந்த
வெளி போல ......
என்றுமே
மீள முடியாத
பெருந் துயர் ஒன்றின்
வருகையாய்
சாபிக்கப்பட்டிருந்தன
அந்தப் பொழுதுகள் .....
வனாந்தர இருட்டில
திசை மாறிப் போன
ஒரு பிச்சைக்காரனின்
பேதலிக்கும் மனசு
போல................
எனினும் ....
புன்னகைக்குள்
ஒளிந்திருக்கிறது
மரண தூதனின் பயணம்
பற்றிய வலி தரும்
நினைவுகள்.

- யாத்ரிகன்-

கனவே கலையாதே

தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா_ இப்பயிரை
கண்ணீரால் காத்தோம். கருக்கத் திருவுளமோ
_பாரதி

விடிகாலைப் பொழுதின் இளந்தென்றல் மெல்லிதாய் குளிர் கலந்து வீசிற்று. முதல் இரண்டு நாட்களும் பெய்த மழையின் ஈரம் காற்றில் கலந்திருந்தது. மேற்பகுதி மட்டுமே மறைக்கப் பட்டிருந்த கூடாரத்தின் பக்கவாட்டுப் பகுதிகளால் சாரல் அடித்து கூடரத்துக்குள்ளேயும் மழை நனைத்திருந்தது. மற்றைய நாட்களாக இருந்தால் பகல், நடுச்சாமம், விடிகாலை என்ற வேறுபாடின்றி கும்பல் கும்பலாய் ஏராளமான மக்கள் நடமாட்டம் இருந்திருக்கும். கடும் மழை காரணமாக கூடுதலாய் அனைவரும் கூடாரங்களுக்குள் ஒதுங்கிக் கிடந்தார்கள். மழைகாரணமாக வெளிக்கிளம்பிய காட்டு சூழலுக்கே உரிய விஷ ஜந்துக்களும் கூடாரங்களுக்குள் ஒதுங்க தலைப்பட்டன. முடங்கி கிடக்கும் அந்த பொழுதில் கூட ஒப்பாரிகளும், ஓலங்களும், கதறல்களும், முனகல்களும் ஓய்வின்றி கேட்டுக் கோனே இருந்தன.

*இத்தனை சந்தடிக்கிடையில் ஒரு கூடாரத்தின் நடுக்கம்பியில் சாய்ந்து தன்னிலை சூழ்நிலை மறந்து கண்ணயர்ந்திருந்தாள் விசாலினி. பலநாட்களாய் தூக்கமில்லாத சோர்வு, பசி, பயம், மனம் கொள்ளா வேதனைகள் எல்லாமுமாகச் சேர்ந்து அடித்துப் போட்டா ற் போல் தூங்க வைத்திருந்தன. அந்த ஆழ்ந்த உறக்கத்தின் போதும் தன்னருகே மல்லாக்க சாய்ந்து வலியில் முனகிக் கொண்டிருந்த கணவனை ஒருகையால் அணைத்து, மடியில் **தன்** இரு குழந்தைகளை தூங்க வைத்து தோளில் தங்கை மகள் பவித்ராவை சாய்த்து அணைத்தவாறே கண்ணயர்ந்திருந்தாள்*

*திடீரென கேட்ட பாரிய குண்டு வெடி சத்தத்தில் அதிர்ந்து கண் விழித்தாள். அவசரமாய் குழந்தைகளை இழுத்து தனக்குள்ளே இறுக்கி அணைத்துக் கொண்டு, கணவனை மேலும் தன்னருகே நெருக்கிக் கொண்டாள். _ எதனிடமோ இருந்து பாதுகாக்க முனைவபள் போல். தொடர்ந்து கேட்ட பாரிய அதிர்வுகளில் அவள் அப்படியே இறுகிப் போயிருந்தாள். மனம் தர்ஷி...... தர்ஷி... எனப் பதறிக் கொண்டிருந்தது. பெரியம்மா தர்ஷி அக்காவுக்கு எதுக்கும் நடக்கா தெல்லோ? என்று பரிதவிப்புடன் கேட்ட பவித்திராவையும் **தன்** மற்றைய இரண்டு குழந்தைகளையும் ஆறுதல் படுத்தியவாறே **தன்** மன ஆறுதலுக்காய் கணவனை*

நோக்கிய போது, அவன் கண்களால் நீர்வடிந்து காதோரத்தால் ஒழுக, அந்த குடும்பத்தின் முதல் வாரிசான தர்ஷி பற்றிய இதய பூர்வமான வேண்டுதலில் உதடு துடிக்க விட்டத்தை வெறித்திருந்தான்.

உடலும் மனமும் ரணமாகி அசைய முடியாமல் கிடக்கும் கணவனை நோக்குகையில் கண்கள் பொங்கி வழிந்தன. உன்னால் தானே.. உனக்காகத்தானே..... உன் மீது கொண்ட காதலால் தானே நீ போகும் பாதையில் உன் கூட வந்தேன். கனவுகள் வளர்த்தேன். உன் கரு சுமந்து குடும்பம் சமைத்தேன். எல்லாமே...... எல்லாமுமே...... வெறும் கதையாய்.... கனவாய் போய் விடுமா? அருமை மகளை இங்கே விட்டுவிட்டு மருத்துவத்துக்காக கூட விலகி செல்ல மாட்டேன் என்ற உன் பாசப் பிடிவாதம் உன்னை நாம் இழந்து போக வைத்து விடுமா? நெஞ்சு வேதனையில் விம்ம கடந்த காலம் காட்சி**யாய்** கண்களில் விரிந்தது.

வி**சாலினி**யின் பள்ளிக் காலத்தில் தான் அவள் திவாகரனை சந்தித்தாள். காதல் கொண்டாள். பெரிதாய் எதிர்ப்புகள் ஏதுமின்றி பெற்றோரால் அங்கீகரிக்கப்பட்ட அவர்கள் உறவு, உரிய வயது வந்த போது மனம் நிறைந்த எதிபார்ப்புகளும் கனவுகளுமாக திருமண பந்தத்தில் இணைய வைத்தது.

அது இந்திய ராணுவத்தின் ஆக்கிரமிப்பால் மக்கள் திரள் திரளாக புலம் பெயர ஆரம்பித்த காலம். இருவரதும் **சகோதரங்கள்** தாய் நாட்டை விட்டு மெல்ல மெல்ல வெளியேறிக்கொண்டிருந்த போது, இருவரின் பிறந்த வீடுகளிலும், மற்றும் அயலிலும் வேகமாக பெருகிய வசதிகளும், கை நிறைந்த பணப்புழக்கமும் விசாலினியையும் சலனப்படுத்த திவாகரிடம் த**ன்** விருப்பம் முன் வைத்தாள்.

அவன் சமாளிப்போ சாட்டுதலோ ஏதுமின்றி உறுதியான குரலில் தெளிவாக இங்கே பார் விசாலி எனக்கு என்றைக்குமே என் பிறந்த மண் தாண்டி சென்று வாழ விருப்பமில்லை. இங்கிருந்து பார்க்கும் போது அக்க**ரை** பச்சையாகத்தான் இருக்கும். ஆனால் வாழ்க்கை என்பது வெறுமனே பணம் மட்டும் இல்லை. விழாக்களும் விசேஷங்களும் கொண்டாட்டங்களும், குதூகலமுமாய் கூடிக்களிப்பது. துன்பம் நேர்கையில் ஒன்றுகூடி ஆதரவாய் அணைத்து நிற்பது. எங்கட மக்கள் அதிகமில்லாத மண்ணில எங்கட கலாசாரம் விழா பண்டிகை என்று எதுக்கும் இருக்கப் போவதில்லை.

*உணர்சிகளைக் **கொன்று** வசதிகளைப்பெருக்கி கண்களிலும் நெஞ்சிலும் நிரந்தர ஏக்கம் சுமந்து வாழும் அந்த வெறுமையான வாழ்க்கை எமக்கு வேண்டாம் விசாலி என்றான். அவள் ஏக்கமாய் அவனை ஏறிட்ட போது அன்பாய் தலை வருடி, ஆதரவாய் அணைத்து நான் இங்கேயே எந்த குறையும் இல்லாமல் உன்னை வாழ வைப்பேன் ப்ளீஸ்... புரிஞ்சு கொள்ளேன் கண்மணி என தன கரகரப்பான குரலில் உறுதி தொனிக்க மொழிந்து நெற்றியில் முத்தமிட்ட போது அவளுக்கு மற்றைய ஏக்கமெல்லாம் மறந்தே போயிற்று. இந்த அணைப்பை இந்த காதலை இந்த ஆதரவை உலகில் எந்த மூலையிலும் என்ன விலை கொடுத்**தும்** வாங்க முடியாது என்று தோன்றிற்று. அவனது கை அணைப்புக்குள் நின்றவாறே அவனது கண்களை ஊடுருவி நோக்கி வேண்டாம் திவா இப்படி இயல்பாய் தெளிவாய் சந்தோஷமாய் உங்களால் எங்கே இருக்க முடியுமோ அது தான் எனக்கு சொர்க்கம் என்றாள்.*

அப்படித்தான், அவர்களது ஒவ்வொரு நாட்களுமே சொர்க்கமாகத்தான் கழிந்தது. அலுவலக நேரம் தவிர்ந்த நேரங்களில் வயல், தோட்டம், கால்நடைகள், கோழிப்பண்ணை, என்று அவனது சலிக்காத உழைப்பின் பயனாய் நிறைவான பொருளாதாரம், மனம் நிறைந்த நேசம் என்று சந்தோசம் மட்டுமே இருந்த அவர்களது குடும்ப வாழ்வு மேலும் ஸ்திரப்பட்டதன் அறிகுறியாய் , அவர்களது காதலின் சின்னமாய் தர்ஷி பிறந்தாள். அவளது பிறப்புடன் புதுவீடு கட்டி குடிபோனார்கள்.

*இரத்தத்தை வியர்வையாக்கி ஓய்வின்றி உழைத்த காசில் ஆசையாய் கட்டிய வீட்டில் ஒருவருடம் கூட அவர்களால் வாழ முடியாது போயிற்று. 1995 இராணுவ முற்றுகையில் அவர்களது கனவு இல்லம் சிதிலமாய் சிதைந்து போனது. தொடர்ந்தும் யாழ் மண்ணில் அந்த ராணுவ முற்றுகைக்குள் இருக்கப் பிரியம**ற்று** த**ன்** உழைப்பும் சேமிப்பும் வெறும் கல்லுச் சிதறலாய் கிடக்கு காட்சி காணச் சகிக்காது திவாகரனும், அங்கிருக்கும் ஒவ்வொரு நாளும் கணவனின் உயிருக்கு உத்தரவாதம் இருக்கப் போவதில்லை என்ற பயத்தில் விசாலினியும் அங்கிருந்து வெளியேறுவ**தாய்** முடிவெடுத்தார்கள். திவாகரனின் அலுவலகத்திலிருந்து வன்னிக்கு மாற்றல் வாங்கி கொண்டு புறப்பட்டார்கள். பட்டது போதும் வெளிநாட்டுக்கு வந்து விடுங்கள் என்ற சகோதரங்களின் அக்கறையையும் பாசத்தையும் விட சொந்த மண் மீது அதிக நேசம் இருந்தது அவர்களுக்கு.*

வன்னி மண் அவர்களை வாரி வரவேற்று, தன் வளங்களை அள்ளி வழங்கியது. மீண்டும் பழைய மாதிரியே நம்பிக்கை கொண்டு இழந்ததை எல்லாம் விரைவில் ஈடுகட்டும் நோக்கில் முழு வீச்சோடு உழைத்தார்கள். வன்னியின் பாரிய பயிர்செய்

நிலம் செல்வமாய் குவித்தது. அத்துடன் கூடவே இன்னும் இரண்டு மழலைகளையும் சேர்த்துத் தந்தது. மீண்டும் நிலம் வாங்கினார்கள் ஆசை ஆசையாய் திட்டம் போட்டு அமர்க்களமாய் வீடு கட்டினார்கள். புதிது புதிதாய் கனவு வளர்த்தார்கள். அவர்களின் முதல் வாரிசு கண் குளிர வளர்ந்து நின்று தன் எதிர்காலம் பற்றி கனவுகள் காண வைத்தாள்.

*தொடரப்போகும் அவளது உயர்கல்வி பற்றி, மதிப்பு மிக்க உத்தியோகம் பற்றி, அவளது கல்யாணம் பற்றி நெஞ்சு நிறைய கற்பனைகளும் கண் நிறைய கனவுகளுமாய் திரிகையில் காலத்தின் கட்டாயம் அவர்களது செல்வ மகளை கடமை அழைத்தது. மஞ்சளும் மங்களமுமாய் வாழவைக்க கனவுகண்ட அவர்கள் அன்பு மகளை க**று**த்த நூலில் கழுத்தில் சாவு கட்டி கா**ள**த்துக்கு அனுப்பி விட்டு ஆ**ற்று**வாரோ தேற்றுவாரோ இன்றி சோகத்தில் சுருண்டு போனது வீடு. பொத்திப் பொத்தி வளர்த்த மகளை போர்க்களத்துக்கு அனுப்பி விட்டு **உண்ண** முடியாமல் உறங்க முடியாமல் ஓய்ந்து கிடந்த நாட்களில் ஒரு நாள்....*

*விசாலி அன்றே... அன்றே.. ... நீ கேட்டது போல் நாட்டை விட்டுப் போயிருக்கலாம் என்றான் திவாகர் குரல் உடைய. அவள் அமைதியாய் அவனை ஏறிட்டாள். இங்கே மட்டும் ஏக்கங்கள், இல்லாமல் எதிர்பார்ப்புகள் சிதையாமல் எமது வாழ்வை எம்மால் வாழ முடிந்ததா ? என்றான் வேதனையுடன். அவள் ஆதரவாய் அவன் கரம் பற்றினாள். மனம் நிறைய கனவுகள் வளர்த்து ஓடி ஓடி அதை நனவாக்கி அப்படியே ஒரே கணத்தில் அத்த**னை**யும் தொலைத்து........ திரும்பவும் கனவுகள் வளர்த்து...... திரும்பவும்....... திரும்பவும்..... குரல் உடைந்து கம்மிற்று. எல்லாத்துக்கும் மேலாய் உயிருக்குள் பொத்தி வளர்த்த எங்கட தர்ஷி குஞ்சு ... எங்களை ...எங்கடை மண்ணை காக்கவென்று ... தாங்க முடியல்ல விசா உடைந்து விசும்பும் கணவனையும் புரியாமல் மருண்டு நிற்கும் குழந்தைகளையும் தேற்றுவது பிரதானமாய் பட ஏதேதோ ஆறுதல் வார்த்தைகளை அவள் உதிர்த்தாலும் அவன் கூறிய நிஜம் உள்ளிருந்து அவள் உயிர் குடித்துக் கொண்டுதானிருந்தது.*

*தர்ஷியின் விடயம் அறிந்த போது வெளிநாட்டில் இருந்த சகோதரங்கள் தாம் சொல்ல சொல்ல கேட்காமல் அங்கேயே இருந்து குழந்தையின் வாழ்க்கையை நாசமாக்கி விட்டதாக கோபப்பட்டார்கள். இரத்தக் களறியாய் கிடக்கும் மனக்காயத்தில் அவர்களும் கத்தி செருகிய வ**லி**யில் இவர்கள் துடித்து துவழ்கையில் விசாலினியின் தங்கை ஐரோப்பாவில் இருந்து குடும்பத்தோடு வந்தாள். முடிந்தவரை தமக்கையின் குடும்பத்துக்கு ஆறுதலாகவே இருந்தாள்.*

திரும்பி செல்ல நினைக்கையில் அவள் மகள் பவித்திராவை மண் பாசம் ஈர்த்தது. பயணத்தை தாமதிக்க வைத்தது.

வெளிநாட்டில் இருந்து கற்பனை பண்ணும் போது உணரும் பயங்கரமான சூழ்நிலையில் சொந்த மண் இருக்கவில்லை. எந்த ஆபத்தும் இன்றி அமைதியாகத்தான் இருந்தது வன்னி மண். சொல்லப்போனால் பெரியவர்களுக்கே திரும்பி செல்வது மனநெருடலாகவே இருந்தது. இன்னும் இருவாரங்கள் பவித்திரா தமக்கையுடனே தங்கி வருவதில் எந்த ஆட்சேபமும் சொல்ல முடியாத சூழ்நிலை தான் அப்போது நிலவியது. அக்கா குடும்பத்தின் இறுக்கம் சற்று தளரவும் அவர்கள் மேல் வைத்த நம்பிக்கையிலும் குழந்தையின் ஆசைக்கு இணங்கி அவளை அங்கேயே விட்டு விட்டு, வரப்போகும் ஆபத்து உணராமல் ஐரோப்பாவுக்கு பயணமானார்கள்.

பவித்திராவின் விடுமுறை முடிவதற்குள் போர் மூண்டுவிட்டிருந்தது. ஓய்வின்றி பொழிந்த பீரங்கி குண்டுகளும், ஷெல் வீச்சுகளும், விமானத்தாக்குதல்களும், வன்னி மக்களை ஓட ஓட விரட்டின. உயிரை மட்டும் சுமந்து கொண்டு ஏதிலிகளாய் ஓடினார்கள். கூட்டம் கூட்டமாய் ...... கும்பல் கும்பலாய் ஓடினார்கள். ஓடி ஒதுங்கிய இடத்தில் பதுங்கு குழி வெட்டி பதுங்கினார்கள். ஒருவேளை மட்டும் அரை வயிற்றுக் கஞ்சி குடித்தார்கள்.

*தங்கிய இடத்**திலும்** குண்டுகள் துரத்தி வந்த போது பலரைப் பறிகொடுத்தார்கள். பறிகொடுத்தவர்களை அடக்கம் பண்ண அவகாசமின்றி காயம் பட்டவர்களை சுமந்து கொண்டு எஞ்சியவர்கள் ஓடினார்கள். குண்டு வராத தூரத்தில் பதுங்கு குழி அமைத்தார்கள். அவசர உதவிக்கு போன வெளிநாட்டு தொண்டு நிறுவனங்களின் புண்ணியத்தில் கூடாரம் அமைத்து தங்கினார்கள். ஒருவேளை மட்டும் கால் வாயிற்று கஞ்**சி** குடித்தார்கள். மீண்டும் அவர்களின் இருப்பிடம் தேடி துரத்தி வந்த குண்டுக்கு பலியானார்கள். ப**றி** கொடுத்தார்கள். ... மீண்டும் உயிர் மட்டும் சுமந்து ஓடினார்கள்....... மீண்டும்....மீண்டும்.....*

மனிதம் கொன்று, மனிதம் தின்று, பேய்கள் ஆட்சி நடத்தும் இராச்சியத்தில், தன்மானமுள்ள ஒரு இனம் ஓட ..ஓட துரத்தி துரத்தி அளிக்கப்படும் அவலம் அரங்கேறிக்கொண்டிருந்தது.

நினைவுகளில் மூழ்கி கிடந்த விசாலினியை அம்மா என்ற குரல் கலைத்தது. பரிதாபமாய் தாயின் முகம் பார்த்து தன் ஒட்டிய வயிறு தடவிய குழந்தையின் பசி உணர்ந்து அவள் கையேடு கொண்டு வந்திருந்த ஒரேயொரு சின்னஞ்சிறிய

*கைப்பையை துளாவி அதிலிருந்த சிறிய பொலித்தீன் பையை எடுத்து மூலையில் கிடந்த ஒரே சிறிய பாத்திரத்தினுள் உதறினாள். உதிர்ந்த அரிசிப்பருக்கைகள் கொண்டு கூடாரத்தின் மூலையில் அடுப்பு மூட்டி கஞ்சி காச்ச எத்தனித்த போது...... தூரத்தே அந்த சத்தம் கேட்டது. காதுகளைக் கூர்மையாக்கி உற்றுக் கவனித்தாள். அந்த ஒ**லி** விமானத்தி**ன்** இரைச்சல் அவர்களின் இருப்பிடத்தை நோக்கி வந்து கொண்டிருந்தது.. பரபரப்பானாள் .*

*ஐயோ கீபிர் வருகுது குண்டு போடப் போறாங்கள் ..... கூச்ச**லும் , அவ**லமுமாய் மக்கள் சிதறி ஓடிக்கொண்டு இருந்தார்கள். உடலின் அத்தனை அணுக்களும் பதற பரிதவித்தார்கள்.. விசாலி பிள்ளைகள் கவனம் பவித்திராவை எப்படியாவது பாதுகாப்பாய் திருப்பி அனுப்பி போட வேணும் த**ன்** உடலின் சக்தி எல்லாம் திரட்டி பரபரத்தான் திவாகர். பவி பங்கருக்கு ஓடம்மா என்ற பெரிய தாயின் பதறல் ஓலத்தில் அருகே நின்ற தம்பியை இழுத்தவாறே ஓடினா**ள்** பவித்திரா.*

பயத்தில் தாயை இறுகக் கட்டிக்கொண்டு வீரிட்டழும் கடைசி மகனை அணைத்தவாறே பரிதாபமாய் கணவனை நோக்கினாள். பாதங்களிலும், தொடையிலும், இடுப்பிலும் காயப்பட்டு நகர முடியாமற் கிடக்கும் கணவனை எப்படி பாதுகாப்பாக பதுங்கு ***குழி****க்கு நகர்த்துவது. ஆறடிக்கு அதிகமான உயரத்தில் வைரம் பாஞ்ச உடலமைப்பு கொண்டவனை அசைக்கக் கூட முடியாது தவித்தாள்.*

அவளது பரிதவிப்பு உணர்ந்து என்னை அசைக்க உன்னால் முடியாது சிரமப் படாதே விசா என்றான் ஈனக்குரலில் ஆதரவாக. குழந்தையை காப்பாற்ற வேணும் தூக்கி கொண்டு ஓடு விசா **அதிர்ந்து** *தடுமாறியவளை அவசரப்படுத்தினான்.*

விமானம் கொத்து கொத்தாய் குண்டுகள் வீசிற்று. கூடவே ராணுவத்தின் ஷெல்களும், பீரங்கி குண்டுகளும் வழமை போலவே எங்கும் தாராளமாய் வெடித்து சிதறின. அந்த மண்ணின் உரிமைக்குரிய இனம் சுற்றி வளைக்கப் பட்டு கொன்று குவிக்கப் பட்டுக் கொண்டிருந்தது. குண்டுகள் தீர்ந்து மீண்டும் நிரப்புவதற்காய் விமானம் சென்ற பிறகு, ஷெல்களும் பீரங்கி குண்டுகளும் ஓய்ந்து அடிப்பவர்கள் சற்று ஓய்வெடுக்க ஆரம்பித்த போது இங்கே மனித ஓலங்கள் வானை பிளந்தன.

புகையும் புழுதியுமாய் மேலெழுந்த புகை மண்டலம் சற்று மறைந்து மனித ஓலம் மனதை கிழித்த போது அதிர்விலிருந்து மீண்டு பங்கருக்குள் இருந்து மெதுவாய்

*வெளிப்பட்டா**ள்** பவித்ரா. அவசரத்திலும் பயத்தின் துடிப்பிலும் ஒரு தம்பியை மட்டும் இழுத்துக் கொண்டு பங்கருக்குள் பதுங்கியது இப்போது தான் மனதில் உறைக்க, பெரியப்பாவும், பெரியம்மாவும், மற்ற தம்பியும் எங்கே என்ற கேள்வி மனதை பதைபதைக்க வைத்தது.*

நெஞ்சு பதற தம்பியை இழுத்துக் கொண்டு தங்கள் கூடாரம் இருந்த திசை நோக்கி ஓடினாள். சிதைந்திருந்த பல கூடாரங்களில் தாங்கள் தங்கிய கூடாரத்தை குழந்தையால் அடையாளம் பிடிக்க முடியாது போயிற்று. ஒரு கையில் தம்பியை பற்றியவாறே பெரியப்பா... பெரியம்மா .... ஓலைமிட்டவாறே பயந்து போய் நாலாதிசையும் இலக்கின்றி ஓடினாள்.

*ஓடி...ஓடி சிதைந்திருந்த தம் கூடாரத்தை அடையாளம் கண்டு, அதை அவள் நெருங்கிய போது கண்ட காட்சி!!!! அதிர்ச்சியில் வார்த்தை வர மறுத்து விக்கித்து ஹோ..... என்ற ஓலம் மட்டுமே அவளிடமிருந்து வந்தது. அவளது அன்பான பெரியப்பாவும் பெரியம்மாவும் சிதறி சிதிலமாகி ...... மண்ணில் புரட்டி எடுக்கப் பட்டு, அவர்களின் குட்டி தம்பி தாயின் காலடியில் உருட்டி போடப்பட்ட சதைப்பிண்டமாய்.... உணவு சமைக்க வைத்த பாத்திரத்தில் சில சதை துணுக்குகளுடன் அவங்களின் குருதியும் நிறைந்திருந்தது. அந்த நரமாமிசம் உண்ணும் பேய்களுக்கு அவர்கள் இறுதியாய் போட்டு சென்ற பிச்சை போல். உடல் நடுங்கி கால்கள் சோர தம்பியை பற்றிய வண்ணம் மயங்கி சாய்ந்தா**ள்** பவித்ரா. அவளது இந்த பதின் மூன்று வருட சிறிய வாழ்வில் அவள் பிறந்து வளர்ந்த ஐரோப்பிய மண்ணில் சாவை கூட குழந்தைகள் திரைப்படத்திலும் பார்க்க கூடாது என்ற கட்டுப் பாடுள்ள நாட்டில் வளர்ந்தவள்... நேரில் அனுபவித்த கோரக் காட்சியின் பயங்கரத்தை தாங்கும் சக்தியற்று அதிர்ந்து மயங்கிய பவித்திரா நினைவு மீண்டு எழுந்த போது...... இன அழிப்பின் இன்னல்கள் அனைத்துக்கும் நடுவில் பிறந்து **அழி**க்க **அழி**க்க அதிக அதிகமாய் முளைக்கும் ஒரு இனத்தின் பிரதிநிதியாய் பிஞ்சு வயதிலும் போரின் யதார்த்தங்களுக்கு தன்னை இயைபு படுத்த கற்றுக்கொண்டு வளர்ந்த அவளது தம்பி இறுகிப்போன பிஞ்சு முகத்தில் கண்களில் நீர் அருவியாய் ஓட நீயே கதி என்பது போல் அவளது கரத்தை பற்றிய வண்ணம் அமர்ந்திருந்தான். மீண்டும் வீரிட**லு**டன் தம்பியை இ**று**க அணைத்துக் கொண்டாள்.*

தம்பியின் கையை பற்றிய வாறே அந்தரித்துப் போய் நகரும் கூட்டத்துடன் தங்கி, தாக்குதலுக்கு பதுங்கி, உயிர் காத்து, மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல் நகர்ந்து கொண்டிருந்தாள் பவித்ரா. அந்த மண்ணில் பிறந்து

வளர்ந்தவர்களே எங்கே போகிறோம் என்ற இலக்கில்லாமல் ஓடிக்கொண்டிருந்த போது எதுவுமே தெரியாத குழந்தைக்கு ..... அனால் இங்கு வந்த நாளில் இருந்து தர்ஷி அக்கா ஏன் குடும்பத்தை விட்டுப் போனா என்ற கேள்வியில் ஆரம்பித்து, பெரியப்பா பெரியம்மாவிடம் இங்குள்ள வாழ்வு பற்றி அவள் விசாரித்தறிந்த அத்தனை விடயங்களும் மனதுக்குள் திரும்ப , திரும்ப ஓடி ஓடி பலமாய் பதிவாகி கொண்டிருந்தன.

*சாவுக்குள்ளே வாழும் அவர்களின் வாழ்வு பற்றி..... காணக் காணக் கலைக்கப் படும் அவர்களது கனவுகள் பற்றி ....எதிர்பார்ப்பே இல்லா அவர்களின் எதிர்காலம் பற்றி..... தன்னை சூழ உள்ள மக்களின் அவலமும் சோகமும் .... அனைத்துமே ஏன் இப்படி என்ற கேள்வியை எழுப்பின. தான் பிறந்த மண்ணின் பாதுகாப்பான சூழ**லை**யும் இவர்களது அவலங்களையும் மனம் ஒப்பிட்டுப் பார்த்தது . இவர்களது கனவுகளும் உடமைகளும் , எதிர்காலங்களும், உறவுகளும் , உடல்களும் கூட ஏன் சிதைக்கப் பட்டன? என ஆத்திரம் வந்தது. இது போல் தான் அவள் வாழும் நாட்டிலும் போர் நடந்த காலத்தில் அத்தனையும் சிதைத்து அளிக்கப் பட்டதாக அவள் கற்றது அந்த சந்தர்ப்பத்திலும் நினைவு வந்தது.*

*ஆனாலும் அந்த நாடு மீண்டு எழுந்தது. தன்னிறைவு கண்டு, செல்வம் கொழித்து, தனிமனித சுதந்திரம் பாதுக்காக்கப் பட்டு,........ அப்போ இங்கேயும்........இவர்கள் அனைவரினதும் தனிப்பட்ட எல்லாமே அளிக்கப் பட்டாலும் ...... அனைவரும் ஒன்று சேர்ந்து கண்ட அந்த பெரிய கனவு..... அது கட்டாயம் நிறைவேற வேண்டும் என்ற வைராக்கியம் ஏற்பட்டது. அந்த கனவு நிறைவேற இந்த இனம் கொடுத்த வி**லை** அதிகம். நிறைவேறி விட்டால் இந்த நாடு கூட ஒரு நாள் அவள் வாழும் நாடு போல் ஆகி விடும். அந்த கனவு நனவாக எதுவும் செய்ய துணிந்தது மனது.*

*கூட்டத்துடன் நகர்ந்து நகர்ந்து குண்டு தாக்**காத** பாதுகாப்பு பிரதேசம் வரை தப்பி வந்து விட்டதை,கூட வந்தவர்களின் பேச்சிலிருந்து உணர்ந்து கொண்டாள். பெற்றோர் **இ**ங்கு நடந்த அனைத்தும் அறிந்திருப்பார்களா? பதறி தவிப்பர்களா என பிஞ்சு மனம் பாசத்தில் பரிதவித்தது. அவளது நிலை தெரிந்த சிலர் தொண்டு நிறுவனத்தை அணுகி அவள் திரும்பி ஐரோப்பாவுக்கு செல்ல உதவிகேட்கும் படி அறிவுரை வழங்கினார்கள். இங்கிருந்து சென்று விடலாம் என்ற நம்பிக்கை வந்த கணத்திலேயே தம்பியை தனியே விட்டு செல்வதில்லை என்ற வைராக்கியமும் பிறந்தது.*

*மனதின் உறுதி குரலில் தொனிக்க நாம் இங்கேயிருந்து நான் பிறந்த நாட்டுக்கே போயிடலாம் என்றாள் **தம்பியிடம்**. அவன் கண்ணீர் வடிய பரிதாபமாய் மறுத்து தலையசைத்தான். இங்கே... இங்கே...... அக்கா....விம்மினான் குழந்தை. போர் சூழலில் சிக்கி கொண்ட தமக்கே இந்த கதியென்றால் இவர்களை காக்க போரிட்ட தர்ஷி தப்பியிருப்**பாள்** என்ற நம்பிக்கை பவித்ராவுக்கு இருக்கவில்லை. << தம்பி நீ பாதுகாப்பாக வளர்ந்து பெரியவ**னா**னதும் உன்னோடு நானும் இங்கே வருவேன். அதுவரை இங்கே நடந்த எதையும் மறவாதே. நீ கண்ட காட்சிகளையும், உன் பெற்றோர் கண்ட கனவுகளையும் ,உன் சகோதரங்களின் நினைவுகளையும் கலைய விடாமல் உன் கண்களுக்குள்ளேயே பூட்டி வை.*

*உன் வரவுக்காய் தர்ஷி அக்கா மட்டுமில்லை உன் அம்மா, அப்பா, தம்பி எல்லாருமே இந்த மண்ணின் ஒவ்வொரு அணுவிலும், காற்றிலும் கலந்து காத்திருப்பார்கள். குரல் உடைய அவள் கூறினாலும் அதில் உறுதியும், எங்கே அவள் பிறந்திருந்தாலும் அடிப்படை மண் நேசமும் இருந்தது. பெற்றாரை தொடர்பு கொண்டுவிட்டால் போதும் த**ன்** பெற்றோரால் தன்னையும் தம்பியையும் எப்படியும் தம்மிடம் எடுத்துக் கொள்ள முடியும் என்பதும், தன்னிடமுள்ள நினைத்ததை செயலாக்கும் வரை ஓயாத தீவிரக்குணம் அவர்களிடமிருந்தே தனக்கு வந்தது என்பதும் அவளுக்கு தெரியும்.*

அருகில் இருந்தவர்கள் காட்டிய கூடாரத்தால் அமைந்த தொண்டு நிறுவன அலுவலகம் நோக்கி நடந்த அந்த நான்கு சின்னப் பாதங்களின் உறுதியை விட அந்த குட்டி மனங்களில் அதிக உறுதியும் வைராக்கியமும் இருந்தது. ஆதரவான புன்னகையுடன் கரம் பிரித்து வரவேற்ற அந்த அலுவலகத்துக்குள் நுழைந்தார்கள்.

அடி பட்ட விலங்கு சாதாரனமானதை விட ஆவேசமும் ஆக்ரோஷமும் கொண்டது. பாய்வதற்காய் பதுங்கி கொள்வது. அவர்கள் அடிபட்டவர்கள்.

- மாலினி

கவியரசு கண்ணதாசன்

காரைக்குடி மடியில் ஒரு கவிதை கடல் உதயம்
கற்பாறையும் கசியும்படி கவிசிந்திடும் இதயம்
கலங்காதிரு மனமேஎன திரைவான் புகு இமயம்
கண்ணனவர் தாசன்என ஒளிரும் கவிநிதியம்

சிறுகூடல் பட்டிதவழ் சங்கத் தமிழ்ப்பிள்ளை
சீர்வரிசை தமிழ்த்தாய்க்கு தந்தான்தன் பாட்டால்
சிந்தைசெவி இன்பம்பெறும் சந்தயீசை கேட்டே
சிறகசைத்து பறக்கும் கவிகட்கோ வழிகாட்டி

செட்டிநாட்டுத் தங்ககவி பாடல் தொறும் புதுமை
கொட்டி நிறைந்த கற்பனைகள் மனதில் குடி கொள்ளும்
எட்டுத்திக்கும் எட்டி எட்டி யாவர் கவிதை செல்லும்
இதயங்கள் பசியாற என்றும் கதை சொல்லும்

ஆண்டாள் திருப்பாவை இள மனதை ஈர்க்க
அனுபவ பாடமெலாம் பெருங்கவியாய் வார்க்க
அனைத்து வகைப்பாடல்களும் சுரந்துதந்த ஊற்று
அதிசயிக்கும் சந்தம்எலாம் பொழிந்து சென்ற மேகம்

உணர்ச்சிமெய்ப் பாடுகட்கு துல்லிய் உருகொடுத்து
ஊர்ந்து வரும் சிந்தன்ஐகல் உயிர்செழிக்க நீராம்
உலகத்தமிழ் நாவெல்லாம் உச்சரிக்கும் பாட்டோ
உயர்தனி தமிழ்குடிகள் சேவியருந்தும் பாலாம்

ஆண்டவனை பாடுவதில் எல்லையீல்லா ஞான்ம்
அன்புபாசம் காதல்வீரம் அனைத்தும் மணம் வீசும்
ஆடல் பாடல் இயல்எனும் முத்தமிழ் சங்கமமும்
ஆடாத மனதை கூட ஆட்டுவிக்கும் நாளும்

தளிர்பாடும் தமிழ்பாடும் தையலரை பாடும்
கதிர்பாடும் சதிர்பாடும் புதிர்போட்டும்பாடும்
ஏர்பாடும் போர்பாடும் ஏழையரை பாடும்
உறவு பாடும் பிரிவுபாடும் உறங்கிடவும் பாடும்

நீர்பாடும் நீதிபாடும் நீத்தாரயும் பாடும்
நிலமகள் கவிதாகம் தீர்க்கப் பாட்டு பாடும்
கலைமகள் புதிதாக பூக்கப் பாட்டு பாடும்
நினைக்கும் முன்னே ஆசுகவி நிதம் நிதமும் பாடும்

எத்தனையோ இசைபாடல் கணக்கிலாது பாடி
என்னருமை தமிழ்நாட்டில் இருந்தகவி ஓடி
எல்லைதாண்டி அமெரிக்க மண்ணில்கண் மூடி
எப்பொழுதும் சிரித்த்முகம் எரிததனலுள் போச்சே

கண்ணே கலைமானே கடைசியாகப் பாடி
காலதேவன் கோட்டையிலும் கவிபாட நாடி
காவியததாய் பெற்றமகன் இளையமகன் போனான்
கவிவானில் நிகரின்றி நிரந்தரமாய் ஆனான்

-பட்டுக்கோட்டை கவிப்பிரியன்

தலைவியின் ஏக்கம்

(இலக்கியக் காதல்)

வெண்ணிலவோ வானெழுந்து காயுதே - காணும்
வேளை யெந்தன் நெஞ்சில் ஏக்கம் கூடுதே
கண்சிவந்து நீர் தெறித்து வீழுதே - தோன்றும்
காட்சிமாறிக் கற்பனை என்றானதே
பெண்ணிவள் தன் னுள்ளம் கொண்ட அன்பையும் - காதற்
போரில் இன்று தோல்விகொள்ள வைத்ததேன்
தண்மை கொண்ட வானுலாவும் திங்களும் - வந்து
தங்கமேனி துன்பம் கொள்ளச் செய்யுதே?



மன்னவன்நின் மாற்றமென்ன என்நிலை - என்றும்
மாறுமென்ப தில்லை மாலைப் பூக்களும்
கன்னியென்னைக் கண்டு நகை த்தாடுதே - இவள்
கானகத்து வண்டு கூடும் பூவென்றே
தின்று தேனை விட்டு ஏகும் வண்டவன் - என்று
தென்றல் நின்னை கேலி காதில் சொல்லுதே
நின் அணைப்பில் நிந்தனைகள் மாறிடும் - அந்த
நேரமான தெந்த நாளில் கூடிடும்

சொன்ன தென்ன நான்மலர்கள் சூடவும்- அன்று
சுற்றி வந்து கோபுரத்தின் வீதியில்
நின்ற போது நிர்மலத்து வானிலே - இந்த
நேசப்பொன் நிலாவும் காயும் வேளையில்
பொன்னெடுத்து வார்த்த சிற்பம் நீ யென்றாய் - பக்கம்
புன்னகைத்து வார்த்தை ஜாலம் செய்ததை
என்னகத்தில் நம்பி யுன்னைச் சார்ந்தவள் - நானும்
எண்ணியன்பு கொண்டதென்ன மாயமோ

உன்மதத்தைக் கொண்டு சென்ற நாளிதில் - நானும்
என்மனத்தில் எண்ணிக் கொள்ளும் வேதனை
வன்மைகொண்டு என்முகத்தில் காணுதே - கோபம்

வண்ணமென் சிரிப்பை நீக்கி கொள்ளுதே
என்னடி சினந்து கொள்வ தேனிது - என்று
என்னுடை நற் பாங்கியர்கள் கேட்பதும்
கன்னமீதில் நீரை ஓடிக் காயவும் - செய்யும்
காட்சியை நினைத்து முள்ளம்வேகுதே!

-கிரிகாசன்

அம்மாவின் தாலாட்டு

ஆராரோ ஆரிவரோ ஆரிவரோ ஆராரோ
கண்மணியே கண்ணுறங்கு கற்கண்டே கண்ணுறங்கு
ஆரடித்து நீயழுதாய் அடித்தவரை சொல்லியழு
பசித்து அழுதாயோ பாலுக்கு அழுதாயோ (ஆராரோ)

மாமன் அடித்தானோ மல்லிகை செண்டாலே
அத்தை அடித்தாளோ அமுதூட்டும் கையாலே
பாட்டி அடித்தாளோ பாலூட்டும் கையாலே
அண்ணன் அடித்தானோ அலரிச்செண்டாலே (ஆராரோ)

தங்க தொட்டிலிலே தவறாம போட்டிடுவேன்
தங்கமே கண்ணுறங்கு திரவியமே கண்ணுறங்கு
பொன்னூஞ்சல் கட்டியுன்னை மாமன் போட்டாட்டிடுவான்
பட்டு சட்டை போட்டு பாசமழை பொழிந்திடுவான் (ஆராரோ)

குழந்தையின் பாராட்டு

தாலாட்டு வேண்டாம் அம்மா தாயே நீ போயுறங்கு
நீயாரோ நானாரோ உன்தன் பெயர் ஏதோ
அம்மா என்பதுவும் நீ சொல்லி தானறிவேன்
அழுதழுது உறங்கிடுவேன் அம்மா நீபோயுறங்கு

பசித்து அழவில்லை பாலுக்கு அழவில்லை
பச்சை பிள்ளைகளை இச்சை கொண்டு பாழ்படுத்தும்
பாலியல் தொந்தரவை எண்ணி நான் அழுகின்றேன்
வந்த வழி போய் விடவோ என்றெண்ணி அழுகின்றேன் (அம்மா நீ)

தாளவில்லையம்மா தரணியை எண்ணியதும்
என்னை தணிய விடு தாயே தனியவிடு
யாரும் அடித்தாலும் வலிக்க வில்லை அம்மா
வலிகள் தாங்கவில்லை வஞ்சனைகள் செய்தாலே (அம்மா நீ)

வயிற்றினில் வாழும் போதே வானலையில் கேட்டேனே
வாய் மொழிய வழியில்லை வாழ்வை எண்ணி அழுகின்றேன்
தரணியிலே நானுறங்க தாயே நீ பாடுகிறாய்
தரணியே உறங்கிடுமோ என்றெண்ணி அழுகின்றேன்

புட்டிப்பால் தருவாயோ புறக்கணித்து விடுவாயோ
என்றெண்ணி அழுகின்றேன் அம்மா நீ போயுறங்கு
நிலாச் சோறு ஊட்டிடவே தாயே நீ இருப்பாயா
தந்தை மடி தவழ்ந்திடவே தடை ஏதும் இருக்காதே (அம்மா நீ)

காலன் உனையழைத்தால் காலமெல்லாம் இருளம்மா
தாய் தந்தை இல்லை என்றால் தலையில் குட்டிடுவர்
உற்றவர் இல்லை என்றால் நற்றவமே இல்லையம்மா
நாதியற்று போய் விடுவேன் என்றெண்ணி அழுகின்றேன்(அம்மா நீ)

பேய் என்று சொல்லி என்னை பேய்க்காட்டி போடுவரே
வீரம் செறியாமல் வெருட்டி வளர்த்திடுவர்
வேண்டிய வேலை எல்லாம் தயங்காமல் வேண்டிடுவர்.வீதியில்
விட்டு கல்வியை நிறுத்திடுவர் என்றெண்ணி அழுகின்றேன் (அம்மாநீ)

செங்கல்லு சாலையில செத்து மடிவேனோ
பட்டாசு சாலையிலே வாசம் இன்றி வாழ்வேனோ
தீக்குச்சி பெட்டியிலே பிஞ்சு விரல் தோணுதின்னு பார்த்தவர்கள்
சொன்னார்கள் எண்ணியதை அழுகின்றேன் (அம்மா நீ)

எந்நாடு என்றாலோ தஞ்சம் புகுந்த
இடம் தயக்கமின்றி சொல்லிடவோ
தாய் திருநாடதனை தவிப்போடு மொழிந்திடவோ
என்றெண்ணி அழுகின்றேன் அம்மா நீ போய் உறங்கு (அம்மா நீ)

சக்தி இல்லை எனில் சிவமே இல்லை என்றார்
பெண்ணே இல்லை என்றால் பூலோகம் ஏது அம்மா
பெண்பிள்ளை வேண்டாமென பெண்ணே
வெறுப்பதனை எண்ணி நான் அழுகின்றேன் (அம்மா நீ)

பொல்லாத உலகம் அம்மா போய் விடவோ வந்தவழி
பாரிவள்ளல் வாழ்ந்ததையும் மன்னுயிர் காத்திடவே
தன்னுயிரை ஈந்த சிபி மைந்தனை தேர்காலில் இட்ட
மனு நீதிகண்ட சோழனையும் எண்ணி மகிழ்ந்திடவோ (அம்மா நீ)

மாசுபடும் காற்று, மழை, ஆறு, கடலதனை
எண்ணி அழுவேனோ வாய்மை காத்திடவே
கட்டியமனைவி அருமை புதல்வனையும் நட்டாற்றில் விட்ட
அந்த மகராசன் அரிச்சந்திரனை எண்ணி மகிழ்ந்திடவோ(அம்மா நீ)

முக்காலமும் உணர்ந்த முனிவர்களும், வேதங்கள் கற்றுணர்ந்த
ஞானிகளும், தன்னிகரில்லா புருஷர்களும்,பன்னாட்டு வேந்தர்களும்
வீற்றிருந்த சபைதனிலே பாஞ்சாலி துகிலுரிய பார்த்திருந்த
கொடுமைதனை எண்ணி நான் அழுகின்றேன் (அம்மா நீ)

வலிமை மிக்க சீதையவள் வாய்மொழியே போதும் அந்த
வல்லரக்கன் ராவணனை பூண்டோடு அழித்திடவே புஜபலம் கொண்ட
ஸ்ரீராமரது வில்லுக்கு வருமே களங்கமென வாளாதிருந்தவளை
வக்கணையாய் பேசிய உலகை எண்ணி அழுகின்றேன்.(அம்மா நீ)

நாயன்மார் காலத்திலும் கண்டது இத் துன்பம்
ஆண்டவனே வந்தாலும் கொள்வது திண்ணம்
மண்ணின் மகிமை இது போலும் விதிக்கு தப்பார் மதியாலும்
கருணை என்பது கடல் போன்றது கிடைக்கும் என்றாலும் கிடைக்காதது.

வழிபாடும் பூஜைகளும் அனுதினமும் நடக்கிறது
ஆண்டவனோ ஆலயத்தில் அசையாமல் அமைதியே
காக்கின்றான் கண்கள் மட்டும் திறந்திருக்கு பார்வையை
தான் தொலைத்து விட்டான் என்றெண்ணிஅழுகின்றேன்.

விதி மீது பழி போட்டு வேதனையில் வாடுகிறோம்
சொர்க்கதையே தேடுகிறோம் என்றெண்ணி அழுகின்றேன்
பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டுகின்ற
கண்ணனவன் கைங்கரியம் எண்ணி நான் அழுகின்றேன்(அம்மா நீ)

- இனியா

மகிழும் உள்ளம் நலம் காண உதவும்

மலர்களே மௌனமா
மனதிலே பாரமா
இல்லையேல் ஈரமா
தன்மையில் மாற்றம் இல்லையே
மழை வந்த போதும்
நிறம் மாறவில்லை
புயல் வந்த போதும்
மணம் வேறு இல்லை

நதி மீது போனாலும்
சதி செய்யவில்லை
மிதிபட்டு கிடந்தாலும்
கதிகலங்க வில்லை

குளிர் கொண்டபோதும்
குறைகாண வில்லை
தீயிலே வெந்தாலும்
சினம் கொள்ள வில்லை

பழிவாங்க ஒருபோதும்
பதம் பார்க்க வில்லை
வழியின்றி ஒரு போதும்
விழவில்லை காலில்

நிமிடம் ஒரு நிறமும்
நிலையில்லா மனமும் கொண்டு
மனிதரை மனிதர் தினம்
வருத்துவதே தலையாய தொண்டு

முன்னாடி சிரித்திடுவர்
வாழ்வை பின்னாடி சிதைத்திடுவர்
நாம் கருணை உள்ளவர் என்பர்
கொலை களவும் செய்திடுவர்

தினம் ஒரு கவலை
கொள்ளும் மனமே
தீராத நோய்கள் வந்து
சேரும் வருத்தும் உனையே

தித்திக்கும் எண்ணங்கள்
கொண்டாலும்
அன்பான இதயங்கள் கண்டாலும்
துன்பங்கள் சருகாகும் உடனும்
மகிழும்உள்ளம் நலம் காண உதவும்

- **இனியா**

கரும்புகை..

- விமலன்

இடது கையில் பச்சை நரம்பு ஓடித்தெரிகிற சுமதியக்கா இன்று சற்று தாமத மாகத்தான் டீக்கொண்டு வருகிறாள்.

காலை ,மதியம் மாலை மூன்று வேளையுமாய் அவளது கடையிலி ந் துதான் டீ. டீ என்றால் டீ மட்டும் இல்லை.கூடவே அன்பும் கலந்து/

"சார் வேலை கெடக்கும் நாள்பூராம்,அதுக்காக மொதல்ல வச்ச டீய எடுத்து சாப்புட்டுக்கங்க, ஆறிப்போறதுக்குள்ள என்கிறவள்,நம்ம பாடு என்னைக்கு கொறைய என் னைக்கு நம்ம ஒடம்ப கவனிக்க? மொதல்ல என்பாள் அன்பொழுக/

சின்னதும் பெரியதுமான இரண்டு முட்களும்,விநாடி முள் ஒன்றுமாய் ஒன்றுடன் ஒன்றாய் கூட்டு வைத்து நேரமறிவிக்கும் வட்ட வடிவ கடிகாரம் மணி மதியம் 12.30எனச்சொல்லிச்செல்கிறவேளையில் கையில் தூக்கு சுமந்து டீக் கொண்டு வருகிறாள்.

மேலாளருக்கு,கிளார்க்குக்கு,கடை நிலை ஊழியருக்கு மற்றும் இவனுக்கு என தூக்கில் காட்சிப்பட்டு வருகிறவற்றில் இவனது பங்கு எப்பொழுதுமே டீ யாகவே இருந்திருக்கிறது."

"என்னக்கா இன்னைக்கு மறந்துட்டீங்களா இல்லைன்னா வேறெதுனாவது வேலையாப் போயிட்டீங்களா?"எனத்துவங்கிய கேள்விமுடிவு றும் முன்பாகவே அதே பேச்சின் இறுதி முடிப்பிலேயெ முடியிட்டு விடுகிறது அவளது பேச்சு.

இவனுக்குத்தெரிய சாருமதியக்கா இப்படிப்பேசுவாள். ஆரம்ப சுகாதார நிலைய நர்சாக இருக்கிறாள்,உடல் நிலை சரியில்லை என வருகி றவர்களை பேசியேசரி பண்ணி அனுப்பிவிடுவாள் போலும்.ஆரப்பித்தால் விட மாட்டாள் லேசில்.

ஆனால் ஆரம்பிக்கத்தான் வேண்டும்.ஆரம்பித்து விட்டால் அவ்வளவு எளிதாக எல்லோரிடமும் பேசிவிட மாட் டாள்,இடம் பொருள், ஏவல் என்பதைத் தாண்டி ஆள், படை,அம்பு என்கிற ரீதியில்தான் இருக்கும் அவளது பேச்சு/ "எங்கு வேலை,இப்பொழுது என்ன சம்பளம், எவ்வளவு பிடித்தம், தொழிற் சங்கப்பணிகளில் முன்பு போல் இப்பொழுது மும்பரம் காட்டுவது உண்டா? உங்களது தொழிற்சங்கத் தலைவர் யார்,இப்பிடி சங்கம் கொடி கோஷம் என அலைந்தால் வீட்டை கவனிப்பது யார்? சுகர் இப்பொழுது குறைந்திருக்கிறதா, பிபீ எப்படி உள்ளது ,அல்சர் என்ன சொல்கிறது? அலுவலக வேலையின் மும்பரம்,சங்க வேலையின் அலைச்சல் என உடம்பை கவனிக்க விட்டு விடாதே,சுவரை வைத்து தான், எனவும் சரி வீட்டில் பிள்ளைகளையும் வீட்டம்மாவையும்கேட்டதாகச் சொல் என்பாள். ஓங்வீட்டுக் காரிதான் ஒனக்கு மொகக் கண்ணாடி அவள வச்சுத்தான் நீயி,ஒன்னய வச்சு தான் அவளன்பாள், விட்டு றாதபோன வாரம்கூட ஒங்களுக்குள்ள ஏதோ சண்ட சத்தம்முன்னு கேள்விப் பட்டேன்,அதெல்லாம் விட்டுரு. பொம்பள எங்க போவா கோவப்படவும், ஆத்தாமய ஆத்திக்கிறதுக்கும்/ நீயும்,, புள்ளைகளும் தான அவளுக்கு, இதுக்குன்னு நூறு ரூவா சம்பளத்துக்கு ஆள் பேசிக்கொண்டு வந்து கோவப்பட முடியுமா? விடு கயிற கொஞ்சம் லூசா, ரொம்பவும்தான இறுக்கிப் பிடிக்காத,ரொம்பவும்தான் பல்லக்கடிக்காத"என்கிறரீதியாக அவள் பேசும் போது சென்ற வாரம் ஒரு நாள் வேலை நேரத்தில் வயிறு வலி வந்து அலுவலகத்தில் துடித்துக் கொண்டிருந்தது ஞாபகம் வருகிறது.

அப்பொழுது ஆபத்பாந்தவனாக வந்து இவனுக்கு காட்சி தந்ததும், இவனது வலியைகட்டுக்குள் கொண்டுவந்தவருமாய் உள்ளூர்டாக்டம் உடன் உதவிக்கு வந்த சக ஊழியர்களுமாகவேஇருக்கிறார்கள். தலைக்குப் பின் ஒளி வட்ட மேதும் சுற்றாத அந்நேரத்தைய கடவுள் அவராய்/

அவள் பேச்சை ஒட்டியது போல இருந்தது சுமதியக் காவின் பேச்சு/ இவர்களது அலுவலகத்திற்கு வழக்க மாய் டீகொண்டு வருகிறவள் சுமதியக்கா/ அலுவலகத் திலிருந்து நான்காவதாய் இருந்த வீட்டில் தான் அவளது டீக்கடை இருந்தது.ஆறுமுக வாத்தியார் வீட்டிற்கும் மல்லிகா அம்மாவின் வீட்டிற்கும் இடையிலாய்/

முதலாவதாய் இருக்கிற மல்லிகா அம்மாவின் வீட்டிற்கும், மூன்றாவதாய் இருக்கிற ஆறுமுக வாத்தியாரின் வீட்டிற்கும் இடையில் இருக்கிற வீடாய் சுமதியக்காவின் வீடு, இதில் சுமதிக்காவின் வீட்டில் கொதிக்கிற உலையின் வாசமும், குக்கர் விசில் சப்தமும் இவர்க ளின் இரண்டு பேரது வீட்டையும் தொட்டுத் திரும்பு வதாய்/

மல்லிகாஅம்மாகூடசும்மாஇருந்துவிடுவார்.ஆறுமுகவாத்தியார்தான் கிண்டலில் பேச்சை கரைப்பவராக/

“என்னம்மா நல்லாயிருக்கையா? இப்பிடி மணக்குற சாப்பாட ஏங் வீட்டுக் காரில்லாம் எனக்கு செஞ்சு போட்டா நானெல்லாம் நாலு ஜென்மத் துக்கும் அவளுக்குபுருஷனாஇருப் பேன்” என்பார் “ஆமாம் இருந்தீங்க, இருந்தீங்க நல்லா,,,,,,, அப்பறம் ஏன் பள்ளிக்கூடம் விட்டதும் வண்டி பக்கத்தூருபக்கம் தெசகாட்டுது”என்பாள்பதிலுக்கு சுமதியக்கா ஆறுமுக வாத்தியாரிடம்.

”ஆமாம் அதுதான் இப்ப கொறவா போகுதாக்கும்,அவ மாசம் முப்பது நாளும் இறுக்கிப் பொத்தீட்டு திரிஞ்சா அப்பறம் மனுசன் என்னதான் பண்ணுறது ,இதெல்லாம் ஒனக்குத்தெரியாது,நான்செய்யிறதுதான் பெருசா வந்து நிக்குது. சரி,சரி ரொம்பத்தான பேசாதீங்க,தங்கச்சி போல இருக்குற பக்கத்து வீட்டுக் காரிகிட்ட இதுவெல்லாம பேசுவீங்க”-சுமதியக்கா,

”அடவேணுமுன்னா வம்புக்கா பேசுறேன் இப்ப ஓங்கிட்ட,நீ சொன்னா அதுக்கு பதிலா நான் ஏன் தரப்பு பேச்சாச் சொல்றேன். நீங்கம்மா ஆயிரந்தான் இருந்தா லும் பொம்பளைங்க, ஒன்னுக்குள்ள ஒன்னு விட்டுக் குடுப்பீங்களா, என்கிற ஆறுமுகவாத்தியாரிடம் சரி சொல்லி வைக்கிறேன் அக்காகிட்ட நானும்,இனிமே நீங்களும் பள்ளிக்கூடம் விட்ட ஒடனே வண்டிய வீடு நோக்கி திருப்புங்க” என்பாள் சுமதியக்கா,

”சரி முயற்சி பண்றேன் திடீர்ன்னு ஒரு விஷயத்த நிறுத்த முடியாது.நீயி ஏங் ஒடம்பொறப்பு மாதிரியிருந்து சொல்லு ற கேட்டுக்கு றேன்,அது மட்டுமில்ல காரணம் நல்லசாப்பாடுன்னாஎன்னங்குறதுஇவளகட்டுனஅன்னயில இருந்து மறந்து போச்சு/அதையும் கொஞ் சம் சேத்து சொல்லு தாயி/”எனஐந்தரை அடி உயரத்தில் நின்று கொண்டு பேசுகிறஆறுமுகவாத்தியார் உட்படஅன்றாடம் கூலிக்குப் போகிறவர்களிலிருந்து, கட்டிட வேலை செய்பவர்கள் அவ்வழியே செல்கிற லாரிக்காரர்கள்எனதினக்கூலிக் காரர்களிலிருந்துவீட்டைத்துறந்தவர் வரைக்கும் சுமதிய க் காவின்கடை சமையல் கட்டிப் போட்டு விடும்.

எல்லோர் கை புழங்கும் உப்புப்புளி மிளகாய் அரிசி,பருப்பு அரசலவு இவள் கைக்கு வந்ததும் ரசவாத ருசி செய்யும் வித்தை கொண்டு விடுதாக/

வாசலில்நுழைந்ததும்முன் வராண்டாவில் பெரியதாய் ஒரு ஆட்டுக் கல்லும், அதை ஒட்டி இருந்த அடுப்படியும், ஆட்டுக்கல்லை ஒட்டி தரையில் அமர்ந்திருந்த மண்ணெண்ணெய் ஸ்டவ்வும் அதைச்சுற்றி வீசிக்கொண்டிருக்கும் மண்ணெண்ணெய் வாசனையும் ஸ்டவ்வின் மீதும் அதன் இடுக்குகளிலும் கறைபடிந்து காண்பித்த அழுக்கு மாய்/

"இல்லசார் இன்னைக்கு பள்ளிக்கூட வேலைக்கு போயிட் டேன், விடிகால நாலர மணிக்கி எழுந்திரிச் சவதா, பாத்துக்கங்க,காலையில வீட் டுப் பாட பாத்துட்டு இன்னைக்கி சனிக்கெழம வேறயா,டீப்போட்டு ஒங்களுக்கு கொண்டு வந்து குடுத்துட்டு அப்பறமா ஊர வச்ச பருப்ப ஆட்டி வடை போட்டு பள்ளிக் கூடத்துல வித்து ட்டு ஓடியாறேன் சார். இன்னும்பச்சத்தண்ணிகூட பல்லுல படல"என்றவள் சேலைத் தலை ப்பை எடுத்து முகத்தை துடைத்துக் கொள்கிறாள்.

அவளது வீட்டின் வராண்டா கடந்து மைய ஹாலின் இடது புறமாய் வைக்கப்பட்டிருந்தமர பீரோவில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த புடவை களில் ஒன்றாய் இருக்கலாம் சேலை,

"சேலை நல்லாயிருக்குக்கா ஒங்களுக்கு,ஒங்க ஒசரத்துக்கும், நெறத்துக்கும் எடுப்பா சேலை அமைஞ்சு போகு தா இல்ல எடுத்தாற்ற சேலக்குத் தகுந்தாப்புல ஒங்க அதுல ஒடம்பு பொருந்திப் போகுதான்னு தெரியலையே" என்பார்கள் சுமதியக்காவிடம் உரிமையாகப்பேசும் பெண்கள்.

ரோஸீம்,வெளிர் ரோஸீம் பார்டர் காட்டியும் வர்ணம் காட்டி பூக்களாய் சிரித்த சுவரில் பொதிந்திருந்த மின்சார மின்சார வயர்களை உட்கொண்ட பிவி சி பைப்பும், சுவிட் போர்டுகளுமாய்/

நீண்டு விரித்துப்போடப்பட்டிருந்த மரக்கவுண்டரில் ஒட்டப்பட்டிருந்த மைக் காவில் ஊடுபாவாய் தெரிந்த அவளது அவளதுமுகமும்,அவள் கொண்டு வந்துவைத்த டீயும் சார் சீக்கிரம் குடிங்க ஆறிரப்போகுது என்கிற அவளது சொல்லும் பிணைத்தே வந்தபோது அவள் பேசிய பேச்சு மிகவும் களைப்புற்று வந்தது போலவே/

வேகமாய் சூழன்றுகொண்டிருந்த காற்றாடி கூட அவளது வியர்வை யை தனித்ததாய் தெரியவில்லை.மாறாக ஒளிவெள்ளமாய் மின்னி த் தெரிகிற ட்யூப் லைட்டுகளின் வெளிச்சம் அவளது முகம் பட்டும், உடல் படர்ந்துமாய்/

இப்படியாய் புழுதியில் புரண்டெழுவதும் நன்றாகத்தான் இருக்கிறது. பெரிதாக ஒன்றும் சாதித்தெல்லாம் விடவில்லை. அழுக்கும், புழுதியும் வியர்வையும், மண்ணுமாய் கலந்துகட்டிஉறவாடுகிறநேரமாயும்,கைகோர்த்தவேளை யாயும் நகர்கிற பொழுதுகளில்தான் எனது வே லை நடக்கிறதுஅல்லதுநடக்கிறவேலை அம்மாதிரி உருக்கொள்கிற பொழுதாய்/

காலை வேலையின் இளம் வெயில் வரும் முன் சீக்கிரமாய் எழுந்து எல்லாவேலைகளையும் முடித்துக் குளித்துவிட்டு பஜார்ப்பக்கம் போய் வரலாம் என்கி றதாய் மிதந்த எண்ணத்தை நேற்றிரவின் தாமதமான தூக்கம் பொய்த்துப் போகச்செய்து விடுகிறதாய்/

காலை7.30 மணிக்குத்தான் எழுந்தேன்.இருக்கவே இருக்கிறது கம்ப்யூட்டர், இண்டர்நெட்,தேனீருடனான சிறிது நேர அமர்வு என அமர்ந்து எழுந்திருக் கையில் ஒன்பதாகிப் போகிறதாய் மணி/

அதிகமாய் ஒன்றுமில்லை.மாடியை கூட்டிவிட்டு கீழே கொல்லைப் புறத்தையும்கூட்ட வேண்டும் .உடல் வளைத்து வேலை செய்தே இரண்டு மாதங்களுக்கு மேலாகிப்போகிறது.மொட்டை மாடியிலிருந்த தண்ணீர் தொட்டியை சுத்தம் செய்த போது வேலை செய்தது ,அது கூட தலைக்கு மேல் இருந்த பிள்ளைகள்இருவர் இருந்த தால் தப்பித் தேன். அவர்களிருவரின் கைகோர்ப்பும் வேலையில் அவர்கள் காட் டிய முனைப்பும் இருந்ததா ல் ஈஸியாக இருந்தது அன்று/

ஒருமணி நேரத்திற்கும் மேலாய் ஆகிப்போனது நேரம் அன்று வாட் டர் டேங்க் சுத்தம் செய்ய/கொஞ்சம் பெரிய அளவிலாய் தெரிந்த வேறு வேறு வேலைகள், கவனச் சிதறல் ஆகிப்போன,ஆகவேண்டிய வேலைகள், கூடவே சிறிது சொம்பேறித்தனம் எனசேர்ந்து கொள்ள சுத்தம் செய்தே ரொம்பவும் நாளாகிப்போன வாட்டர் டேங்கை சுத்தம் செய்த திருப்தியுடன்இருந்த அன்றைய பொழுதி ன் நினைவுடனும் அதற்கப்புறமான உடல் உழைப்பின் உத்வேகத்துடனுமாய் விளக்கு மாறு தேடி கையிலெ டுத் து கிளம்பிய போது "பெருசா திரிச்சி கேப்பய நடப்போற மாதிரிதான்.என வலது கை குவித்து விரல்கள் மடக்கி சுழற்றி மனைவி குத்திய தாவாங்கட்டை குத்துடன் மாடிப் படி ஏறிய போது படியெங்கிலுமாய் உதிர்ந்து கிடந் த வேப்பம்,புளிய இலைக ளும் தன் மீது பட்டுப்படர்ந்த வெயிலில் கறுத்து நிழலாய் தெரிந்த அடிப்புறமும் படி முழுவதுமாய் பரவித் தெரிந்த தூசியும் அழுக்கும், படியின் ஓர விளிம்புகளில் படர்ந்து நின்ற காய்ந்து போன பாசமும் வடுவும் அதன் கைபிடிச்சுவரும் அதன் வர்ணப்பூச்சும் மனம் கொண்டதாக என சென்ற வாரம் ஞாயிறன்று இவன் செய்த

வேலை யின் விரிவை சுமதியக் காவிடம் சொல்லிக்கொண்டிருந்த பொழுதில் முகம் துடைத்த சேலையின் தலைப்பி லிருந்து பூ ஒன்று உதிர்ந்து கீழே விழுந்து விட்டதாய் எடுக்கக்குனிந்தாள்.

குனிந்தவள்குனிந்தவள்தான்.திரும்பவுமாய்எழவில்லை,எழுந்துபார்த் தால் பூ விழுந்ததாய் சொன்ன இடமும் அதை எடுக்க அவள் குனிந்த இடமும் தரை பிளந்து தெரிந்ததாய்/

பூக்கல் பதித்த தரையில் பிளவு கொண்ட இடத்தின் இரு கரை விளி ம்புகளிலும் கையூன்றி உள்ளின் உள்ளாய் எட்டிப்பார்க்கிறான். கட்ட ற்ற இருட்டில் கண்காணாது எனத்தோன்ற என்ன செய்வது எனத் தெரியாமல் பேண்ட் பாக்கெட்டில் கைவிட்டு செல்போன் எடுத்து அதிலிருந்து லைட்டை எரியச் செய்து பார்க்கிறான்.பிளவுண்ட தரை சீரற்ற வழி காண்பித்து எங்கெங்கோ செல்வதாய்/"இதன் வழி எப்படி இறங்கி எங்கு சென்றிருக்கக்கூடும் சுமதியக்கா?அப்படியே சென்றா லும் இந்த அகாலத்தில் வீட்டுப்பாடையும் பிழைப்பையும் போட்டு விட்டு எங்கே செல்கிறாள்.அதுவும் தரை துளைத்துச் செல் லும் போர்க்குழாய் போல/செல்லட்டும் செல்லட்டும் என்ன இப்பொழுது? தேடிப்போய் கூப்பிடு வந்தால் சரியாகிப் போகிறது" என்கிற எண்ணம் படர்ந்து மேலோ ங்க மேலாளரிடம் அனுமதி வாங்கிக்கொண்டு தரைபற்றிப் படர்ந்த மரவேர்களைப்பற்றிப்படர்ந்து தொங்கியும், அகல வாய் திறந்திருந்த சுவர்களின் பக்கவாட்டாய் தெரிந்த பாறைகளின் மீதுமாய் கால் வைத்து கவனமாயும் ,மிகவும் பதற்றத்துடனுமாய் இறங்குகிறான்.

சிறிதுதூரம்தான்அப்படி இறங்கியிருப்பான். நன்றாயிருந் தால் ஒரு பத்தடி அல்லது பதினைந்தடி இருக்கலாம்/ அதற்கப்புறமாய் அவன் மனம் பற்றியிருந்த பயமும் பதற்றமும் அவனை விட்டு போய் விடுகிறதாக/

அதற்கப்புறமாய் பல்லி போல் பக்கவாட்டுச்சுவர்களில் ஒட்டியவனாய் இறங்கிக் கொண்டிருக்கிறான். இடது புற விளிம்புகளிலும்,வலது புற விளிம்புகளிலும் மாறி,மாறி மிதித்து கயிற்றில் தொங்கிச்செல்ப வன் போல் லாவகமாய் இறங்கிச் செல்கிறான்.

பத்து அடி வரை இவன் கண்ணில் தட்டுப்பட்ட கேபிள் வயர்கள், மற் றும் தண்ணீர் குழாய்கள் இவைகளின் தடுப்பை விடுத்து சுதந்திரமாய் செல்வது ஈஸியாய் இருக்கிறது.பூமியின் சூடு தணிந்து பாறைகளின் வெவ்வேறான அடுக்களை தாண்டி சில்லிட்ட மண்ணையும் சொட்டி இறங்கிய தண்ணீ ரையும் தாண்டி உள் பிளந்தும் உள்ளிறிங் கியுமாய் சென்ற போது சமமாய் தரைதென்பட்டஓரிடத்தில்

வளர்ந்து நின்றசெடிகளையும்கொடிகளையும் மரங் களையும் பிளந்து சென்று பார்த்தபோது வெண்புகையை வெளியேற்றி மரம் ஒட்டி அடுப்பு எரிந் து கொண்டிருந்தது. எரிந்துகொண்டிருந்த அடுப்புகளில் ஒரு சட்டியில் பாலும், ஒரு சட்டியில் இட்லியும் வெந்து கொண்டிருந்ததாக/

இரு அடுப்புகளினுள்ளும் எரிந்து கொண்டிருந்த பச்சை மரங்களும், கனன்று கொண்டிருந்த கங்குகளும் கண் சிமிட்டி இவனை அருகில் அழைத்ததாய்/

கங்குகளில் ஒன்றிரண்டு சீராக செதுக்கப்பட்டு சம வெளியாய் தெரிந் த தரையின் மீதுமாய், தரையின் மீது வீற்றிருந்த பெஞ்சின் மீதுமாய் பட்டுத் தெரித்து அணை ந்து போயும் அணையாமல் கனன்று காத்திருப்ப தாயும்/

அணைந்து கரிதூசியாய்ப்போன கங்குகளையும்,இன்னும் அணையாத கங்கின் தூசியையும் கூட்டியவாறும், அடுப்பைக் கவனித்துக் கொண்டுமாய் சுமதியக்கா

"சார் இங்கெங்க வந்தீங்க என்றாவள் கைப்பற்றி இழுத்தவாறாய் கூட்டிப் போகிறாள். மரங்களும் செடிகளுமாய் அடர்ந்த பகுதியைக் காட்டி "போயிறாதீங்க அந்தப் பக்க மெல்லாம்,வெஷ ஜந்துக்க நடமாடுற யெடம்", எனச் சொல்லி யவாறே எரிந்து கொண்டிருந்த அடுப்பிற்கு அங்கிருந்த பச்சைமரம் ஒன்றை பாதியாய் ஒடித்து விறகாய் வைத்துவிட்டும் இட்லிக்கொப்பறையை திறந்து இட்லி வெந்து விட்டதா என ஆள்க்காட்டி விரலால் தொட்டுப்பார்த்து விட்டுமாய் "அப்பிடிஉக்காரு ங்க சார்,நாலு இட்லி எடுத்து வக்கிறேன், சாப்புட்டுப் போங்க" என்றாள். கைகழுவ தண்ணீர் கொடுத்தவள் பெஞ்சில் இலை விரித்து வைத்துவிட்டுப் போகிறாள்.போனவள் எங்குபோனாள் எதற்காகப் போனாள் என்பது தெரிய வில்லை. ஒரு மணி நேரமாகி யு ம் போனவள் திரும்ப வராததால் திடுக்கிடுப்போன இவன் எழுந்து அங்குமிங்குமாய் நடந்து கொண்டிருந்த பொழுது இவன் முன் தரை பிளந்து நின்றவர்களாய் சுமதியக்காவும்,அவளது இறந்து போன கணவரும்,இறந்து போன தம்பியுமாய் வந்து நிற்கிறார்கள்.

"என்னசார்பாக்குறீங்க,இவங்க ரெண்டு பேரும் உயிரோட இருந்தப்ப நடத்துன கடையத்தான் இப்பநான் நடத்திக்கிட்டு இருக்கேன்.அப்பிடி தனியா நின்னு நடத்துறப்ப வர்றா சங்கடத்த,கஷ்ட நஷ்டத்தப் போக்க இவங்க ஏங்கூட இருக்குறமாதிரி ஒரு மேம்ப்பட்ட நெனப்பு எனக்குள்ள/ இவுங்க ரெண்டு பேரும் அசரீரி போல ஏங்கிட்ட பேசிக்கிருவாங்க/ இந்த வாரம் பேச லேட்டாகிப் போச்சு, அதான் அவுங்களத்தேடி நானே வந்துட்டேன் புள்ளகுட்டிகள விட்டுட்டு, எனச்சொன்ன சுமதியக்கா இடது கையில் பச்சை நரம்பு ஓடித் தெரிய இட்லிகளை எடுத்து வைக்கிறாள்.

பித்ரு தோஷம் களைய
தாத்தனுக்கு பாயாசத்தோடு
படையல் சோறு இட்டு
காத்திருந்தனர் ...
உண்டு முடித்த காக்கை
அடுத்தநாளும்
கா... கா.... என கரைந்து...
காத்திருந்தது என்
தாத்தனைப் போல...

நீயின்றி சுடுகிறது என் இரவு
எங்கிருந்தோ படி வரும்
உன் குரல் ஒலியை
சற்றே இடறிப்பார்க்கிறது
உலகத்தின் சத்தம்..!

பௌர்ணமியாய் கரைந்த நிலவு
இருளென என் மார்பில்
அப்பிக் கொண்டது..
செவி வழி தீண்டல்
நீ துண்டித்தப்போது..

சத்ய பிரியா..

மதுரை.



நாங்கள் மனிதர்?

எத்தனை மனிதர்
எத்தனை முகம்
எத்தனை குணம்
எத்தனை குரூரம்

ஒரு பொம்மையைக்கூட....
கைவேறு கால்வேறு கழற்றிப்போட
மனம் பதறுகிறது.

ஒரு சைக்கிளைக்
கழற்றிப் போட்டதேபோல்
மனிதர்களைச் சிதைத்துவிடும்
குரூரத்தை
எங்களுக்கு யார் கற்றுத் தந்தார்?

விடிகாலை,
மண்வெட்டி தோளில் சாய்த்து
மண்ணைப் பொன்னாக்கிய
மனிதர் நாம்.
இன்று
மனிதர்களைப் பிளந்து கொண்டிருக்கிறோம்.

- துவாரகன்
03/2014

பைத்தியக்காரர்களின் உலகம்

இந்த உலகமே
பைத்தியக்காரர்களால் நிரம்பியிருக்கிறது.

மனிதர்களை ஆட்டுவிக்கும்
அதிகாரிகளும் ஆயுததாரிகளும்
ஆகச் சிறந்த பைத்தியக்காரர்கள்.
பணத்திற்கும் பகட்டுக்கும்
ஒரு கூட்டம் எப்போதும் பைத்தியமாக அலைகிறது.

இச்சைக்காகக் கட்டிய கச்சையை
இழக்கத் தயாராயிருக்கிறார்கள்
காணுமிடமெல்லாம் பைத்தியங்கள்.

எல்லாம் இழந்தபின்
யாரோ ஒரு நல்லவனிடம்
கடன்வாங்கிக் கொண்டுவந்த
மூவாயிரத்து நானூறு ரூபாவை
பிரயாணத்தில் யாரோ களவாடிவிட்டதாக
நாடி நரம்பு தளர்ந்து போய்
கண்கலக்கிக் கூறினானே ஒரு முதியவன்;
அந்தக் களவாணியும் ஒரு பைத்தியம்தான்.

நான் நடந்து செல்லும் ஒற்றையடிப்பாதையில்
உடல் தளர்ந்து ஓட்டடைக் குடிலில் இருந்து
ஆசையாய்க் கதைகேட்கும்
இன்னொரு முதியவளின் கண்களில்
ஒளிந்திருக்கும் அன்பைக் கண்டேன்.

எந்தக் கபடமும் அவளிடமில்லை.
அவளைப் பைத்தியம் என விரட்டும்
என்னைச் சுற்றிய உலகத்தில் இருக்கும்
எல்லாருமே பைத்தியங்கள்தான்

இப்போ நான் செய்ய வேண்டியதெல்லாம்
இந்தப் பைத்தியக்கார உலகிடம் இருந்து

என் குழந்தைகளைக் காப்பாற்றிக் கொள்வது மட்டுமே!

- **துவாரகன்**

உலகின் சதி

முகத்திரை விலகினாலும்
அகம் இன்னும் மூடியபடியே
சிறகைச் சுருக்கி
உள் துயிலும்
நொண்டிப் பறவை[போல
வாழ்வெனும் வயல்வெளியில்
நீர்க்கால்கள் வேரூன்றிய காலம்
கண்ணீரின் சகதிக்குள்
செந்நிற மலரொன்று
பிரகாசிக்கின்றது

அதன் அதீத அழகில்
அவனுக்குப் பெருமிதம்
ஏனோ நெஞ்சு நிறைய
நம்பிக்கையின் சருகுகள்!
சலனமற்ற காற்றில் மிதந்தவளாய்
தேவதை அழைக்கிறாள்
புதையல் பொதிந்த உலகம்
பார்த்துப் பார்த்துப் பூத்திருந்த
விழிகளுக்கு சதி செய்கிறது.

- சந்திரா மனோகரன், ஈரோடு.

ஓர் உள்ளம் அறியும்

வெட்ட வெளியில்
ஆளற்ற வீதியில்
வெயில் கம்பளமாய்
வியாபித்துக் கிடப்பதுபோல்
நீ என்னுள் விரிந்து கிடக்கிறாய்
பித்தனைப் போல்
யாவும் இழந்த நிலையில்
இருள் அடர்ந்த பூங்காவிற்குள் நான்

காலம் கழிந்து வீணாய்
வாழ்வு நீண்டு கிடப்பது எதற்கு?
கொடிய வேதனையின் காலம்
அலையென எழும்புகிறது
வழிப்போக்கனின் உள்ளம் யாரறிவார்?
அவன் மனமோ வெறுமையில்லை
கவிந்த மழை மேகங்களைப்போல
கவலையின் சூல் கொண்ட மனசு
நீயோ நிறைமாத பூரிப்பில்!

- சந்திரா மனோகரன், ஈரோடு.